www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 73

வள்ளுவர் ஆண்டு 2043 தை 24 செவ்வாய்க்கிழமை (07/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவே முடியாது

## யாழ்ப்பாணத்தில் சூசகமாக ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

இனப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வேண்டுகோள்களை முன்வைப்பவர்கள், ஒருபோதும் நிறைவேற்றவே முடியாதவற்றைத்தான் முன்வைக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் பேசித் தீர்த்துக் கொள்ள முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலமே தொடர்ந்து பேசிக் கொண்டேயிருக்க முடியும். அப்போதுதான் அவர்களுடைய அரசியல் வாழ்வு தொடர முடியும். அவர்களுக்குத் தெரியும் பிரச்சினைகள் தீர்ந்தால் அவர்களுக்கு பேசுவதற்கு வேறெந்த விடயங்களும் இருக்கப் போவதில்லை.

இவ்வாறு கூட்டமைப்பினர்

27



## முல்லைத்தீவில் தேர்தலை விரைவாக நடத்துங்கள்

முல்லைத்தீவு,பெப் 7

இதுவரை தேர்தல் நடத்தப்படாதுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்துமாறு கபே அமைப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

27

# கூட்டமைப்பின் முடிவில் தளர்வில்லை; சர்வதேச அழுத்தம் ஏதும் எமக்கில்லை

## தெரிவுக்குழு விடயத்தில் சுதந்திரமாகவே செயற்படுகின்றோம் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, பெப்ரவரி 7

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் பிரதிநிதிகள் பெயர்களை வழங்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வேறெந்த நாடுகளினதும் அழுத்தம் கிடையாது. இந்த விடயத்தில் கூட்டமைப்பின் செயற்பாடு மிகவும் சுதந்திரமாகவே உள்ளது. எமக்கு அழுத்தங்கள் இருப்பதாகக் கூறப்படுபவற்றை நான்



முற்றாக நிராகரிக்கின்றேன்.

- இவ்வாறு நேற்று 'உதயனுக்குத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களின் காரணமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகள் பெயர்களைத் தமிழ்க்கூட்டமைப்பு வழங்குமெனத் தகவல்கள் வெளிவந்திருப்பது குறித்துக்கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்குப் பெயர்களை வழங்குவது தொடர்பான விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு மிகவும் சுதந்திரமாகவே செயற்படுகின்றது என்பதை நான் மிகவும் தெளிவா

27

## நிக்கொட், செஞ்சிலுவை அதிகாரிகள் ஜனாதிபதியைப் புறக்கணித்தனர்



யாழ்ப்பாணம், பெப்.7

நிக்கொட் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், அயர்லாந்து செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலைக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. நிகழ்வில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகள் காலியாக இருந்தன.

அயர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய இருநாடுகளினதும் செஞ்சிலுவைச் சங்கங்களின் உதவியுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.

இவை கடந்த மூன்று மாதங்க

27

## ஊடகவியலாளர்களுக்கு கதவடைப்பு

வட மாகாண அபிவிருத்தி தொடர்பாக யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு தமிழ் ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் பெரும்பான்மையின ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினால் பலவந்தமாக வெளியேற்றப்படவும் நேர்ந்தது.

ஜனாதிபதியின் யாழ். வருகையின் போது சாவகச்சேரி, யாழ்.மத்திய கல்லூரி நிகழ்வுகளில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் செயலக் கூட்டத்துக்கு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (ந-5)

## இந்தியாவின் துணையுடன் அமெரிக்காவை முறியடிப்போம்

### இலங்கை நம்பிக்கை

கொழும்பு, பெப்.7

ஜெனிவாவில் இலங்கை அரசு தொடர்பான தீர்மானத்தை ஆதரிக்க அமெரிக்கா எடுத்து வரும் முயற்சிகளை இந்தியாவின் துணையுடன் முறியடிக்க முடியும் என்று இலங்கை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அரசு எங்கள் மீது மிகக் கடும் அழுத்தங்களை கொடுக்கிறது. ஆனால் நாங்கள் அதை சமாளித்து விடுவோம். ஏனெனில் இந்தியா எமக்கு முழுப் பக்க பலமாக இருக்கிறது'' இவ்வாறு பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த அதிகாரி ஒருவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் 27ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கிலாரி கொழும்புக்கு அறிவித்துள்ள நிலையில் அதிகாரியின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் இறுதி முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பாக அந்த நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் துணைச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கை வருவது உறுதிப்படுத்தப்படவுள்ளது. இவருடன் பொதுமக்கள் பாதுகாப்பு ஜனநாயகம் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான

27

## தமிழர்களுக்குத் தீர்வு இந்தியாவுக்கு சாதகம்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுடன் கூடிய நியாயம் வழங்கப்படுவதே இந்திய நலன்களுக்கு உகந்தது என்ற பொதுக்கருத்து இந்தியாவில் இன்று உறுதியுடன் உருவாகி வருகின்றது. தற்போது புலிகள் அழிக்கப்பட்ட நிலையில் அவர்களைப் பற்றி பேசி, தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவதை ஒத்திவைக்க முடியாது என்று இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற மனோ கணேசனுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## வவுனியாவிலும் பாஸ்போர்ட் அலுவலகம்

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வவுனியாவில் நாளை புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. அலுவலகத்தை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர். வவுனியா சுற்றுவட்ட வீதியில் திறந்து வைக்கப்படவுள்ள இந்த பிராந்திய அலுவலகத்தில் புதிதாக விண்ணப்பிக்கும் கடவுச் சீட்டுக்களை பத்துத் தினங்களில் பெற்றுக்கொள்ள முடியும். கடவுச் சீட்டுக்கான காலஎல்லையை நீடிப்பதற்கான சேவையை அன்றைய தினமே பெற்றுக்கொள்ள முடியும். வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அநுராதபுரத்திலுள்ள பிராந்திய அலுவலகத்திலேயே இது வரை காலமும் மேற்படி சேவையை பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடியார் மடம் திறந்து வைப்பு

வரலாற்று சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் சிவராத்திரி அடியார் மடம் மீண்டும் புனரமைக்கப்பட்டு இன்று நண்பகல் திறந்து வைக்கப்படவுள்ளது. முன்பு போர் காரணமாக 15 வருடங்களுக்கு சேதமடைந்த இந்த மடத்தை அடியார்களின் உதவியோடு புனரமைப்புச் செய்து இன்று சமயக்கிரியைகளோடு திறந்து வைப்பதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## தெரிவுக்குழுவில் சம்பிக்க ரணவக்க

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதியாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக எட்டப்பட வேண்டுமென ஹெல உறுமய தெரிவித்துள்ளது. சர்வதேசத்திடம் சென்று முறைப்பாடு சொல்வதனை விடவும், நாட்டின் அதிஉயர் நிர்வாக பீடமான நாடாளுமன்றில் கருத்துக்களை முன்வைப்பது முக்கியமானது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கலந்துகொள்ளாமை தொடர்பில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிப் பேரவை அமர்வுகள் போர் இடம்பெற்ற காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டன, என்று அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் வெறும் கோது அதை அமுல்படுத்தி என்ன பயன்?

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் எம்.பி.



மாகாண சபைக்கு வலுவூட்டுவதற்குப் பதிலாக எப்படி ஆளுநர்களிடம் அதிகாரங்களைக் கையளிக்க முடியும். இது ஒரு அரசியலமைப்பு ரீதியான தவறு.

கொழும்பு,பெப் 7

இலங்கைஅரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமூலம் குறைபாடுகளைக் கொண்டுள்ளது.அதற்குள் இப்போது உருப்படியாக எதுவும் இல்லை. இருந்த அனைத்தையும் அரசு எடுத்து விட்டது.

தற்போதைய சூழ்நிலையில் அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையாக அதை ஏற்றுக் கொள்ளமுடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல்தீர்வொன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசிடம் இந்தியா போன்ற நாடுகளால்வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டமூலம் ஏற்கெனவே இலங்கை அரசியலமைப்பின் ஒருபகுதியாக உள்ளது.

அதனை அமுல்படுத்துவது தொடர்பில் அரசு உண்மையான உறுதியுடன் இருந்தால், எங்களுடனான கலந்துரையாடல் தேவையில்லை. 13ஆவது திருத்தச் சட்டமூலம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

அரசு மாகாண சபைக்கு வலுவூட்டுவதற்குப் பதிலாக எப்படி ஆளுநர்களிடம் அதிகாரங்களைக் கையளிக்க முடியும். இதுவொரு அரசியலமைப்பு ரீதியான தவறு எனவும் அவர் கூறினார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டபோதிலும், தேசிய கொள்கைத் திட்டமிடல் தற்போதும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைக்குக் காணி மற்றும் பொலிஸ் மற்றும் இறை அதிகாரங்கள் தேவை. அரசு இவற்றைத் தான் வைத்துக் கொண்டால் மாகாண சபைகளின் கரங்கள் அரசியலமைப்பு ரீதியாக இறுக்கப்படும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசுடன் ஒருவருடமாக இடம்பெற்ற பேச்சுக்களில் அதிகாரப் பரவலாக்கம் குறித்து முக்கிய கலந்துரையாடல் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. தற்போதைய நிலையில் இந்த 13ஆவது திருத்தம் பயனற்றது என்றும் சுரேஷ் கூறினார். (த)

# தீவிரவாதி உருத்திரகுமாருக்கு அமெரிக்கா அடைகலமாம்

கொழும்பு, பெப்.7

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் தற்போதைய சூழ்நிலையில், நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இலங்கை மீது அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது என புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஊடுருவல்கள் நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளன என்றும் அவர் கூறினார்.

உருத்திரகுமாரன் என்ற தீவிரவாதிக்கு அடைக்கலம் கொடுத்துள்ள அமெரிக்கா, பாகிஸ்தானுக்குள் நுழைந்து ஒசாமா பின்லேடனை கொலை செய்தது. தற்போது எமக்கு அழுத்தம் கொடுக்கின்றது என கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

நான்கு காரணிகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கின்றது.

பொறுப்புக் கூறும் கடப்பாடு தொடர்பாக வழிமுறை ஒன்று அவசியம் என்ற விடயம் முதலாவதாகும்.

மீள் கட்டுமான நடவடிக்கைகளுக்கு உரிய செயற்றிட்டமொன்று அவசியம் என்பது இரண்டாவது காரணமாகும். வட மாகாணசபையை நிறுவி, ஏனைய அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்படவேண்டும் என்பது மூன்றாவது காரணியாகும். ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யவேண்டாம் என்பது நான்காவது விடயமாகும். இவற்றை அடிப்படையாகக்கொண்டே அவர்கள் எம்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர்.

இது ஒரு சுதந்திர தேசம். அரசு என்ற கோட்பாட்டுக்கிணங்க தீவிரவாதத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். அமெரிக்கா மிகவும் தவறானதொரு வேலையைச் செய்கின்றது. அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஒரு வகையான ஊடுருவல் - என்றார். (ஒ-சி)

# ஹாட்லிக்கு வந்த நாமல் உள்ளக வீதியைத் திறந்தார்

அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக வீதியைத் திறந்து வைத்தார்.

நேற்று மாலை 5.45 மணியளவில் கல்லூரிக்கு வருகை தந்த நாமல் ராஜபக்ஷவையும் அவரது குழுவினரையும் கல்லூரி அதிபர், கல்லூரி வீதிச் சந்தியில் வைத்துக் கைலாகு கொடுத்து வரவேற்றார். பாண்ட் வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டுப் பின் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக வீதியை நாமல் திறந்து வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் அதிபரின்வரவேற்புரையைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ உரையாற்றினார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-8)



சாவகச்சேரி வைத்தியசாலையில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னத்தை வடமாகாண ஆளுநர் சந்திரசிறி கையளித்தார்.

# இனவாத ஊடகங்களுக்கு நிகழ்ந்தது தெரியும்தானே?

யாழ்ப்பாணம், பெப்.7

இனவாதத்தை தூண்டும் வகையில் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டால் என்ன நடக்கும் என்பதை கடந்த காலத்தில் நாங்கள் கண்டுகொண்டோம். விமர்சிக்கும் போது அவை நியாயமாக விமர்சிக்க வேண்டும். இவ்வாறு ஊடகத்துறை மீது கடுமையாகச் சாடினார் மஹிந்த ராஜபக்ஷ.

சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இந்த நாட்டில் வெளிவருகின்ற செய்திப் பத்திரிகைகளில், இனவாதத்தை தூண்டி விடுகின்ற - பிரிவினை வாதத்தை ஏற்படுத்துகின்ற - பகைமையை ஏற்படுத்துகின்ற விதத்தில் செய்திகள் வந்தால் என்ன நடக்கும் என்பதை கடந்த காலத்திலே நாங்கள் அனுபவரீதியாகக் கண்டுகொண்டோம். ஊடகங்கள் விமர்சனங்களைச் செய்யும் போது நியாயமான முறையில் விமர்சனங்களைச் செய்ய வேண்டும். மக்களை ஒன்றுபடுத்தி வைக்க வேண்டியதுதான் ஊடகத்தின் முக்கிய பொறுப்பாக இருக்கின்றது. எனவே மதபேதம், இனவாதம், குலபேதம் எதுவுமின்றி இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்வது ஊடகத்துறையின் கடமையும் பொறுப்புமாகும். - என்றார். (ந-5)

# முல்லையில் மின் நிலையம்; திறந்தார் சம்பிக்க

**வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.**

முல்லைத்தீவு,பெப் 7

முல்லைத்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின்சார சபையின் மின்பாவனையாளர் சேவை நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட்து.மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் திறந்து வைத்தார்.

இதன் மூலம் முல்லைத் தீவுப் பகுதிக்கான மின்விநியோகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அனைத்து வசதிகளையும் அரசு படிப்படியாக செய்து கொடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

முல்லைத்தீவுத் தபாலக வீதியில் இது அமைக்கப்பட்டுள்ளது.இது போன்ற மற்றுமொரு சேவை நிலையம், கிளிநொச்சி மாவட்டத்திலும் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

# பனடோல் ஏன் கொடுக்கவில்லை?

## விசாரித்தார் ஜனாதிபதி

**வடமாகணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்களினால் தற்போதைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், பெப்.7

"சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு பனடோல் கொடுக்காது திருப்பி அனுப்பியது ஏன்?" இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் இடம்பெற்ற வடமாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது கேள்வியெழுப்பினார்.

வடமாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதில் வடமாகணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்களினால் தற்போதைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இதன்போது வீட்டுத் தேவைகள் மற்றும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் தொடர்பாகவும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன் பின்னர் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச சபைத் தலைவர்கள் பல பிரச்சினைகளை முன்வைத்தனர். வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் எஸ்.சுகிர்தன்,-அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னோடியாக மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும். வலி. வடக்கில் பெரும்பாலான பகுதிகளில் இன்னமும் மீளக்குடியமர்வு நடைபெறவில்லை. அத்துடன் வடமாகாணத்தில் தற்போது ஜனநாயகரீதியில் உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய கௌரவம் ஏனைய இடங்களில் பேணப்படுவது போன்று இங்கு பேணப்படவில்லை. அத்துடன் பிரதேசசபைகள் உரிய முறையில் இயங்குவதற்குரிய வகையில் ஆளணி வளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ அவரின் கோரிக்கைகளை கவனத்தில் கொள்வதாகத் தெரிவித்தார். அத்துடன் பெரும்பாலான பிரதேச சபைத் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் வீதி திருத்தம் தொடர்பிலும் அதிகளவில் கருத்துக்களைத் தெரிவித்தனர். [illegible] செவிமடுத்த ஜனாதிபதி, வடமாகணத்துக்கே அதிகளவான நிதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு பனடோல் வழங்கப்படாதது குறித்து ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த கேள்வியெழுப்பியதற்கு சுகாதரத் துறையினர் பனடோல் போதியளவில் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவித்தனர். அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ 'ஊடகங்கள் சில வேளை தவறான செய்திகளை வெளியிட்டிருக்கலாம்' என்று தெரிவித்தார்.

இதேவேளை நோயாளிகளுக்கு பனடோல் வழங்கப்படாதது குறித்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கட்டடத்தை திறந்து வைத்தபின்னர் மேடையில் அமர்ந்திருக்கும் போது சாவகச்சேரி வைத்தியசாலைக்கு பொறுப்பான வைத்தியரை மேடைக்கு அழைத்து அதற்கான காரணத்தை ஜனாதிபதி வினாவியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக் கூட்டத்துக்கு இறுதி நேரத்திலேயே அழைப்பு

## கலந்து கொள்ளாமைக்கான காரணத்தை விளக்குகிறார் சம்பந்தன்

கொழும்பு, பெப்.7

"வடமாகாண அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இறுதிநேர அழைப்பே கிடைத்தது. இதனால்தான் எம்மால் கலந்துகொள்ள முடியாமல் போனது. எமது உறுப்பினர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்தனர். இவ்வாறான முக்கியமான நிகழ்வுகளுக்கு முன்கூட்டியே அறிவித்தல் விடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்."

இவ்வாறு குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

வட மாகாணத்தின் அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமை குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடும் விசனம் தெரிவித்திருந்தார். "காடு மாறினாலும் புலியின் உடம்பிலுள்ள புள்ளிகள் மாறாது. கூட்டமைப்பின் செயற்பாடுகளும் இப்படித்தான் இருக்கின்றன. புலிகளைவிட மோசமாக நடந்துகொள்ளும் கூட்டமைப்பு யதார்த்தத்தை உணரவேண்டும்" என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். இது குறித்து கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் தாம் கூட்டத்துக்குச் செல்லாமைக்குரிய காரணத்தைத் தெரிவித்தார். (ந-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொருளாதார நெருக்கடியாக மாறும் அரசியல் அழுத்தங்கள்

இலங்கை அரசு தற்பொழுது அரசியல் நெருக்கடியையும், பொருளாதார நெருக்கடியையும் ஒரே வேளையில் எதிர்நோக்குகிறது.

ஒன்று - மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட கொந்தளிப்பினால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் எண்ணெய் நெருக்கடி. இரண்டாவது - ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் மிகப் பெரிதான நெருக்கடி.

இந்த இரண்டு நெருக்கடிகளுமே அமெரிக்காவினால் அல்லது அமெரிக்காவின் மறைமுக ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டவைதான். இந்த நெருக்கடிகள் அமெரிக்காவிடம் இலங்கையை மண்டியிட வைக்கக் கூடியவை என்று நோக்கர்கள் கருதுகிறார்கள்.

அமெரிக்க எதிர்ப்பாளர்களை தனது அமைச்சரவையிலும், அரசுக்குள்ளும் வைத்துக்கொண்டுள்ள ஜனாதிபதி, இந்த நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார் என்பதை ராஜதந்திர வட்டாரங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளான ஈரான், சிரியா, லிபியா ஆகியவற்றில் ஏற்பட்ட கொந்தளிப்பினால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தாழ்நில சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் தமது தொழிலைக் கைவிடும் நிலையில் உள்ளனர். வருடம் 30 கோடி கிலோ தேயிலை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. இலங்கைத் தேயிலையின் பிரதான கொள்வனவு நாடுகள் ஈரான், ஈராக், சிரியா, லிபியா. இவற்றில் ஈரான், சிரியா, லிபியாவுக்கான தேயிலை ஏற்றுமதியில், கடந்த ஆறு மாதகாலத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஈரான் மீதான அமெரிக்காவின் தடைகாரணமாக தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கான சலுகைகளை இலங்கை வங்கிகள் நிறுத்தி விட்டன.

அதேவேளை ஈரானிய மசகு எண்ணெய்யைப் பெறமுடியாது போனால், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடிவிட வேண்டிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது குறித்து முன்னரும் இப்பத்தியில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம். இந்த நெருக்கடியில் இருந்து இலங்கை அரசு விடுபடுவதற்கு, அமெரிக்காவின் சலுகைகள் என்ற வடிவில் அமைந்த உதவிகள் தேவை.

ஜெனிவாவில் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவருவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. அத்தோடு தனது நடவடிக்கையை நியாயப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பது ஒரு வகையில் தென்படுகிறது.

ஜெனிவா மாநாட்டுக்கு சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் (ஜனவரி 27ஆம் திகதி) அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு கடிதம் எழுதி இருந்தார். இலங்கைக்கு எதிராக ஜெனிவாக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம் குறித்து கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளை செயற்படுத்தும் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், ஹிலாரியின் கடிதத்துடன் அதிரடியாக, மூன்று முக்கிய புள்ளிகளை இலங்கைக்கு அனுப்புகிறது அமெரிக்கா. அவர்களில் ஒருவர் சிவிலியன் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான உதவிச் செயலாளர் மாறி ஓட்டேரா. மற்றவர் மத்திய, தென்ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் றொபேர்ட் பிளேக்.

இவர்கள் இம்மாதம் 12ஆம் திகதி இலங்கை வருகிறார்கள். போர்க் குற்றம் தொடர்பான அமெரிக்காவின் சர்வதேச நிபுணராகக் கருதப்படும் ஸ்ரீபன் ராப் இன்று திங்கட்கிழமை வருகிறார். பதினொராம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருக்க ஏற்பாடாகி இருக்கிறது. இவற்றின் மத்தியில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமெரிக்கா செல்கிறார்.

இவை எல்லாம் ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னதான ராஜதந்திர நகர்வுகள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆறு வாரகாலத்துக்குள் அமுல்செய்வதாக சுதந்திரதின விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷ கூறி இருக்கிறார். எதிர்வரும் 27ஆம் திகதி ஜெனிவாக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னராவது அரசு சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டிய தவிர்க்கமுடியாத சங்கடமான நிலை தோன்றி உள்ளது.

அரசு எதிர்நோக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் இரண்டுமே இம்மாதம் அது எதிர்நோக்கும் பெரும் சவால்கள். இதில் மிகவும் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், இந்த இரண்டு நெருக்கடிகளில் இருந்தும் மீள்வதற்கு, இலங்கைக்கு அமெரிக்காவின் உதவி தேவைப்படுவதுதான். இன்னும் ஒருவிதத்தில் கூறுவதென்றால், இலங்கை மீதான அமெரிக்கப்பிடி இறுகுகிறது.

ஐ.நாவின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கை அரசு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஏதோ ஒரு வழியில், வகையில் பதில் சொல்லப்படும் என்று வெளிநாடுகளை, குறிப்பாக மேற்குலக நாடுகளை நம்பவைக்க முயற்சித்த போதிலும்-

அவை திருப்திப்படும் வகையில் அந்த அறிக்கை அமையாதிருப்பதும் இப்போது புதிதாக முளைத்துள்ள, அரசு எதிர்கொள்ள நேரிட்டுள்ள, அனுபவிக்க உள்ள துன்பங்களுக்குக் காரணம் என்பதனை உணர்த்தவும் சர்வதேச நாடுகள் முனைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இப்போது உண்டாகியுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்குத் தாக்குப்பிடிக்கும் அல்லது சமாளித்து மேலெழும் வல்லமை எமது அரசுக்கு உண்டா என்பதனை இப்போது உருவாகியுள்ள நெருக்கடிகள் இலங்கைக்கு வெறும் அமிலச் சோதனையாக மட்டும் அமையும் என்று எண்ணுவதற்கு முடியவில்லை.

இப்போதைய நெருக்குவாரங்களின் அல்லது அழுத்தங்களின் கனதி அதிகரிக்குமே அன்றி குறையும் என்று எதிர்பார்க்க முடியாது. மணலுக்குள் தலையைப் புதைக்கும் தீக்கோழியாக மாற நினைத்தாலும் கூட, அதுவும் இலங்கை அரசு இப்போது சிக்குண்டுள்ள நெருக்கடிகளில் இருந்து தப்புவது கடினமான காரியமாகவே அமையும்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை மக்கள் பயப்படத் தேவை இல்லை. அவற்றுக்கு முகம் கொடுக்க அரசு தயார் என்று கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியா, பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் இந்நாட்டு அமைச்சர் வீம்பு பேசியது ஞாபகத்துக்கு வருகிறது. தனக்கு ஆதரவான நாடுகளின் ஆதரவோடு, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் (இந்த மாத) மாநாட்டில் முறியடித்து விடலாம் என்று அரசு பெருநம்பிக்கை கொண்டிருந்தது.

ஆனால், இப்போது அரசியல் ரீதியான நெருக்கடியை மட்டுமன்றி, பொருளாதார நெருக்கடியையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இரட்டிப்புச் சோதனையின் வீரியத்திலிருந்து தப்புவதற்கு புதிய உபாயங்களையும் உத்திகளையும் கைக்கொள்ளக்கூடிய சக்தி, பெருவலு எவ்வாறு, எங்கிருந்து வருமோ? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். பார்ப்போமே!

# 101 பாடசாலைகள் இதுவரை வடக்கில் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், பெப்.7

வடமாகணத்திலுள்ள ஆயிரத்து 38 பாடசாலைகளில் 101 பாடசாலைகள் இதுவரை இயங்கவில்லை என வடமாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கும் போதே ஆளுநர் இந்த புள்ளி விவரங்களை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் 495 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 430 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. 65 பாடசாலைகள் இயங்க ஆரம்பிக்கவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரு கல்வி வலயத்தில் 107 பாடசாலைகள் உள்ளன. 97 பாடசாலைகள் இயங்குகின்றன. 10 பாடசாலைகள் இன்னும் இயங்க வில்லை.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்திலுள்ள 2 கல்வி வலயங்களில் 115 பாடசாலைகள் உள்ளன. 99 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இதில் 18 பாடசாலைகள் இயங்கவில்லை.

மன்னார் மாவட்டத்திலுள்ள 2 கல்வி வலயத்திள்ள 126 பாடசாலைகளில் 118 பாடசாலைகள் இயங்குகின்றன. 8 பாடசாலைகள் இயங்கவில்லை.

வவுனியா மாவட்டத்திலுள்ள 2 கல்வி வலயங்களிலுள்ள 195 பாடசாலைகளும் இயங்குகின்றன.

இந்தத் தகவலை ஆளுநர் இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

கடந்த யுத்தத்தின் காரணமாக செயலிழந்த பாடசாலைகளை மிக விரைவாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார் ஆளுநர். (த-14)

# ஜனவரி மாதத்தில் மட்டும் 600 உரிமை மீறல் முறைப்பாடு

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,பெப்.7

இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே 600 மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் உயர்நீதிபதி பிரியந்த பெரேரா இது பற்றி தெரிவிக்கையில்,

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக 203 முறைப்பாடுகளும், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்ந்துக் கொள்வதில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பான 75 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றார்.

அத்துடன் 66 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு வகையான 256 முறைப்பாடுகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுள் 32 வரையான முறைப்பாடுகளை ஆணைக்குழுவின் கீழ் விசாரிப்பதற்கான அதிகாரிஙம் இல்லையென்பதால் அவற்றை உரிய பிரிவுகளிடம் கையளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சரா சரியாக 2 ஆயிரம் முறைப்பாடுகள் வரை கிடைத்திருந்ததாகவும் அந்த முறைப்பாடுகளில் பெரும்பாலனவற்றின் விசாரணைச் செயற்பாடுகள் முடிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(த-22)

# ஜி.பி.எஸ் தொழில் நுட்பத்துடன் அநுராதபுரத்தில் பஸ்சேவைகள்

கொழும்பு,பெப்.7

இலங்கையில் முதற்தடவையாக ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் அநுராதபுரம் பஸ் சேவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பத்துடன் 34 பஸ்சேவைகள் அனுராதபுரம் நகரத்திலிருந்து கிராமப்புறங்களுக்கு நடத்தப்படுகின்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறை இணைந்து கிராமப்புறப் பயணங்களுக்காக 24 போக்கு வரத்துச் சேவைகளையும் பாடசாலை மாணவர்களுக்காக 10 போக்குவரத்துச் சேவைகளையும் மேற்கொண்டுள்ளன.

இந்த ஜி.பி.எஸ் தொழில் நுட்பத்தின் மூலம் பயணிகள் பஸ் சென்றுகொண்டிருக்கும் இடம் மற்றும் அது பயணித்துச் செல்லும் திசை என்பவற்றை கட்டுப்பாட்டு அறையிலிருந்தவாறே கண்காணிக்க முடிவதும் அவற்றை நிர்வகிக்கும் ஒழுங்குகளையும் முறைப்படியாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் மக்களுக்கு முறையான, பாதுகாப்பான சேவையொன்றை வழங்குவதே அரசின் குறிக்கோளாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்வு, தனியார் துறை போக்குவரத்து அமைச்சரான சீ.பீ ரத்நாயக்கவினால் கடந்த ஜனவரி 30 ஆம் திகதி அநுராதபுரத்திலுள்ள பழைய பஸ் நிலையத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(த-22)

# வெளியே நின்ற உத்தியோகத்தர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதி திறப்பு விழாவுக்கு ஜனாதிபதியின் வருகையையிட்டு கிராம அலுவலர்கள் மற்றும் அரசதரப்பு உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை.

ஜனாதிபதியின் வருகைக்காக வைத்தியசாலை வளாகத்துக்கு வந்தவர்கள் அழைப்பிதழ் இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இருக்கைகள் இல்லாத நிலையில் நிகழ்வுகளைப் பார்வையிட்டனர்.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பிய போதிலும் கிராம அலுவலர்கள் மற்றும் சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பாததது திட்டமிட்ட செயல் எனக் கருதப்படுகிறது. (ம-9)

# நிகழ்வுகள் இன்று

### திறப்பு விழா

காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தின் அலங்கார வளைவு திறப்பு விழா முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. கலாமன்றத் தலைவர் என். சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் திருமதி வி.தருமரட்ணம் கலந்துகொள்வார். (த-14)

### நூல் வெளியீடு

ஆழியூர் ரதீஸனின் "ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள் நூல் வெளியீட்டு விழா காலை 9.30 மணிக்கு யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் அருட்பணி ஜே. ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் [illegible] பிள்ளை கலந்துகொள்வார். (த-23)

### கருத்தரங்கு

இலவச யோகக் கலை கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் காலை 8 மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. இதில் கலாசார மறுமலர்ச்சியாளர் ரி.சபாலிங்கம் 'யோகக்கலையின் மகத்துவம்' என்ற தலைப்பிலும், யோகோ போதனாசிரியர் எம்.இரத்தின சோதி, 'யோகா செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவர். தொடர்ந்து யோகக் கலைப் பயிற்சிப் பட்டறையும் நடைபெறும். (த-3)

### நிறுவுநர் தினம்

அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி நிறுவுநர் (அமரர்.கதிரவேலு இலட்சுமிப் பிள்ளை) தின விழாவும் புதிய மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவும் முற்பகல் 10 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும். சாவகச் சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா கலந்துகொள்வார். (த-9)

### ஒன்று கூடல்

பருத்தித்துறை ஸ்ரீ சத்திய சேவா நிலையத்தின் அன்புவார ஒன்றுகூடல் காலை 9 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

### தேர்த்தரிப்பிடம் திறப்பு விழா

அராலி வடக்கு மயிலியப்புலம் கந்தசுவாமி கோயில் தேர்தரிப்பிட மண்டபத் திறப்பு விழா இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெறவிருக்கின்றது. இதையொட்டி கலசம் வைக்கும் நிகழ்வும் சிறப்பத் தேர் திருவீதி வலம் வருவதலும் திருப்பணி தொண்டர்கள் கௌரவிப்பும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

### இல்லம் திறப்பு

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தேவராசா இல்லம் காலை 8.45 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (10)

### நோயாளர் விடுதி திறப்பு

கரவெட்டி கிராமய ஆயுர் தேவ வைத்தியத்தின் உள்ளக நோயாளர் விடுதி காலை 8 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகுமாரன் எங்கே? கோத்தபாய மழுப்பல்

கொழும்பு, பெப். 7
வடக்கில் இராணுவப்பிரசன்னம் அவசியமான ஒன்றே என்றும் மீண்டும் கடந்த காலத்துக்குத் திரும்பாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க இராணுவத் தலையீடு தொடர்ந்தும் இருக்கும் என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் குறித்து இந்திய ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு முறையாகப் பதிலளிக்காமல் அவர் மழுப்பியுள்ளார்.

'டெக்கான் குரோனிக்கல்' நாளேட்டின் செய் தியாளர் பகவான்சிங்கிற்கு கொழும்பில் நேற்றுமுன்தினம் அளித்த தனிப்பட்ட செவ்வி ஒன்றிலேயே கோத்தபாய, பாலகுமாரன் குறித்து தெளிவாகப் பதிலளிக்காமல் மழுப்பியிருக்கிறார்.

வடக்கில் அதிகளவில் படைகளைக் குவித்து இராணுவ மயப்படுத்தி வருவதாகத் தமிழ்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களையும் போன்று தான் வடக்கிலும் அவசியமான படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் கோத்தபாய கூறியுள்ளார்.

30 ஆண்டு காலப்போர் முடிவுக்கு வந்த குறுகிய காலத்துக்குள் பெரியளவிலான அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இயல்பு நிலையை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிலர் இதனை அங்கீகரிக்கவில்லை என்பது குறித்துக் கவலை வெளியிட்டுள்ள அவர், தேவையற்ற விவகாரங்கள் குறித்தே -எமக்கு எதிரான தடைகள் பற்றியே அவர்கள் பேசுகின்றனர், இது நீதியா என்றும் கோத்தபாய கேள்வி எழுப்பியுள்ளார்.

இது ஒரு சாதாரணமான கிளர்ச்சியல்ல. ஓர் உண்மையான போர். விடுதலைப் புலிகளை ஏனைய தீவிரவாத அமைப்புகளுடன் நீங்கள் ஒப்பிட முடியாது. அல் - குவைதாவுடன் கூட ஒப்பிட முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க விவகாரங்கள் எனக்குத் தெரியாது.

**பாலகுமாரன் குறித்து எனக்குத் தெரியாது**

அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா என்று எனக்குத் தெரியாது. அறியப்பட்ட பிரமுகர்களில் பெரும்பாலானோர் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டனர்.

சிலர் சரணடைந்தனர். அங்கே அனைத்துலக செஞ்சிலுவைக் குழுமற்றும் ஏனைய முகவரமைப்புகள் சரணடையும் நடவடிக்கைகளின் போது இருந்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்த கோத்தபாய ராஜபக்ஷ, உயிர் தப்பியோரையும், சரணடைந்த புலிகளையும் பொறுப்பேற்ற போர் வலயத்தில் பிரான்ஸின் எம்.எஸ்.எவ். மருத்துவக்குழுவினர், இந்திய மருத்துவக் குழுவினர் உள்ளிட்ட அனைத்துலக முகவரமைப்புகள் இருந்தன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் குறைந்தளவு படையினரே நிலைகொண்டுள்ளனர். இராணுவத் தளங்கள் காஷ்மீரில், தமிழ்நாட்டில் கூட இருக்கின்றன.

ஆனால், வடக்கில் இப்போது வீதித் தடைகள் இல்லை. சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இல்லை.

நாங்கள் சட்டம் ஒழுங்கு பணியை பொலிஸாரிடம் ஒப்படைத்து விட்டோம். தமிழ்ப் பொலிஸார் சேர்க்கப்படுகின்றனர்.

இராணுவ ஆட்சேர்ப்பை நிறுத்தியுள்ளோம். இராணுவத்தில் இருந்து ஓய்வு பெறுவோரால் ஏற்படும் வெற்றிடங்களைக் கூட நாங்கள் நிரப்பவில்லை.

போரில் வெற்றியைப் பெற்றுத் தந்த படையினரை நாம் திருப்பி அனுப்ப முடியாது. மீண்டும் கடந்த காலத்துக்குத் திரும்பாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க இராணுவத் தலையீடு இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.


## பூமியதிர்வால் இலங்கைக்கு பாதிப்பில்லை

கொழும்பு,பெப்.7
மத்திய பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள பூமியதிர்ச்சியால் இலங்கைக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய பிலிபைன்ஸில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற 6.7 ரிக்டர் அளவிலான பூமியதிர்ச்சியை அடுத்து கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் குழந்தை ஒன்று இறந்துள்ளது.

இந்தப் பூமியதிர்ச்சியால் கட்டடங்கள் பலவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பிலிபைன்ஸ் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடலுக்கு அடியில் 20 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று ஆசிய - பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையமான ஹவாய் தெரிவித்துள்ளது. (ச)



இலங்கையின் 64 ஆவது சுதந்திரதினம் கடந்த சனிக்கிழமை மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தேசியக்கொடி ஏற்றுகிறார்.

## மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

சோமாலிய கடற் கொள்ளையர்களின் பிடியில் உள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தாம் கோரியுள்ள கப்பப் பணத்தை வழங்காவிட்டால் மீனவர்களைக் கொலைசெய்யப் போவதாக சோமாலிய கடற் கொள்ளையர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கென அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை வரைகால அவகாசமும் வழங்கியிருந்தனர். கால அவகாசம் நிறைவுற் றுள்ள நிலையில் இலங்கை மீனவர்களுக்கு எதுவித ஆபத்தையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை என்று மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## பிரான்ஸில் சிங்கக்கொடி பறக்காதது ஏன்?

கொழும்பு,பெப்.7
இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தன்று பிரான்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தேசியக்கொடி ஏற்றப்படாதது குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

சுதந்திரதினத்தன்று இலங்கையிலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலும் இலங்கைத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் பிரான்ஸில் உள்ள இலங்கை தூதரகத்தில் தேசியக்கொடி பறக்கவில்லை. மாறாக தூதரகத்துக்கு முன்பாக தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு எதிரான போராட்டம் ஒன்றே நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழர்கள், இலங்கையில் தமிழர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்படுவதாகத் தெரிவிக்கும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பிரான்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சுதந்திர நாளில் இலங்கை தேசியக் கொடி பறக்க விடப்படாததுக்கு பௌத்த பிக்குகளும் சிங்கள அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (ச)

## இலங்கைப் புலனாய்வுப் பிரிவால் அமெரிக்க மாணவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.7
இலங்கைக்கு வந்துள்ள வேர்ஜினியா பல்கலைக் கழகத்தின் சட்டவியல் மாணவர்கள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சினால் எச்சரிக்கப்பட்ட விடயம் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இவர்களது பயணத்தின் போது, இலங்கையிலுள்ள சட்டத்தரணிகள், நீதிபதிகள், தன்னார்வலர்கள், முகாம்களில் இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள், உயர்நிலை அரச அதிகாரிகள், உயர்நிலை படை அதிகாரிகள், துன்புறுத்தப்பட்ட மக்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

அமெரிக்க சட்டக் கல்லூரி மாணவர்களின் இந்த நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது, குறித்த மாணவர்களை அழைத்த பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர்.

யாருடன் வேண்டுமென்றாலும் பேசலாம் ஆனால் சரியானவர்களுடன் பேசுவதை மட்டுமே தாங்கள் விரும்புவதாக பாதுகாப்புத் துறை அமைச்சின் புலனாய்வாளர்களால் அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கப்பட்டனராம்.

இந்தநிலையில், தங்களுக்கு நடந்த இந்த அனுபவத்தின் ஊடாக இலங்கையில் என்ன நடந்திருக்கும், நடக்கின்றது என்பதனை உணரக்கூடியுள்ளதாக உள்ளது என்று தங்களது இலங்கைக்கான பயண அறிக்கையில் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## வான்மோதி பாதசாரி சாவு

கொழும்பு,பெப்.7
வெள்ளவத்தை கடற்கரைக்குச் செல்லும் வீதியில் பாதசாரி ஒருவர் மீது மோதிவிட்டு வான் சாரதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.40 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில், வானில் மோதுண்ட நபர் உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் எட்டியாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த சுப்ரமணியம் சுரேஷ் குமார் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வான் சாரதியை கைது செய்வதற்கு வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

## 13+ சட்டத்தை எதிர்ப்பது அரசியல் சாசன மீறல்

கொழும்பு,பெப்.7
13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை எதிர்ப்பதானது அரசியல் சாசனத்தைமீறும் நடவடிக்கையாகும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளையில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்றாகும்.

சகல விடயங்களையும் எதிர்க்கும் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இவ்வாறான நடவடிக்கை நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

**13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அரசியல் சாசனத்தின் ஓர் அங்கம். அதனை எதிர்ப்பது அர்த்தமற்றது என்று வெளி நாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தெரிவித்தார்.**

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அரசியல் சாசனத்தின் ஓர் அங்கம். அதனை எதிர்ப்பது அர்த்தமற்றது.

இதேவேளை, சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த [illegible] திட்டங்களை முறியடிக்க முடியும்- என்றார். (ச)

## வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடும் பொம்மையல்ல மஹிந்த

கொழும்பு,பெப்.7
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடுகின்ற பொம்மை அல்ல என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹிங்குராகொடவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு எந்தவொரு ஏகாதிபத்திய நாட்டுக்கோ, அமைப்புக்கோ ஒருபோதும் அடிமையாகாது.

மனித உரிமைகளின் பெயராலும், வெவ்வேறு ஆணைக் குழுக்கள் ஊடாகவும், ஐக்கிய நாடுகள் சபை மூலமும் எம்மீது அழுத்தம் பிரயோகிக்க முடியுமென புலிகளின் ஆதரவாளர்கள் அனைத்துலக மட்டத்தில் வெவ்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை எந்த நாட்டுக்கும் அடிமைப்பட்டது அல்ல. இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட சுதந்திரமான ஒரு நாடு - என்றார். (ச)

## மண் சரிவு அபாயத்தால் வீதிக்கு மூடுவிழா

கண்டி,பெப்.7
மண்சரிவு அபாயம் காரணமாக கண்டி - மஹியங்கனை வீதியின் 18 ஆம் வளைவுப் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக இந்த வீதியின் 52 ஆவது மைல் கல்லுக்கு அருகில் மண்சரிவு அபாயம் நிலவுவதால் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் - வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் வந்துபோனார் ஜனாதிபதி மஹிந்த



யாழ்ப்பாணம், பெப்.7

ஜனாதிபதி மஹிந்தவின் வருகையை முன்னிட்டு குடாநாடு முழுவதும் நேற்று பெரும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நீச்சல் தடாகத்தைத் திறந்து வைக்க ஜனாதிபதி வருகை தந்தமையால் அதற்கு முன்னதாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பெருமளவு பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

**ஆசிரியர்களுக்கு நேர்ந்த அவலம்**

இந்த நிலையில் பாடசாலைகளுக்குச் சென்ற ஆசிரியர்கள் கொண்டு சென்ற மதிய உணவுப் பொதிகள் கூட விரித்துக் கிளறப்பட்டுச் சோதனை செய்யப்பட்டன.

பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் மோட்டார் சைக்கிள் படையணியினர் முகங்களை மறைத்தவாறு காணப்பட்டனர்.

**நீதிமன்றுக்கு சென்றோரும் அவலம்**

இந்தப் பாதுகாப்புக் கெடுபிடி காரணமாக நீதிமன்றுக்குச் சென்ற பொதுமக்கள் பாதுகாப்புத் தரிப்பிடத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களை விடவும் அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை, பொலிஸாரில் ஒரு சிலர் மத்திய கல்லூரி மைதானத்தில் வாகனங்களை விட அனுமதித்த போதும் மற்றும் சிலர் இதற்கு அனுமதிக்காது திருப்பி அனுப்பினர் எனவும் பாதிக்கப்பட்டோர் விசனம் கூறினர்.

**சாவகச்சேரியில்**

ஜனாதிபதி சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிய கட்டடங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொள்ள இருந்தமையை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவிரவாக ஆஸ்பத்திரி வீதிக்குக் 'காப்பெற்' போடப்பட்டது. அத்துடன் சாவகச்சேரிச் சந்தியில் இருந்து வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் பாதுகாப்புக் கெடுபிடிகள் நிலவின.

**வேடிக்கைதான் இது**

இதேவேளை, சாவகச்சேரி திறப்பு விழா நிகழ்வில் யாழ். அரச அதிபர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர், சாவகச்சேரி நகர சபை, பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் பார்வையாளர்களாக அமர்ந்திருக்க யாழ். மாநகர முதல்வருக்கு மட்டும் மேடையில் இடம் ஒதுக்கப்பட்டு அவர் அங்கு அமர்ந்திருந்தார்.

**மதகுருமாரின் நிலை**

மேடையில் சர்வமதக் குருமாரும் அமர்ந்திருந்த போதும் இவர்களில் பௌத்த மதகுருவுக்கு மாத்திரம் அதிகௌரவம் வழங்கப்பட்டிருந்தது ஏனைய மக்களிடையே விசனத்தைத் தோற்றுவித்தது. (ம-4-5)

## மக்களுக்காக முழுநேர சேவை

தென்மராட்சி, பெப்.7

நீண்ட கால இடைவெளிக்கு பின்னர் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை முழு நேர வைத்தியசாலையாக இயங்குவது குறித்து அப் பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

மன்னார் அடம்பன் வைத்தியசாலையில் கடமையாற்றி கடந்த மாதம் இடமாற்றம் பெற்று வந்த உதவி வைத்திய அதிகாரி திருமதி குமுதினி பாஸ்கரன் கடமைகளைப் பொறுப் பேற்ற பின்னர் 24 மணி நேர சேவைகளை வழங்கி வருவதால் மக்கள் தமது வைத்திய சேவைகளை சிரமமின்றிப் பெற்று வருகின்றனர்.

இங்கிருந்த அம்புலன்ஸ் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திருத்த வேலைக்காக கொண்டு செல்லப்பட்டு இதுவரை வழங்கப்பட வில்லை.

இந்த அம்புலன்ஸ் வந்ததும் மேலும் சேவைகள் பெற முடியமெனவும் மக்கள் தெரிவித்தனர். (ம-9)

## ஏமாற்றமே மிஞ்சியது

தென்மராட்சி, பெப்.7

மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் ஜனாதிபதியிடமிருந்து வாங்குவதற்குக் காலை 8மணி தொடக்கம் ஆவலுடன் காத்திருந்த 500 இற்கு மேற்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களும் சுகாதாரக் தொண்டர்களும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ஜப்பானிய நிறுவனமொன்றினால் மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் போசாக்குச் செயற்திட்டத்தில் பணியாற்றுபவர்களுக்கு வழங்கவென 200 மோட்டார் சைக்கிள்களும் 300 இற்கு மேற்பட்ட சைக்கிள்களும் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வெளியிடப்பட்ட அழைப்பிதழில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் கையளித்தலும் பிரசுரமாகியிருந்தது.

இதனால் இந்தத் திட்டத்தில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் தொண்டர்களும் காலையில் வந்து மண்டபத்தில் தங்கியிருந்தனர்.

> ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வெளியிடப்பட்ட அழைப்பிதழில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் கையளித்தலும் பிரசுரமாகியிருந்தது.

நிகழ்வில் ஜனாதிபதியின் உரை முடிந்ததும் ஆளுநரின் நன்றியுரை இடம்பெறாத நிலையில் கூட்டம் முடிந்தது.

இதனால் சைக்கிள் பெற வந்தவர்கள் ஏமாற்றமடைந்த போதிலும் பின்னர் அவை சுகாதார திணைக்கள அதிகாரிகளால் இவர்களுக்கு கையளிக்கப்பட்டன. (ம-9)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி கட்டடங்களை மஹிந்த நேற்றுத் திறந்து வைத்தார்

தென்மராட்சி, பெப்.7

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 156 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு விடுதிகள் மற்றும் வைத்திய அதிகாரிகள் வதிவிடங்கள் ஆகியவை நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

> வாகனத்தில் வந்திறங் கிய ஜனாதிபதிக்கு மங்கள ஆராத்தி எடுக்கப்பட்ட பின்னர் மங்கல வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

முற்பகல் 10.10 மணிக்கு வைத்தியசாலை வளாகத்துக்கு வாகனத்தில் வந்திறங்கிய ஜனாதிபதிக்கு மங்கள ஆராத்தி எடுக்கப்பட்ட பின்னர் மங்கல வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். விடுதிகளின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லினை திரை நீக்கம் செய்த பின்னர் விடுதிகளை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, முருகேசு சந்திரகுமார், யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க, யாழ். மாநகர மேயர் திருமதி யோ.பற்குணராஜா, யாழ்.பல்கலைக் கழக உபவேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா வடமாகாண பிரதம செயலர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களம் தலைவர்கள் மற்றும் தென்மராட்சி பிரதேச திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் நிகழ்த்தினார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உரையாற்றினர். வரவேற்பு நடனத்தை ஆனந்த தர்சன நர்த்தனாலய மாணவிகள் நிகழ்த்தினர்.

ஜனாதிபதிக்கு வட மாகாண ஆளுநர் மற்றும் இந்து பௌத்த, இஸ்லாம் மதத் தலைவர்களால் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ம-9-131)

## தொடர்ந்து ஒளிரும் மின் விளக்குகள்


யாழ்ப்பாணம், பெப்.7

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் அனலை தீவு - எழுவை தீவுப் பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.

எனினும் அதற்குரிய ஆளிகள் பொருத்தப்படாமையால் பகல் வேளைகளில் மின்சாரம் வழங்கப்படும் போது மின் விளக்குகள் ஒளிர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இதன் காரணமாக மின்சாரம் வீண் விரயமாவது மட்டுமன்றி மின் குமிழ்களின் ஆயுட் காலமும் குறைவடை கின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு மின் குமிழ்களுக்கான ஆளிகளைப் பொருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, அனலைதீவு - எழுவை தீவு பகுதிகளுக்கு மின் பிறப் பாக்கிகள் மூலம் மட்டுப் படுத்தப்பட்ட நேர அளவில் மின்விநியோகம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-251-16)



குடாநாட்டில் இளநீருக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதை அடுத்து தென்பகுதியிலிருந்து தருவிக்கப்பட்ட இளநீர் வாகனங்களில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. (ம-17)

## நகுலேஸ்வர ஆலய சுற்றாடல் அபிவிருத்தி

**இந்து ஒன்றியம் மகிழ்ச்சி**

> வெளியி லிருந்து வரும் மாணவர் களுக்கு தங்கும் வசதி செய்யும் வகையில் அகில இலங்கை இந்து காங்கிரஸ் இரட்டை மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

யாழ்ப்பாணம் பெப்.7

கீரிமலை நகுலேஸ்வர ஆலயச் சுற்றாடலை அழகுபடுத்தவும் அபிவிருத்தி செய்யவும் சிறப்புத்திட்டமொன்றை வரைவதற்கு வட மாகாண ஆளுநரின் ஆதரவில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பின் செயலாளரும் கீரிமலை அபிவிருத்திக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான எஸ். பரமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது

குழுவின் பூர்வாங்க [illegible] நகுலேஸ்வரம் ஆலயத்தின் சுற்றாடலில் அபிவிருத்தி செய்யவேண்டிய பகுதிகளை அடையாளம் கூறுவதென்று முடிவு செய்யப்பட்டது.

அகில இலங்கை இந்து காங்கிரஸ் [illegible] ஆதரவில் அமெரிக்கா தொண்டர் ஸ்வாமி சிவபூமி மண்டபம் ஒன்றை நிர்மாணித்திருப்பது நல்லதொரு அறிகுறியாகும். இந்த மண்டபம் கூட்டங்கள் நடத்தவும் விழாக் காலங்களில் வருகை தரும் அடியார்களுக்கு உணவு வழங்கவும் உதவியாய் இருப்பது மட்டுமல்லாது ஆலயத்திற்கு வரும் சமயப் பெரியார்கள் தங்குவதற்கும் தங்கும் அறைகளையும் வழங்கவிருக்கின்றது.

இவைகளுக்கு மேலதிகமாக ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியிலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்கும் வசதி செய்யும் வகையில் அகில இலங்கை இந்து காங்கிரஸ் இரட்டை மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. நாட்டிலும் வெளியிலும் உள்ள பரோபகாரிகள் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் கலாசார மண்டபம் மற்றும் சிலைகளை நிறுவுவதற்கு உதவி புரிவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய நவகுண்ட பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நேற்று அதிகாலையில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இடம்பெற்றது. தூபிகளுக்கு அபிஷேகங்கள் நடந்து திருமுழுக்கு முற்பகல் 9.30 மணிமுதல் 10.30 மணிக்கும் இடையில் நடைபெற்றது. பிரதான சிவாச்சாரியார் சிவஸ்ரீ ந.குமாரசாமிக்குருக்கள் மற்றும் சர்வசதாச்சாரியார் இலுப்பப்பட்டு தமிழ்நாடு மீமாம்ச சிரோண்மணி சிவாகம வித்தகர் எஸ்.கல்யாண சுந்தர சிவாச்சாரியார் மற்றும் இணுவில் தர்மதாஸ்த பீட ஆகம பாடசாலை அதிபர் சிவஸ்ரீ தானு மாதேவ குருக்கள் உட்பட வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் நாட்டு பஞ்ச ஸ்தலங்களில் இருந்தும் வருகை தந்திருந்த சிவாச்சாரியார்கள், ஈழவளநாட்டிலிருந்தும் வேத விற்பனர்கள், சிவாகம விற்பனர்கள், ஆதீன முதல்வர்கள், ஓதுவார்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். பிரதான கும்பங்கள் வீதியுலா வருகின்றன. (ம-86)

## யாழ்.நகரப் பகுதியில் நேற்று 'பீல்ட் பைக்'

யாழ்.மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகத்தைத் திறந்து வைப்பதற்கு நேற்று ஜனாதிபதி மஹிந்த யாழ்ப்பாணம் வந்தமையால் யாழ். நகரப் பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடி மிகவும் உச்சக் கட்டமாக இருந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் நேற்றுக் காலை யாழ். நகரப் பகுதிக்குள் பிரவேசித்த இராணுவத்தினரின் அதிவேக மோட்டார் சைக்கிள் படையணி (பீல்ட் பைக் குறூப்) அனைத்து வீதிகளிலும் தனது சாகசத்தைக் காட்டியது. மக்களை மிரட்டும் விதமாக அவர்களது ரோந்து நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

இந்த மோட்டார் சைக்கிள் படையணியினர் யாழ். முற்றவெளி மற்றும் நகர்ப் பகுதிகளை வலம் வந்து நீண்ட நேரம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். வீதிகளில் தாம் பயணிக்கும் போது மக்களை ஒதுங்கி நிற்குமாறும் அவர்களை சைகைளால் தெரிவித்தனர். (த-17)

## யாழ்.– பளை ரயில் பாதை துப்புரவுப் பணி துரிதம்

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.மத்திய ரயில் நிலையத்தில் இருந்து பளை வரையான ரயில் பாதையைத் துப்புரவு செய்து சீர் செய்யும் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பாதையில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், செடிகள் என்பன கனரக வாகனங்கள் மூலம் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரயில் பாதைத் துப்புரவுப் பணியின் போது சில இடங்களில் தடங்கல்கள் ஏற்பட்டதாகவும் அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுத் துப்புரவு பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ரயில் பாதைகளின் ஓரங்களில் சிலர் குடிமனைகளை அமைத்துள்ளனர். இவர்களினாலேயே இந்தத் தடங்கல்கள் ஏற்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த-17)

சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பால்

## நயினாதீவு செல்வதற்கு மேலதிக படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப்.7

குறிகாட்டுவான் இறங்கு துறையில் நயினாதீவுக்கு மேலதிக பயணிகள் படகுகள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாள்களாக நயினாதீவுக்குச் சென்று வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து இந்தப் பயணிகள் படகுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது 40 பயணிகள் படகுகள் குறிகாட்டுவான் துறைக்கும் நயினாதீவு இறங்கு துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த சனிக் கிழமை குறிகாட்டுவான் இறங்கு துறையில் சனநெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது.

பத்துப் படகுகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. பயணிகளின் இந்த நெருக்கடியை நீக்கும் வகையில் மேலதிகமாக 40 படகுகள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. (த-17)

## பனங்கிழங்கு நல்ல விலை

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.நகரப் பகுதியில் பனம் கிழங்குக்கு நேற்றுப் பெரும் கிராக்கி ஏற்பட்டது.

தீவுப் பகுதியில் இருந்து கடந்த மூன்று நாள்களாக யாழ்.நகருக்குபெரும்தொகையான பனங்கிழக்குகள் எடுத்து வரப்பட்டன.

இந்தப் பனம் கிழங்கை யாழ். நகருக்குக் கடந்த இரு தினங்களாக வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் முண்டியடித்துக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் பனங்கிழங்குக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் பனம் கிழங்கைக் கொள்வனவு செய்வதற்காக அலைந்து திரிந்தனர்.

முன்னர் ஐந்து ரூபாவாக விற்கப்பட்ட ஒரு பனம் கிழங்கு திடீரென ஒன்று 10 ரூபாவாக விலை அதிகரித்தது. (த-17)

## ரூ.141 மில்லியன் வடக்குக்கு கடன்

யாழ்ப்பாணம், பெப்.7

சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 141 மில்லியன் ரூபா நுண்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் 4 ஆயிரத்து 8 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 356 குடும்பங்களுக்கு 56.8 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 675 குடும்பங்களுக்கு 16.4 மில்லியன் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 613 குடும்பங்களுக்கு 16.1 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 682 குடும்பங்களுக்கு 22 மில்லியன் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 682 குடும்பங்களுக்கு 29.8 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக 4 ஆயிரத்து 8 குடும்பங்களுக்கு 141.2 மில்லியன் ரூபா கடந்த வருடம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. (த-3)

> சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வருடந்தோறும் வழங்கப்படும் இந்தக் கடன் இம்முறையும் வழங்கப்பட்டுள்ளது.

## உள்ளூர் உருளைக் கிழங்கு அறுவடை பரவலாக ஆரம்பம்

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்பட்டுச் சந்தைக்கு வந்து சேர்வதால் அதன் விலை திடீரெனச் சரிந்து காணப்படுகின்றது.

இந்த விலைச் சரிவால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தென் பகுதியில் இருந்து தருவிக்கப்படும் உருளைக் கிழங்கின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் தென்பகுதியில் இருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ 60 ரூபாவாக விற்கப்படுகின்றது. அதேசமயம் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 50 ரூபாவாக விற்கப்படுகின்றது. (த-17)

## யாழ்.கரையோரப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.கரையோரப் பகுதிகளான குருநகர், பாஷையூர், நாவாந்துறை, பொம்மைவெளி போன்ற பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தப்பகுதிகளில் உள்ள வடிகால்வாய்கள் சீரான முறையில் துப்புரவு செய் யப்படாமையாலேயே இவ்வாறு நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் உடனடியாக நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

தம்துபகுதிகளில்டெங்கு ஒழிப்பு நடவடிக்கை போதிய அளவில் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் தமது பகுதிகளில் டெங்கு நோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஜனாதிபதியின் வருகைக்காக மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் வீதி புனரமைப்பு, திருத்தப் பணிகள் என்பனவற்றில் ஈடுபடுத்தப்பட்டதால் நகரப் பகுதி வடிகால்களைச் சுத்தம் செய்யும் பணிகள் கடந்த சில நாள்களாகச் சீரான முறையில் இடம் பெறவில்லை.

இதனால் இந்த வடிகால்களில் நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாக யாழ். நகரப் பகுதி வர்த்தகர்களும் குறிப்பிட்டனர். இதில் மாநகர சபை உடன் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

கரையோரப் பகுதிகளில் வடிகால்களைத் துப்புரவு செய்வதுடன் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கரையோர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

## மரக்கறிகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் தற்போது திடீரென சரிந்து காணப்படுகின்றன.

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டினார்கள்.

தற்போது இந்த மரக்கறி வகைகள் தாராளமாகச் சந்தைக்கு வந்து சேர்வதால் கடந்த மாத விலையிலும் பார்க்க அவை இப்போது மிகக் குறைவான விலையை அடைந்துள்ளன.

இதனைவிட தம்புள்ள மரக்கறிச் சந்தையில் இருந்தும் போதியளவு மரக்கறி வகைகள் குடாநாட்டுக்குத் தினமும் வந்து சேர்கின்றன.

குடாநாட்டு மரக்கறி வகைளும் தம்புள்ள மரக்கறிகளும் ஒரே சமயத்தில் சந்தைகளுக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலைகளில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்று மரக்கறி வகையின் விலை விவரம் வருமாறு:

கத்தரிக்காய் (1கிலோ) 40 ரூபா, வெண்டிக்காய் (1கிலோ) 50 ரூபா, பயிற்றங்காய் (1கிலோ) 80 ரூபா, பூசணிக்காய் (1கிலோ) 40 ரூபா, தக்காளிப்பழம் (1கிலோ) 50 ரூபா, கரட் (1கிலோ) 80 ரூபா, பீற்றூட் (1கிலோ) 70 ரூபா, பச்சை மிளகாய் (1 கிலோ) 110 ரூபா, வெங்காயம் (1கிலோ) 50 ரூபா, கீரை (1பிடி) 15 ரூபா. (த-17)

> தற்போது இந்த மரக்கறி வகைகள் தாராளமாகச் சந்தைக்கு வந்து சேர்வதால் கடந்த மாத விலையிலும் பார்க்க அவை இப்போது மிகக் குறைவான விலையை அடைந்துள்ளன.

## பட்டப்பகலில் கூரை பிரித்து திருட்டு

வலி. வடக்கு, பெப் 06

பட்டப்பகல் வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் பதினாறு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர். கடந்த புதன் கிழமை பட்டப் பகல் வேளையில் சுன்னாகம் கந்தரோடை விகாரை வீதியில் விகாரைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் இருந்து குறிப்பிட்ட நகைககள் திருட்டுப் போயுள்ளன. வீட்டார் இல்லாத வேளையில் திருடர்கள் வீட்டுக்கூரையின் வழியாக உள் சென்று இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர். திருட்டை முடித்துக் கொண்டு வீட்டின் கதவின் ஊடாக வெளியே இவர்கள் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸில் இது சம்பந்தமாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சந் தேகத்துக்கிடமானோரிடம் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்-முஸ்லிம்கள் இடையே பிரிவை ஏற்படுத்த முயற்சி

அம்பாறை,பெப்.7

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கு இனவாத சக்திகளும், சில ஆங்கில, சிங்கள ஊடகங்களும் முயற்சித்து வருகின்றன.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் எம்.ரி.ஹஸனவி தெரிவித்தார்.

காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கூட்டம் காரைதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைத் தீர்வில் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக முஸ்லிம்களுக்கான உச்சக்கட்ட எதிர்பார்ப்பு என்ன என்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கருத்து வெளியிட்டால் அதனைத் திரித்து தமிழர்களுடன் முரண்பட வைப்பதற்கான கருத்துக்களை இனவாத சக்திகள் தெரிவிக்கின்றன.

**தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றுபட்டே ஆக வேண்டும். இந்த ஒன்றுபடல் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.**

அனைத்துக் கட்சிகளும் எல்லாத் தரப்பினரும், இனப்பிரச்சினைக்கான தீர்வில் கிடைக்க வேண்டிய அதிகாரப் பரவலாக்கம் குறித்த எதிர்பார்ப்பைக் கூறிவருகின்றனர்.

இதேபோல்தான் முஸ்லிம் காங்கிரஸிம் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் உச்சக்கட்ட எதிர்பார்ப்பை வலியுறுத்தி வருகின்றது. அதற்காகத் தமிழர்களுக்கு மாகாணம் கொடுத்தால், எமக்கும் தனி மாகாணம் தரவேண்டுமென்று ஏட்டிக்குப் போட்டியாக நாம் கேட்கவுமில்லை, அவர்களுக்குக் கொடுக்காவிட்டால் எமக்கு வேண்டாமென்று நாம் சொல்லவும் இல்லை.

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களும் சமதரப்பாக அங்கீகரிக்கப்பட்டு கொடுக்கப்படும் அதிகாரப் பகிர்வில் சமபங்கு வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறான பங்கு எவ்வாறு வழங்கப்பட வேண்டுமென்பதில், ஒரு அலகு மூலமாகவோ, விசேட ஏற்பாடு மூலமாகவோ பெற்றுத்தர வேண்மென்றே கேட்டுக் கொள்கிறோம். இதுவே தான் எமது நிலைப்பாடாகும்.

ஆனால் தமிழர்களுக்கு வழங்கினால் தான் எங்களுக்கும் தரவேண்டுமென முடிச்சுப் போடத் தேவையில்லை, எமது உச்சக்கட்ட நிலை அதுவாகும். கொடுப்பதும் கொடுக்காமல் விடுவதும் வேறு விடயமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் இன்று புரிந்துணர்வுடனும், நல்லிணக்கத்துடனும் ஒன்றுபட்டு செயற்பட்டு வருகின்றன. கிழக்கில் எமது இருகட்சிகளினதும் கையில் தான் எதிர்காலத்தில் அதிகாரம் கிடைக்கவிருப்பதுடன், அதற்கான சூழலும் கனிந்து வந்து கொண்டிருக்கின்றது.

எனவேதான் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றுபட்டே ஆக வேண்டும். இந்த ஒன்றுபடல் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. இந்தநிலையில் நம் இரு சமூகமும் முரண்பாடுகளை எந்தவகையிலும் வளர்த்துக் கொள்ளக்கூடாது.

எமக்கிடையே ஏற்படும் சிறிய பிரச்சினைகளை எமது மட்டத்திலேயே கூடிப் பேசி இணக்கப்பாட்டுடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். வடுக்களை மறந்து புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதுடன், எமது மண்ணைச் சமாதான பூமியாகவும் திகழச்செய்ய வேண்டும் என்றார். (ச-30)

## யானைகளால் பீதி; மக்கள் இடப்பெயர்வு

கிண்ணியா, பெப். 7

திருகோணமலை - கிண்ணியா கல்லடிவெட்டுவான் கிராமத்துக்குள் காட்டு யானைகள் நுழைந்து அட்டகாசம் செய்ததையடுத்து அக்கிராம மக்களில் சிலர் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இதனால் தமது வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கும் தமது உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் எனக் கருதியே தாம் இடம்பெயர்ந்து செல்கின்றோம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மூன்று நாள்களுக்கு முன்னர் விவசாயி ஒருவரைக் காட்டு யானை தாக்கி தற்போது அவர் கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த சில தினங்களாகப் பாடசாலைக்கு மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்தப் பகுதி மாணவர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தமையாலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன என்று பாடசாலை அதிபர் ஏ.மன் சூர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களே மீளவும் இந்தக் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

எனினும், யானைகளின் தொல்லை காரணமாக மீண்டும் மக்களை இடம்பெயர்ந்து செல்லவிடாமல் அவர்களது சொந்தக் கிராமத்திலேயே குடியிருக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுயானைகளின் அட்டகாசத்தால் பாடசாலைக்கு மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டதையடுத்து, கிண்ணியா பிரதேச செயலாளருக்கும், கிராமசேவை அதிகாரிக்கும், கல்வி அதி காரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கல்லடி வெட்டுவான் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.(ச)

## போலி ஏ.ரீ.எம். அட்டையை பயன்படுத்திய மூவர் கைது

நுவரெலியா,பெப்.7

அலவத்துகொடை எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் எரிபொருள் நிரப்பிய பின்னர் போலி ஏ.ரீ. எம்.அட்டையைக் கொடுத்துவிட்டு தப்பிச்சென்ற மூவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

மாத்தளை நகரில் 40, 000 ரூபா பெறுமதியான காசோலையை வழங்கி விட்டுஒரு வாரத்துக்கு மோட்டார் காரொன்றை இவர்கள் வாடகைக்கு பெற்றுக் கொண்டனர்.

இந்தநிலையில், அலவத்துகொடை நகரி லுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 7,000 ரூபாவுக்கு எரிபொருள் நிரப்பிய பின்னர் போலி ஏ.ரீ.எம். அட்டையை வழங்கிவிட்டு அதனை முகாமையாளர் பரிசோதிக்க முன்னர் இந்தச் சந்தேகநபர்கள் மூவரும் வாகனத்துடன் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் மூவரும் வாகனத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அலவத்துகொடை பொலிஸார் கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணையை மேற் கொண்டு வருகின்றனர்.

(ச)

## மட்டக்களப்பில் கடும் மழை; 51.2 மில்லி மீற்றர் மழை பதிவு

மட்டக்களப்பு,பெப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக கடும் மழை பெய்து வருகின்றது.

நேற்று திங்கட் கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 51.2 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலைய கடமை நேர அதிகாரி ஏ.எம்.எம். சாலிஹீன் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நேற்று திங்கட்கிழமை காலை வரை மொர்த்தமாக 143.3 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-21)



பாண்டிருப்பு, ஸ்ரீ சித்தி விநாயகர் அரசடி அம்பாள் ஆலய வளவில் அமைந்திருக்கும் தீர்த்தக் கிணற்றின் நீர் திடீரென கடந்த சனிக்கிழமை இரவு அதிகரித்துள்ளது. தீர்த்தக் கிணற்று நீர் அதிகரித்ததை அவதானித்த ஆலயக் குருக்கள் பொதுமக்களுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து பெருந்திரளான மக்கள் கூடி பார்வையிட்டனர்.

## மின்னல் தாக்கம்; 20 வீடுகளில் சேதம்

கொட்டாவ,பெப்.7

கொட்டாவ - பின்ஹேன பகுதியில் மின்னல் தாக்கம் காரணமாக சுமார் 20 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மின்னல் தாக்கத்தால் இந்த வீடுகளில் இருந்த இலத்திரனியல் பொருள்கள் செயலிழந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட இந்த மின்னல் தாக்கத்தினால் எவ்வித உயிர்சேதமும் ஏற்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

(ச)

# அரசு 13 பிளஸ் குறித்து நாளுக்கு ஒரு கதை பேச்சு என்பது வேடிக்கையாக மாறிவிட்டது

### அரியநேத்திரன் எம்.பி கூறுகிறார்

மட்டக்களப்பு,பெப்.7

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெறுகின்ற போது முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இணையான தீர்வைப்பெற்றுக் கொடுப்பதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாகும் என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கடுக்காமுனை வாணி வித்தியாலயத்தின் இல்லமெய் வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அன்றிருந்து இன்று வரைக்கும் சொல்லிவரும் விடயம் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு கிடைக்கும் போது இந்தத் தீர்வானது முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைந்த தீர்வாகவே அமையும். நாங்கள் இன்னுமோர் இனத்தால் ஒடுக்கப்பட்ட சமூகம். எனவே நாங்கள் இன்னுமோர் சமூகத்தை அடைக்கி ஒடக்கி வாழ நினைக்கமாட்டோம்.

அரசுக்கு வெளியே இருந்து தனித்து நின்று பேச்சு பற்றி பேசுகின்ற ஒரே ஒரு கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. ஏனைய கட்சிகள் அனைத்தும் அரசுடன் ஒட்டிக்கொண்டு அவர்களின் கதைக்கு தலையாட்டும் கட்சிகளாகவே உள்ளன.

தற்போது பேச்சு என்பது வேடிக்கையான ஒன்றாக மாறிவிட்டது. காரணம் தற்போது ஆட்சியில் உள்ள அரசு 13 பிளஸ் பற்றி ஒரு நாளைக்கு ஒரு கதையினைக் கூறுவதனாலும்அமைச்சர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கதையினைக் கூறுவதனாலும் பேச்சு எவ்வாறு அமையும் என்பது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அன்றும் இன்றும் என்றும் தமது சரியான இலக்கிலேயே சென்று கொண்டிருக்கின்றது.

இலங்கையிலே இடம்பெற்ற போருக்கு ஆதரவு கொடுத்த அந்த நாடுகள் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வங்காட்டாதது தமிழ்மக்களை இன்னும் வேதனைக்குத் தள்ளும் ஒரு செயலாகவே பார்க்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு ஆரம்பமாகி இரண்டு மாதங்களை நோக்கி நகர்ந்து கொண்டு செல்கின்றது. இந்த ஆண்டாவது தமிழ்மக்களுடைய வாழ்க்கையில் நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் ஆண்டாக அமைய வேண்டும். இதற்கு சர்வதேச நாடுகளும் அங்கு வாழும் புலம்பெயர் மக்களும் முழுஆதரவினையும் கொடுத்து நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று உழைக்க வேண்டும்.

எமது சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தனையோ பேர் தமிழ்த்தேசியத்துக்காக தங்களது உயிரை தியாகம் செய்திருக்கின்றார்கள். அது போன்று லட்சக்கணக்கான தமிழ்மக்களும் உயிரை தியாகம் செய்திருக்கின்றார்கள். இவர்களது கனவு நனவாக வேண்டுமாக இருந்தால் எமது இலட்சியத்திலிருந்து சற்றும் விலகாமல் ஒரே இலக்குடன் செயற்பட்டு வெற்றிபெற வேண்டும்- என்றார்.

(ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மண்ணில் ... புதிய உதயம் ...

FAST FRIENDLY AND ACCURATE CARE

# SANTHAM HOSPITAL

No.126 , 3rd Cross Street, Jaffna

## எமது சேவைகள்:

OPD | IPD | X-RAY | ECG

COLOUR SCANNING | PHARMACY | MODERN MEDICAL LABORATORY

AMBULANCE | SPECIALIST VISIT



Tele Phone: 021 56 777 56 | 021 56 765 77 Hotline: 077 376 7044

## அழைப்பிதழ்



நிகழும் மங்கலகரமான கர வருடம்
தை மாதம் 07-02-2012 அன்று
பகல் 11:05 மணியளவில்
தைப்பூச நன்நாளில்
ஆரம்பிக்கப்படவுள்ள

# SANTHAM HOSPITAL

திறப்பு விழா வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

**Chief Guest:**
Hon. Kithsiri Ganganath Abeygunawardena
(Co-ordinating Secretary To H.E. The President)

**Guest of Honor:**
Dr. S. Raviraj MBBS, MS
(Consultant Surgeon,. Jaffna Teaching Hospital)

Celebrate with us! Chairman & Staffs
Santham Hospital

# 126, 3rd Cross Street,
Jaffna.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரியாவுக்கு எதிரான அரபு நாடுகளின் பிரேரணை ஐ.நா. சபையில் தோல்வி

சிரியா அதிபர் பஷிர் அல்-ஆசாத்தை பதவி நீக்கக் கோரி ஐ.நா. பாதுகாப்பு சபையில் அரபு நாடுகளின் சாா்பில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ரஷ்யாவும், சீனாவும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் தோல்வி அடைந்தது.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-ஆசாத்துக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். போராட்டம் நடத்தும் பொது மக்களை ராணுவம் கொன்று குவித்து வருகிறது. நேற்று முன்தினம் ஹோம்ஸ் நகரில் அதிபர் ஆசாத்துக்கு எதிராக கடுமையான போராட்டம் நடந்தது. அதை

**ரஷ்யாவும், சீனாவும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் சிரியாவுக்கு எதிராக அரபு நாடுகளின் பிரேரணை ஐ.நா.சபையில் தோல்வியடைந்தது**

தொடர்ந்து பீரங்கிகளுடன் அங்கு விரைந்த ராணுவத்தினர் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை கண்மூடித்தனமாக சுட்டு வீழ்த்தினர். இதில் ஒரே நாளில் 260 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 36 வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. 1000 பேர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தால் ஹோம்ஸ் நகரில் பதற்றம் நிலவுகிறது. அதனால் பொதுமக்களின் போராட்டம் தீவிரம் அடைந் துள்ளது.

இதற்கிடையே, சிரியா அதிபர் பஷிர் அல்- ஆசாத்தை பதவி நீக்கக் கோரி ஐ.நா. பாதுகாப்பு சபையில் அரபு நாடுகளின் சார்பில் பிரேரணை கொண்டுவரப்பட்டது. இதன்மீது நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் பிரேரணை வெற்றி அடைந்து அதிபர் ஆசாத் பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் சிரியாவின் நட்பு நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் தங்களது தடையாணை அதிகாரத்தை பயன்படுத்தின. இதனையடுத்து அதிபர் ஆசாத்துக்கு எதிராக அரபு நாடுகள் கொண்டு வந்த பிரேரணை தோல்வி அடைந்தது. இதற்கு ரஷ்யா மற்றும் சீனாவுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட் டன் மொராக்கோ உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை அதிபர் ஆசாத்துக்கு எதிராக அரபு நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ந)

# தோல்வியை அடுத்து பல நாடுகளில் ஆர்ப்பாட்டம்



நியூயோர்க்,பெப்.7

ஐ.நா., பாதுகாப்புக் குழுவில் சிரிய அதிபர் பஷர் அல் அசாத் பதவி விலகக் கோரும் பிரேரணையை, ரஷ்யாவும், சீனாவும் தங்கள் தடையாணையைப் பயன்படுத்தி முறியடித்தன. சிரியாவுக்கு எதிரான பிரேரணை முறியடிக்கப்பட்டதால், சிரிய எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் ஆவேசம் அடைந்துள்ளனர். இதனையடுத்து ஆஸ்திரேலியா தலைநகர் கன்பெரா, பிரிட்டன் தலைநகர் லண்டன், கிரீஸ் தலைநகர் ஏதென்ஸ், ஜேர்மனி தலைநகர் பெர்லின், எகிப்து தலைநகர் கெய்ரோ மற்றும் குவைத் ஆகிய நகரங்களில் உள்ள சிரியத் தூதர கங்கள் நேற்று அடித்து நொறுக்கப்பட்டன. கன்டா தலைநகர் ஒட்டாவாவில், சிரிய தூதரகம் முன், நேற்று அசாத் எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ந)

# ஐரோப்பாவுக்கு சீனா உதவும் பிரதமர் வென் ஜியாபோ உறுதி



பீஜிங்,பெப்.7

யூரோ மண்டலத்தில், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளை கடனில் இருந்து மீட்க, உதவத் தயாராக இருப்பதாக, சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

யூரோ மண்டலப் பொருளாதார நெருக்கடியில் உதவத் தயாராக இருப்பதாக, சீனா முன்பே கூறியிருந்தாலும், எந்தெந்த வகைகளில் உதவப் போகிறது என்பதைப் பற்றிக் கூறவேயில்லை. அதோடு, கிரீஸ் போன்ற நாடுகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்பே, தனது உதவியைப் பற்றிக் கூற முடியும் எனவும் தெரிவித்திருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் சீனப் பிரதமர் வென் ஜியாபோ அளித்த பேட்டியில், இதுகுறித்து கூறியிருப்பதாவது:

ஒரு பக்கம் சீனாவின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக, ஐரோப்பா உள்ளது. மறுபக்கம், ஐரோப்பாவில் இருந்து சீனா அதிகளவில் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து வருகிறது. இந்த அடிப்படையில், ஐரோப்பாவிற்கு உதவுவது சீனாவின் நலன் கருதித் தான் என் பதை உணர முடியும். ஏற்று மதி, இறக்குமதி கொள்கை என்பது இருதரப்பினது ஸ்திரத் தன்மையையும் பேணுவதாக இருக்க வேண் டும். அதில், ஏதாவது சில மாற்றங்கள் இருக்குமானால், அது தடைகளை உருவாக்குவதை விட வர்த்தகத்தை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும். இவ்வாறு ஜியாபோ தெரிவித்தார். ஆனால் வழக்கம்போல் இந்த முறையும், எவ்விதத்தில் சீனாவின் உதவி இருக்கும் என, ஜியாபோ தெளிவு படுத்தவில்லை. (ந)



*பல்கேரியா தலைநகர் சோபியாவிற்கு வந்த அமெரிக்க செயலர் ஹிலாரி கிளின்டனை (இடது), அந்நாட்டு அதிபர் ரோசன் பிலிவ்நெலிவ் வரவேற்றார்*

# மீண்டும் அதிபராவேன் ஒபாமா உறுதி

வாஷிங்டன்,பெப்.7

அமெரிக்காவில், விரைவில் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று அந்தப் பதவிக்கு மீண்டும் தானே வருவேன் என்று, அதிபர் பாரக் ஒபாமா கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெரும் சரிவைச் சந்தித்த அமெரிக்காவின் பொருளாதாரம், தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. அதற்கான நடவடிக்கைகளில் தனது தலைமையிலான அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஒரு முறை அதிபராக இருப்பதால் மட்டுமே, நாட்டின் பொருளதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்திட முடியாது. எனவே, அடுத்த தேர்தலிலும் மக்கள் தன்னைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

# கடும் பனியால் முடங்கியது ஹீத்ரோ விமான நிலையம்



பிரிட்டனில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால், ஹீத்ரோ விமான நிலையத்தில் நேற்று 30 சதவீத விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

ஜனவரி மாதம் முடிந்த போதிலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. வெப்பநிலை பூச்சியம் டிகிரிக்கும் கீழே சென்றுள்ளன. பனிப்பொழிவு காரணமாகப் பிரிட்டன் , விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள உலகின் பரபரப்பான ஹீத்ரோ விமான நிலைய ஓடுபாதைகளில் 16 செ.மீ. உயரத்துக்கு பனி படிந்துள்ளது. இதனால், விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தினமும் 1200 விமானங்கள் இயக்கப்படுகின்றன. இதில் 30 சதவீத விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளனன.

இந்த நிலையில் மோசமான வானிலை காரணமாக விமானங்களை திட்டமிட்டபடி இயக்க முடியாததற்கு வருந்துகிறோம. கூடிய விரைவில் நிலைமை சீராகும் என எதிர்பார்க்கிறோம் என விமான நிலையத் தலைமைச் செயல் அதிகாரி நார்மண்ட் பொய்வின் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் சீனமொழிக் கற்கை




பாகிஸ்தான் நாட்டு பாடசாலைகளில் சீன மொழிக் கற்பித்தல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டு தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பர்தோஸ் ஆசிக் அவான் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனா எமது நட்புறவு நாடு. எப்போதும் பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்கக் கூடியது. சர்வதேச விவகாரங்களில் பாகிஸ்தானையே சீனா ஆதரித்தும் வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்த சீன மொழியை எமது நாட்டில் கற்றுத்தருவது அவசியமானதும் கூட.

இருநாட்டு உறவுகளிடையே மொழி ஒரு முட்டுக் கட்டையாக இருந்து விடக்கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். இதனால் எமது நாட்டுப் பாடசாலைகளில் சீன மொழியைக் கற்பிக்கும் நடவடிக் கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறோம் - என்றார் அவர்.

# ராணி எலிசபெத்தின் கைப்பையில் என்ன?



லண்டன்,பெப்.7

பிரிட்டிஷ் ராணி எலிசபெத்தின் கைப்பையில் என்னவெல்லாம் இருக்கின்றன என்ற ரகசியம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

எலிசபெத், என்ன நிறத்தில் உடை அணிகிறாரோ அதே நிறத்தில் தொப்பி அணிந்து, கைப்பை வைத்திருப்பார். ராணி எங்கு சென்றாலும் கைப்பை இல்லாமல் செல்லமாட்டார். அப்படி அதில் என்ன தான் இருக்கிறது என்று பல ஆண்டுகளாக மக்கள் குழம்பியதுண்டு. அந்தக் குழப்பத்துக்கு தற் போது விடை கிடைத்துள்ளது.

எலிசபெத் தி குயின் தி உமன் பிஹைன்ட் தி திரோன் என்ற புத்தகத்தில் சாலி பெடல் ஸ்மித் ராணியின் கைப் பையில் உள்ள பொருள்களை அம்பலப்படுத்தியுள்ளார். லிப்ஸ்டிக், சின்ன கண்ணாடி, மடிக்கப்பட்ட 5 அல்லது 10 பவுண்ஸ் நோட்டு ஆகியவை அதில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஸ்மித் ஒரு பத்திரிக்கைக்கு பேட்டியளித்தபோது கூறியதாவது:-

ராணி எலிசபெத்தின் கைப்பையில் மூக்கு கண்ணாடி, பேனா, மின்ட் மிட்டாய், தேவாலயத்தில் போடுவதற்காக பவுண்ஸ் பணம், எங்காவது சென்றால் அங்குள்ள டேபிளுக்கு அடியில் கைப்பையை தொங்கவிட ஊக்கு ஆகியவற்றை வைத்திருப்பார் என்றார்.

எலிசபெத்தின் கைப்பையில் என்ன இருக்கிறது என்பதை ஏற்கனவே கடந்த 2007ஆம் ஆண்டு 'வட்ஸ் இஸ் இன் தி குயின்ஸ் ஹேண்ட்பேக்: அன்ட் அதர் ரோயல் சீக் ரட்ஸ்' என்ற நூல் தெரிவித்துள்ளது. (ந)

# அமெரிக்க பிரிகேடியர் ஜெனரல் ஆப்கனில் மரணம்




ஆப்கனிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தின் பிரிகேடியர் ஜெனரல் ஒருவர் நேற்று மரணமாகியுள்ளார்.

பிரிகேடியர் ஜெனரல் ரெரென்ஸ் ஹிட்னர் என்ற இந்த இராணுவ அதிகாரியே ஆப்கனிஸ்தானில் உயிரிழந்த அமெரிக்காவின் மிக உயர்ந்த நிலை அதிகாரியாவார்.

49 வயதான இவரது மரணம் இயற்கையாக நிகழ்ந்ததாக வொசிங்டனில் பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் சீண்டினாலும் பதிலடி மீண்டும் ஈரான் எச்சரிக்கை



**ஈரான் புரட்சிப் படையின் துணைத் தளபதி உசேன் சலாமி நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

தெஹ்ரான்,பெப்.7

ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட எதிரி நாடுகள் தாக்குதல் நடத்துவதற்காக எந்த நாடாவது இடம் கொடுத்தால் அந்த நாட்டின் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என அந்நாட்டு ராணுவம் எச்சரித்துள்ளது.

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் குறித்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சந்தேகம் கொண்டுள்ளன. இதனையடுத்து ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இந் நிலையில், ஈரானின் தென்பகுதியில் நேற்று முன்தினம், அந்தநாட்டின் ராணுவமான ஈரான் புரட்சிப் படை, இரண்டு நாள் போர் ஒத்திகையைத் தொடங்கியது.

இந்த ஒத்திகை சிறிய அளவில் தான் நடக்கும் என அந்நாட்டுப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஈரான் புரட்சிப் படையின் துணைத் தளபதி உசேன் சலாமி நேற்று விடுத்த அறிக்கையில், எந்த நாடாவது ஈரான் மீது தாக்குதல் நடத்த, அமெரிக்கா உள்ளிட்ட எதிரி நாடுகளுக்கு இடம் கொடுக்குமானால், அந்த நாட்டின் மீது ஈரான் கடும் தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (ந)

## காதலர் சகோதரர்களான அதிசயம்

திருமணம் நிச்சயதார்த்தம் செய்துகொண்ட பெண்ணும் ஆணும் உண்மையில் சகோதரனும் சகோதரியும் என திருமணத்துக்கு சில நாள்களுக்கு முன்னர் அவர்களின் பெற்றோர்களால் தெரியப்படுத்தப்பட்ட சம்பவமொன்று தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் அடுத்த மாதம் குழந்தையும் பெற்றெடுக்கவுள்ளார். இந்நிலையில் தனது குழந்தைக்கு தனது சகோதரனே தந்தை என்பதை அறிந்து அவர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

மேற்படி இளைஞனும் யுவதியும் குழந்தைப் பருவத்திலேயே பெற்றோர்களால் பிரிக்கப்பட்டுள்ளனர். அந்த இருவரும் அவர்களது பெற்றோர் விவாகரத்து செய்யும்போதே பிரிக்கப்பட்டு தனித்தனியாக வளர்ந்ததாக தென்னாபிரிக்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிந்த இவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கும்போதே சந்தித்துள்ளனர். அவர்கள் இருவரும் திருமணத்திற்கு முன்பாக தம்மை பெற்றோருக்கு அறிமுகம் செய்துகொள்ள எண்ணினர். அதற்காக கடந்த வாரம் இந்தக் குடும்பத்தவர்கள் சந்தித்தபோதே இருவரும் சகோதரர்கள் என்பது அவர்களுக்கு தெரியவந்துள்ளது. மேற்படி யுவதி 8 மாதக் குழந்தையாக இருக்கும்போதும், ஆண் 2 வயது சிறுவனாக இருக்கும்போது பிரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த இளைஞனின் தந்தை இது தொடர்பில் தெரிவித்ததாவது;

தனது மனைவி தன்னை ஏமாற்றியதற்காக கடந்த 1983 ஆம் ஆண்டு விவாகரத்து பெற்றதாகவும் பெண் குழந்தை அவரது மனைவியிடமும் ஆண் குழந்தை தன்னிடமும் வளர்ந்ததாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி இளைஞனும் யுவதியும், தமது குடும்பத்தினரை சந்திக்கச் சென்றதால் அவர்களின் வாழ்வில் மறக்கமுடியாத பேரிடியான தகவல் கிடைத்தது. இத்தகவலினால் பெரும் அதிர்ச்சியடைந்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி அதிர்ச்சித் தகவலையடுத்து தாம் இருவரும் பிரிந்து விடத் தீர்மானித்துள்ளதாகவும் இந்த அதிர்ச்சியை விவாகரத்து செய்த தமது பெற்றோருடன் எப்படி கையாள்வது எனத் தெரியவில்லை எனவும் மேற்படி இளைஞர் தெரிவித்துள்ளார். (ந)

## சமாதானக் கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு; தெற்கு சூடானில் 37 பேர் சாவு

தென் சூடானில், சமாதானக் கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 37பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த வருடம் சூடானில் இருந்து பிரிந்த தென் சூடானில் அடிக்கடி கலவரங்கள் ஏற்படுகின்றன. மாயன்டிட் நகரில் சமாதானக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை 4 வாகனங்களில் அங்கு வந்த துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் கூட்டத்தினர் மீது சரமாரியாகச் சுட்டனர். பொலிஸாரும், ராணுவ வீரர்களும் பதில் தாக்குதல்நடத்தினர்.

அதில் 37 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸார் . மர்ம நபர்கள் சுட்டதில் 100-க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். (ந)

## பல் 'செற்' விழுங்கியதில் மூச்சுத்திணறி மரணம்

விலைமாதுடனான பலாத்காரத்தின் போது தன்னையறியாது செயற்கைப் பல் தொகுதியை விழுங்கியதில் 74 வயதுடைய வயோதிபரொருவர் மரணமடைந்த சம்பவமொன்று தாய்வானில் இடம்பெற்றுள்ளது.

பல வருடங்களாக மனைவியைப் பிரிந்து வாழும் மேற்படி வயோதிபர் தனது நெருங்கிய பெண் நண்பியொருவருடன் வசித்து வந்துள்ளார்.

சம்பவதினம் விலைமாது ஒருவரிடம் சென்றிருந்த வேலை மயங்கி விழுந்துள்ளார்.

மயக்கமடைந்த இவர் வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டு, பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் இறந்துவிட்டதாகவும் செயற்கை பல் தொகுதி தொண்டையில் சிக்கியதனால் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

## வெள்ளப் பாதிப்பு

கிழக்கு ஆஸ்திரேலியாவில் தென் வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லாந்து பகுதிகள் வெள்ள அனர்த்தத்தால் மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. அந்தப் பிராந்தியத்தில் வெள்ளத்தால் 10,000 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மூரியில் தென் நியூ சவுத் வேல்ஸில் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு விமானம் மூலம் விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூரி பிராந்தியமானது கடந்த 35 வருட காலத்தில் இல்லாத மோசமான வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளது. அங்கு 2000 பேர் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். (ந)


## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

மணிலா,பெப்.7

மத்திய பிலிப்பைன்ஸ் பகுதியில், கடும் நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிச்டர் அளவுகோலில், 6.8 ஆகப் பதிவாகி இருந்த இந்த நிலநடுக்கத்தில் அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான செடிவின் மேற்குப் பகுதி அதிர்ந்துள்ளது.

கட்டட இடிபாடுகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தின் தாக்கம் அதிகமாக இருந்தபோதிலும், சுனாமி குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. (ந)

## சிரியாவில் இப்படியும் போராட்டம்



சிரியா அதிபர் பஷர் அல் அசாதிற்கு எதிராக, அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று நடந்த போராட்டத்தில் போராட்டக்காரர்கள் வீதியில் படுத்து உண்ணாவிரதம் இருந்தனர்.

## கடந்த வருடம் மட்டும் ஆப்கனில் 3, 021 பேர் சாவு

ஆப்கனிஸ்தானில் நிகழும் தாக்குதல் சம்பவங்களில், கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாதளவுக்கு கடந்த ஆண்டில் பொதுமக்களின் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

இதன்படி ஆப்கனிஸ்தானில் 2011 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களில் பொதுமக்களில் 3,021 பேர் கொல்லப்பட்டிருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த எண்ணிக்கை, 2010 இல் 2,790 ஆகவும், 2009 இல் 2,412 ஆகவும் இருந்தன. இந்த உயிரிழப்புகளில், தீவிரவாதிகளின் தாக்குதல்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கையே அதிகம் எனத் தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில், ஆப்கன் அரசின் உதவியுடனான வான்வெளித் தாக்குதலில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் உயிரிழந்திருப்பதாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூனின் சிறப்புப் பிரதிநிதி கவலை தெரிவித்துள்ளார். (ந)

## ஆப்கன் குண்டுத் தாக்குதலில் 7 பேர் சாவு

கந்தஹார்,பெப்.7

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு வெளியே கார் குண்டு வெடித்தது. இதில் 5 பொலிஸார் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கனின் தென்பகுதியில் உள்ள கந்தஹார் நகரில் உள்ள பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு வெளியே வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் நேற்றுமுன்தினம் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. தகவல் அறிந்த பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தில் 5 பொலிஸார் மற்றும் 2 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் காயமடைந்த 19 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை தீவிரவாதிகளால் வெடிக்கச் செய்துள்ளனர். (ந)

# பாகிஸ்தான் மருத்துவருக்கு அமெரிக்காவில் குடியுரிமை

**அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மருத்துவர் ஷகீலுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர்.**

அல்குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த இடம் பற்றி தகவல் தெரிவித்த பாகிஸ்தான் மருத்துவருக்கு, அமெரிக்க குடியுரிமை வழங்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த பின்லேடன் பதுங்கியிருந்த இடத்தைக் காட்டி கொடுத்தது, பாகிஸ்தான் மருத்துவர் ஷகீல் அப்ரிடி . அவரை பாகிஸ்தான் அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளதுடன் அவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்வது குறித்தும் பரிசீலித்து வருகிறது.

ஆனால், மருத்துவரை விடுவிக்க அமெரிக்கா தீவிர முயற்சித்து வருகிறது.

மேலும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மருத்துவர் ஷகீலுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.



இதுகுறித்து கலிபோர்னியா நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனா ரோராபச்சர் தெரிவித்ததாவது;

மருத்துவர் ஷகீலுக்கு தண்டனை வழங்கப்பட்டால், நிச்சயம் அவரைத் தூக்கிலிடுவார்கள். அவருக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டால், பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு நேரடி எச்சரிக்கை விடுப்பதாக அமையும். தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் முருத்துவர் ஷகீல் உதவியுள்ளார். அவர் தேசத்துரோகம் எதுவும் செய்யவில்லை என்று கூறினார்.

ரோராபச்சரின் தீர்மானத்துக்கு பத்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கி உள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்தத் திட்டம்

## மத்திய பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை



டில்லி,பெப்.7

நாட்டின் மிகப்பெரிய தீவிரவாத அமைப்பான பாபர் கல்சா அமைப்பு, இந்திய ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஹரியானா மாநிலத்தில் உள்ள குருஷேத்ரா பல்கலைக்கழகத்தில் நாளை புதன்கிழமை நடக்கும் பட்டமளிப்பு விழாவில் இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட் டீல் கலந்து கொள்கிறார்.

இதற்காக இன்று செவ்வாய்க்கிழமையே தலைநகர் சண்டிகருக்குச் செல்லும் அவர் அங்குள்ள ராஜ்பவனில் தங்கவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு பாபர் கல்சா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று சண்டிகர் பொலிஸாரை மத்திய பாதுகாப்புப் அமைச்சு எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற பாபர் கல்சா தீவிரவாதிகள் தில்பக் சிங், மன்தீப் சிங் ஆகியோர் பஞ்சாப் எல்லை வழியாக நாட்டுக்குள் ஊடுருவி இருப்பதாகவும், அவர்கள் தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் மத்திய பாதுகாப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

மேலும் ஜனாதிபதி செல்லும் வீதியை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்து மாறும் மத்திய பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதையடுத்து குருஷேத்ரா பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி உள்ளனர். பல்கலைக்கழக விடுதிகளில் அதிரடியாக சோதனை நடத்தி, சந்தேகத்துக்கிடமான வகையில் யாராவது தங்கியிருக்கிறார்களா என்று விசாரித்து வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் வெளியாள்களின் நடமாட்டத்தையும் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர். மேலும் மாவட்டம் முழுவதும் வாகனச் சோதனையும் நடத்தப்பட்டு வருகிறது. (வ)

## லப்ரொப் வெடித்து ஒருவர் சாவு



கொல்கத்தா, பெப்.7

கொல்கத்தாவில் எம்.என்.சி. ஊழியர் ஒருவர் லப்ரொப் கணினி வெடித்ததில் உடல் கருகி உயிரிழந்துள்ளார். கடந்த மூன்று மாதங்களில் லப்ரொப் வெடித்து உயிரிழக்கும் இரண்டாவது நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சப்தரிஷி சர்கார், தனது அறையில், சிகரெட் பிடித்துக் கொண்டே லப்ரொப் கணினியை இயக்கிக் கொண்டிருந்து அப்படியே உறங்கிவிட, சிகரெட்டில் இருந்து தீப்பிடித்து அதனால் லப்ரொப் வெடித்துள்ளது. மூடிய வீடு என்பதால் புகை மண்டலம் வீட்டைச் சூழ்ந்து கொண்டதால் மூச்சடைத்து அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (வ)

## முக்கிய மாநிலங்களில் காலூன்றும் மாவோயிஸ்ட்டுகள்



டில்லி, பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகளின் முன்னணி அமைப்புகள் இயங்கி வருவதாக உளவுத்துறையினர் எச்சரிக்கை.

டில்லி, பெப்.7

தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களில் மாவோயிஸ்டுகளின் முகாம்கள் அதிகரித்து வருவதாக மத்திய உளவு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மூன்று மாநிலங்களும் சந்திக்கும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் அண்மைக்காலமாக மாவோயிஸ்ட்டுகளின் முகாம்கள் அதிகரித்து வருகின்றது என்பது உளவு அமைப்பின் தகவல்.

மாவோயிஸ்ட்டுகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் படைகளை இலக்கு வைத்துத் தாக்குவது என்பது தான் மாவோயிஸ்ட்டுகளின் இலக்கு என்றும் அந்த எச்சரிக்கைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லி, பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மாவோயிஸ் ட்டுகளின் முன்னணி அமைப்புகள் இயங்கி வருவதாகவும் உளவு அமைப்புத் தெரிவித்தது.

ஏற்கெனவே வடகிழக்கு மாநிலங்களில் பிரிவினைவாதக் குழுக்களுடன் மாவோயிஸ்ட்டுகள் கைகோர்த்து இருப்பதாகவும் கூறப்பட்டது.

மத்திய உளவு அமைப்பின் தக்வலின் படி, ஆந்திரா, ஒரிசா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே காலூன்றி இருந்த மாவோயிஸ்ட்டுகள் இப்போது இந்தியாவின் பெரும்பான்மை மாநிலங்களில் தங்களை வலுப்படுத்தி வருவதாகத் தெரிகிறது. (வ)

## மத்திய அமைச்சர் நாராயணசாமி மீது அவதூறு வழக்கு

சென்னை,பெப்.7

கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு போராட்டம் குறித்து அவதூறாகப் பேசி வரும் மத்திய அமைச்சர் நாராயணசாமி மீது அவதூறு வழக்குத் தொடரப் போவதாக போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:

என்னைப் பற்றியும், கூடங்குளம் பகுதி மக்களின் போராட்டம் பற்றியும் தொடர்ந்து அவதூறான தகவல்களை பொதுநிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர் நாராயணசாமி கருத்து வெளியிட்டு வருகின்றார்.

என் மீது உண்மைக்குப் புறம்பாக களங்கம் கற்பிக்க நாராயணசாமி முயற்சிக்கிறார் என்று கூறிய உதயகுமார், எனவே அவர் மீது நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடரப் போகிறோம். இது தொடர்பாக சட்டத்தரணிகளிடம் ஆலோசித்து வருகிறோம் - என்றார் அவர். (வ)



டில்லியில் நடந்த புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு நடைபயணத்தில் அதிகமானோர் பங்கேற்றனர்.

## சட்டத்தரணி உண்ணாவிரதம்

சென்னை,பெப்.7

கூடங்குளம் அணு உலையை உடனடியாக மூடக்கோரி மதுரை மாவட்ட நீதிமன்ற வளாக வாயிலில், பூசை துரை என்ற சட்டத்தரணி ஒருவர் தனியாக உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

இவர் தொடர்ந்து 36 மணி நேரம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்துக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள ஏனைய சட்டத்தரணிகள் எவரும் ஒத்துழைக்கவில்லை. இதனால் நீதிமன்ற வாயிலில் பரபரப்பு நிலவுகிறது. (வ)

## அழகிரி மலேசியா பயணம்



சென்னை, பெப்.7

மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மு.க.அழகிரி குடும்பத்துடன் மலேசியாவுக்குச் சென்றுள்ளார்.

அவர் கடந்த சனிக்கிழமை இரவு விமானம் மூலம் சென்னையில் இருந்து புறப்பட்டுச் சென்றார். அழகிரியுடன், அவரின் மனைவி காந்தி மற்றும் நெருங்கிய உறவினர்களும் சென்றுள்ளனர். ''இது எனது தனிப்பட்ட பயணம். அரசு முறைப் பயணம் இல்லை'' என்று அழகிரி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (வ)

## பழங்குடியினர் விவகாரம் மற்றொரு காணொலியால் பரபரப்பு

இந்தியாவின் யூனியன் பிரதேசமான அந்தமானில் ஜரவா பழங்குடியினரை ஆட வைத்து ரசித்தது தொடர்பான காணொளி மீண்டும் ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்பு ஜரவா பழங்குடியினரை சுற்றுலாப் பயணிகளுக்காக ஆட வைத்தது தொடர்பான காணொலி ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி நடந்த இந்த விவ காரம் தொடர்பாக அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்திடமிருந்து, மத்திய அரசும் அறிக்கை கேட்டுள்ளது.

இந்தியாவுக்குட்பட்ட தீவுப் பகுதியான அந்தமான் நிக்கோபாரில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் ஜரவா பழங்குடியினர் வசிக்கின்றனர். இன்று வரை அவர்கள் எந்த ஆடையும் உடுத்தாமல் நிர்வாணமாகவே வாழந்து வருகின்றனர். பெரும்பாலானோர் இறந்துவிட தற்போது 403 பேர் மட்டுமே இந்தத் தீவில் உள்ளனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மேலும் ஒரு காணொளி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் காணொளியில் பொலிஸ் அதிகாரிகள் முன்பு ஜரவாப் பழங்குடியினர் உணவுக்காக நிர்வாணமாக ஆடியதாகப் பதிவாகியுள்ளது.

19 நிமிடங்கள் ஓடக்கூடிய அந்தக் காணொளி மொபைல் கமராவில் பதிவாகியிருக்கலாம் என்றும், இந்தக் காணொலி கடந்த 2004 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டதாக இருக்கலாம் என்றும் இதனை அங்கு வந்த சுற்றுலாப்பயணிகள் எடுத்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தொன்மையான பழங்குடியின மக்களைப் பாதுகாக்கத்தவறிய அந்தமான் அரசுக்கு மத்திய அரசு நெருக்கடி கொடுக்க வாய்ப்புள்ளதாகவும் தக்வல்கள் வெளியாகியுள்ளன. (வ)

## பிரதமர் பதவியைப் பெறுவது ராகுலின் நோக்கம் அல்ல



**தங்கள் சுயநலத்தை மட்டுமே கொண்டு செயற்படும் தலைவர்களுக்கு, வாக்காளர்கள் பாடம் கற்பிக்க வேண்டும் என்று பிரியங்கா கூறுகிறார்**

இந்தியாவின் பிரதமராவது ராகுல்காந்தியின் நோக்கம் அல்ல என்று அவரது சகோதரியான பிரியங்கா வதேரா தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலையொட்டி, அமேதி லோக்சபா தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நடந்த பிரசாரக் கூட்டங்களில், காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து, சோனியாவின் மகள் பிரியங்கா பேசி வருகிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது அவர் தெரிவித்ததாவது:

தலைவர்களை உருவாக்குபவர்களும் நீங்கள் தான். அரசைத் தோற்றுவிப்பவர்களும் நீங்கள்தான். மக்களுக்குச் சேவை செய்ய மனம் இல்லாமல், தங்கள் சுயநலத்தை மட்டுமே கொண்டு செயற்படும் தலைவர்களுக்கு, வாக்காளர்கள் பாடம் கற்பிக்க வேண்டும்.

மக்களுக்காகச் செயற்படக் கூடிய அரசு அமைய வேண்டுமா அல்லது கட்டடங்கள் கட்டுவதில் கோடிக் கணக்கான ரூபாயை வீணடிக்கக் கூடிய அரசு அமைய வேண்டுமா என்பதை வாக்காளர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

கடந்த 22 ஆண்டுகளாக மக்களுக்காக உழைக் காத அரசுகள் தான், உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. வாக்களிக்கும் போது, உத்தரப்பிரதேச மாநிலத்தை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளாமல், ஒட்டுமொத்த நாட்டின் எதிர்காலத்தை மனதில் வைத்து வாக்களிக்க வேண்டும்.

பிரதமராவது ராகுலின் நோக்கமல்ல. எமக்கு நேர்மையான, சிறந்த பிரதமர் கிடைத்துள்ளார். எனவே அடுத்த பிரதமர் யார் என்பது குறித்த பேச்சு தற்போது தேவையற்றது- என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச புகழ்பெற்ற BOSCH நிலையத்தின் சேவை இலங்கையில்




கட்டுப்படியான விலைகளில் உயர்தரம் வாய்ந்த மோட்டார் வாகன பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டுமானால் BOSCH சேவைகள் நிலையத்தைத் தவிர நீங்கள் வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை. இலங்கையில் சர்வதேச புகழ்பெற்ற மோட்டார் வாகனங்களைத் திருத்தும் மற்றும் பராமரிக்கும் சேவை நிலையமான BOSCH சேவைகள் நிலையத்தை Dimo அண்மையில் அறிமுகப்படுத்தி வைத்தது.

BOSCH தன்னியக்க இயந்திர பாகங்களில் ஆரம்பித்து மின் சக்தியில் இயங்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வரை BOSCH மற்றும் Dimo நிறுவனங்களுக்கு இடையிலான பங்காண்மையானது 6 தசாப்தங்களுக்கு மேற்பட்ட வயதுடையது.

பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் அனைத்து வாகனங்களிலும் நிபுணர்களான BOSCH சேவை நிலையமானது இன்று தன்னியக்கத் தொழில்நுட்பத்தில் உயர்நிலை வகிப்பதுடன் உங்களுடைய மோட்டார் வாகனத்திற்கு வேண்டிய அனைத்து சேவைகளையும் உயர்தரத்தில் வழங்கி வருகின்றது. ஏறத்தாழ 145 இற்கு மேற்பட்ட நாடுகளில் 15,000 இற்கும் மேற்பட்ட சேவை நிலையங்களைக் கொண்டிருக்கும் BOSCH நிறுவனம் தனித்து இயங்கும் உலகின் மிகப் பெரிய சேவை நிலையமாகும். அத்துடன் மோட்டார் வாகனங்களுக்கான அனைத்து அசல் உதிரிப் பாகங்களையும் விநியோகிக்கும் உலகின் மிகப்பெரிய நிறுவனமாகவும் விளங்குகின்றது.

### மோட்டார் வாகன சேவைகள்

BOSCH மோட்டார் வாகன சேவை நிலையத்தில் உங்களுக்கு வேண்டிய கீழ்க் காணும் அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். சிறந்த பயிற்சி பெற்றுள்ள ஊழியர்களிடம் இருந்து நிபுணத்துவ ஆலோசனைகளையும் நீடித்து உழைக்கக் கூடிய உயர்தரம் வாய்ந்த BOSCH உதிரிப் பாகங்களையும் சிறந்த விலைகளில் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். வழங்கப்படும் சேவைகளில் கீழ்வருவன உள்ளடங்குகின்றன. பரிசோதித்தல், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள், இலத்திரனியல் வேலைகள், பெற்றோல் நிரப்புதல் மற்றும் டீசல் தொழில்நுட்பம், கிரமமான பரிசோதனைகள் மற்றும் குளிரூட்டல் வசதி.

### டீசல் நிலையம்

நம்பத்தகுந்த, கட்டுப்படியான விலைகளில் செயற்றிறன் வாய்ந்த சேவைகளை இந்நிலையம் வழங்குகின்றது. BOSCH சேவை நிலையத்தில் மிக முன்னேற்றகரமான டீசல் புகையிரத திருத்த சேவைகள் உள்ளடங்கலாக உங்களின் எவ்வகையான வாகனத்திலும் டீசல் செயற்பாடுகள் சிறந்த நிலையில் உள்ளனவா என்று பரீட்சிக் கப்படும். BOSCH டீசல் சேவைகள் நிலையம் BOSCH இன் சர்வதேச டீசல் சேவைகள் நிலையத்தின் ஓர் அங்கமாக விளங்குகின்றது. அத்து டன் டீசல் வாகனங்களுக்கான அசல் உதிரிப் பாகங்களைத் தயாரிப்பதில் இந்நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.

அனைத்துவிதமான டீசல் வாகனங்களுக்குமான நிபுணத்துவ சேவைகளை BOSCH டீசல் நிலையம் வழங்குகின்றது. முன்னேற்றகரமான டீசல் தொழில்நுட்பத்தில் இயங்கும் வாகனங்களுக்கு வேண்டிய திருத்தம் மற்றும் பராமரிப்பு தொடர்பான தொழில்சார் தீர்வுகளுக்கு மேலதிகமாக இந்நிலையம் வழங்கும் சேவைகளில், அனைத்து டீசல் வாகனங்களுக்குமான பொறிமுறையை செயற்றிறன் மிக்க வகையில் பரிசோதித்தல் உள்ளடங்குகின்றது. (த)

# PCH நிறுவனத்துக்கு தேசிய வியாபாரத்துக்கான மேன்மை விருதுகள்

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வியாபார மேன்மை விருதுகள் 2011 நிகழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் பிரிவில் இரண்டாம் இடத்தை PC House PLC நிறுவனம் தட்டிச்சென்றுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செலுத்திய வாறு வியாபாரத்தில் மேன்மையை வெளிப்படுத்திய வியாபார நிறுவனங்களை இனங்கண்டு அங்கீகாரம் அளிக் கும் வகையில் தேசிய வியாபார மேன்மை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சந்தை முன்னோடி என்ற வகையில் 2010 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்த மூலோபாய வர்த்தக மீள்நாமமிடல் நடவடிக்கையைத் தொடர்ந்து தனது தீர்வுகள் வழங்கல்களை அதிகரித்தும், தனது பிரபலமான 9to9 காட்சியறையைத் திறந்துவைத்தமை அடங்கலாக கிளை விரிவாக்க நடவடிக்கைகள் மூலமாகவும், பல்வேறுபட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழிற்துறைகளில் புதிய துணை நிறுவனங்கள் பலவற்றை நிறுவியும், திறமை மிக்க தொழிற்துறை ஆளணியினரை பணிக்குள் உள்வாங்கியும் புதுப்பிக்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் புதிய வெளித்தோற்றத்தை சிறப்பாகப் பேணிவந்துள்ளது. இதை விட மேலதிகமாக நாடளாவியரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்வேறுபட்ட அறிவூட்டல் மற்றும் ஊக்குவித்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமாக தேசத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை ஆளுமைப்படுத்துவதிலும் பெரும் பங்கினை PC House நிறுவனம் ஆற்றிவந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கான ஆற்றலைத் தோற்றுவித்தும், தொழில்வாய்ப்புத் திறனை அதிகரித்தும், நிலைபேற்றியலுடனான சந்தைப் போட்டித்திறனைக் கட்டியெழுப்பியும், மிகச் சிறந்த நடைமுறைகள் மற்றும் வியாபார மேன்மையைக் கட்டமைத்தும், முதலீட்டை மேற்கொள்ளும் ஆற்றலை வெளிப்படுத்தியும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வியாபார நிறுவனங்கள் ஆற்றியுள்ள பங்களிப்புக்கள் அடங்கலாக வியாபார நிறுவனங்களுக்கு உரிய இனங்காணல் அளித்து வெகுமதியளிக்கும் வகையில் வருடாந்தம் இடம்பெற்று வருகின்ற விருதிற்கான ஒரு போட்டியாக தேசிய வியாபார மேன்மை விருதுகள் நிகழ்வு அமையப்பெற்றுள்ளது. இலங்கை வியாபாரத் தொழிற்துறையிலுள்ள மிகச் சிறந்த நிறுவனங்கள் பல இந்த ஆண்டு விருதுகள் நிகழ்வில் வெற்றி பெற்றுள்ளன. (த)

# செரண்டிப்மா நிறுவனத்துக்கு ISO 22000:2005 தரச் சான்றிதழ்

'செவன் ஸ்டார்' வர்த்தக குறியீட்டினைக் கொண்ட கோதுமை மாவின் உற்பத்தியாளர்களான செரண்டிப் மா ஆலை பிரைவேட் லிமிட்டெட் (Serendib Flour Mills (Pvt.) Ltd.) நிறுவனம் இந்தியாவின் Bureau Veritas பணியகத்திடம் இருந்து உணவுப் பாதுகாப்பு முறைமைக்கான ISO 22000:2005 தரச் சான்றிதழை அண்மையில் பெற்றுள்ளது.

முக்கியமான சர்வதேச விதிமுறைகள் மற்றும் பிரகடனங்களைக் கடைப்பிடிப்பதில் நிறுவனம் வெளிப்படுத்தியுள்ள முழுமைத்துவமான செயற்பாட்டினை அங்கீகரிக்கும் வகையில் இந்த நற்சான்றுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு முறைமைக்கான ISO 22000:2005 தரச் சான்றிதழ் ஆனது, உலகளவிலேயே உணவு தொடர்பான சான்றுபடுத்தல்களில் மிகவும் உயர்வானதும், மிகுந்த அங்கீகாரத்தைப் பெற்றதுமாக திகழ்கின்றது.

அந்த வகையில், இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்து மூன்று வருடங்கள் என்ற மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் இவ்வாறான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றதன் மூலம் SFML நிறுவனம் முத்திரை பதித்துள்ளது. (த)



கொமர்ஷல் லீசிங் நிறுவனம் (Commercial Leasing & Finance) தனது 50ஆவது கிளையை அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைத்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இக் கிளையை திறந்து வைத்தார்.

# நுண் நிதி வாடிக்கையாளர்களை மகிழ்வூட்டிய கொமர்ஷல் கிரடிட்

கொமர்ஷல் கிரடிட் தனது வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான அனுபவத்தை வழங்கி இலங்கையின் நிதித்துறையில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பருத்தித்துறை முதல் தேவேந்திர முனை வரை இலங்கை முழுவதும் பரந்து இருக்கும் 90,000 நுண் நிதியில் உள்ள வாடிக்கையாளர்களில் 5,000 தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் அவிசாவெல, கலுஅக்கலவில் உள்ள லெஷர் வேர்ல்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பலதரப்பட்ட உற்சாகமூட்டும் நிகழ்வுகளுடன் மாலை நேரத்தை செலவிட்ட அவர்கள் மொழி, கலாச்சார மற்றும் பூகோள எல்லைகளுக்கப்பால் அனைவருடனும் பழக ஒரு சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

கொமர் ஷல் கிரடிட்டுடன் இணைந்தது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்பதே அனைவரின் ஏகோபித்த குரலாக இருந்ததுடன், கொமர்ஷல் கிரடிட்டின் ஆதரவுடன் நுண் நிதி செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்பட்டதையிட்டு நன்றியுள்ளவர்களாக உள்ள னர்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனர் பி. டி. டப்ளியூ. ஏ. சில்வா, கொமர்ஷல் கிரடிட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே, தொழில் புரியும் பணிப்பாளர் திருமதி கேயா எகொடகே உள்ளிட்ட கொமர்ஷல் கிரடிட் அதிகாரிகள் மற்றும் விருந்தினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மீண்டும் எக்ஸ்போ எயார்

1997 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் உள்நாட்டு விமானசேவைகளை மேற்கொண்டுவரும் எக்ஸ்போ எயார், தனது கொழும்பு - யாழ்ப்பாண இடையிலான விமானசேவையை மீள ஆரம்பிக்கின்றது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் தொடர்ச்சியாக எந்த வித தடங்கல்களுமின்றி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் விமான சேவை களை மேற்கொண்ட நிறுவனமாக எக்ஸ் போஎயார் திகழ்கின்றது.

தற்போது தனது புதிய விமானத்தின் மூலமும் புதிய விமான கால அட்டவணையுடனும் எக்ஸ்போ எயார் வர்த்தக நோக்கில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளவர்களுக்கு ''ஒரு மணித்தியாலத்தில் யாழ்ப்பாணம்'' எனும் தனது வாக்குறுதிக்கு அமைவாக செயற்படத் திட்டமிட்டுள்ளது. புதிய செஸ்னா கிராண்ட் கரவன் 12 ஆசனங்களைக் கொண்ட விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. லெதர் ஆசனங்களைக் கொண்டதும், பிரத்தியேக வாசிப்பு விளக்குகள், காற்றுவரக் கூடிய பகுதி மற்றும் சிறிய தொலைக்காட்சி திரை மூலம் அமைதியான முறையில் திரைப்படங்களை ஒளிபரப்பும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரு பிரத்தியேக பராமரிப்பாளர்கள் மூலம் பயணிகளின் வசதியும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகிறது.

முதலாம் திகதிமுதல் தனது சேவைகளை மீள ஆரம்பிக்கவுள்ள எக்ஸ்போ எயார், கொழும்பு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து தினந்தோறும் 7.00 மணிக்கும் 16.15 மணிக்கும் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து 8.45 மணிக்கும் 16.45 மணிக்கும் தனது சேவைகளை மேற்கொள்ளவுள்ளது.

ஒரு வழிப்பயணமாக 10,000 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், இரு வழிக் கட்டணமாக 19,100 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நபருக்கும் 15 கிலோ எடையுடைய பயணப்பொதிகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்படும். மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 150 ரூபா அறவிடப்படும். பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் பயணிப்பவரின் பாதுகாப்பும் வசதியும் கருதி எக்ஸ்போஎயார் விசேடமான போக்குவரத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பெருமானின் பெயரில் முன்பள்ளிக் கட்டடம்

அளவெட்டி,பெப்.7

''சைவப் பண்பாட்டுடன் கல்விச்சாலைகள் கிராமம் தோறும் உருவாக்கப்பட வேண்டும் என விரும்பியவர் நாவலர் பெருமான். அவரது விருப்புக்கு மதிப்புக் கொடுத்து புதிய நிரந்தரக் கட்டடமாக நாவலர் பெருமானின் பெயரைத் தாங்கி முன்பள்ளி திறந்து வைப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்'' என்று செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

சுதுமலை எச்சாட்டியில், மக்களின் பெரு முயற்சியால் நாவலர் முன்பள்ளி திறந்து வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாவலர் பெருமான் காலத்தில் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கரோல்விஸ்வநாதபிள்ளை பெரும் புகழுடன் வாழ்ந்தவர் ஆவார்.

இவ்வாறாக சுதுமலையில் உயர் கல்விமான்கள் பலர் காலத்துக்கு காலம் வாழ்ந்து கல்வித் தொண்டாற்றினார்கள். சமகாலத்தில் வேம்படி மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மனிப்பாய் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி போன்ற கல்லூரிகளில் இவ்வூரைச் சேர்ந்த, கல்விமான்கள் புகழ்பூத்த அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள். அக்கல்விப் பாரம்பரியம் இன்றும் தொடர்கிறது என்றார். (ச-16-36)

## மதங்களைக் கடந்து நின்று சேவையாற்றியவர் நேசகுமார்

### நல்லை ஆதீன முதல்வர்

யாழ்ப்பாணம், பெப்.7

போர் இடம்பெற்ற காலங்களில் துணிந்து நின்று சமாதானத்துக்காக உழைத்தவர் அருள்பணி எஸ்.பி.நேசகுமார் என நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

நுவரெலியா குருமுதல்வர் அருள்பணி எஸ்.பி. நேசகுமார் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழாவும் வெள்ளி விழா மலர் வெளியீடும் அண்மையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

போர்க் காலங்களில் போர் முகத்துக்குள் இருந்த பரியோவான் கல்லூரியையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியையும் மீட்டெடுக்க பெரும்பாடுபட்டவர் நேசகுமார். பெயருக்கேற்றார் போல் சேவையாற்றி, மதங்களைக் கடந்து நின்று பணிகளைப் புரிந்தவர் என்றார்.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை யாழ்ப்பாண குரு முதல்வர்அருள்பணிஜெயந்த் ஜெயவீரசிங்கமும் வாழ்த்துரைகளை சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுச் செயலாளர் எஸ்.பரமநாதன், அருள்பணி ம.யூட் சுதர்சன் வழங்கினர்.

வெள்ளிவிழா மலரினை யாழ்.ஆயர் அதி.வண. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வெளியிட்டு வைக்க அருள்பணி எஸ்.பி.நேசகுமார் பெற்றுக் கொண்டார்.

வெள்ளிவிழா மலரின் அறிமுக உரையை சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருள் பணி என்.ஜே.ஞான பொன்ராசா நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் குருமுதல்வர்கள், அருட் சகோதரிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர். (எ-ரி-311)



மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியை திருமதி இ.நந்தாகரன் உரையாற்றுகிறார். அருகில் விருந்தினர்களுடன் வரவேற்கப்பட்ட மாணவர்களும் அமர்ந்திருக்கின்றனர். (எ)

## கல்வியால் மறுமலர்ச்சியை சமூகத்தில் ஏற்படுத்த முடியும்

### கோப்பாய் பிரதேச செயலர்

அச்சுவேலி, பெப்.7

நிரந்தரமான சமூக முன்னேற்றத்தையும் சமூக மறுமலர்ச்சியையும் கல்வியால் ஏற்படுத்த முடியும். இதனைக் கருத்தில் கொண்டு சமூக நிறுவனங்கள் கல்வி முன்னேற்றத்துக்கான பங்களிப்புக்களைக் காத்திரமான முறையில் முன்னெடுக்க வேண்டும்.

இந்த வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும் என வலி கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

அச்சுவேலி தெற்கு நவோதயா சனசமூக நிலைய பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அச்சுவேலி தெற்கு ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அச்சுவேலி தெற்கு நவோதயா சனசமூக நிலைய சமூக முன்னெடுத்தல் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். இன்று எமது சமூக சூழலில் காணப்படும் மாறுபாடான நிலைப்பாடுகள் மாணவர்களை குழப்பத்துக்குள் உள்ளாக்கி விடுகின்றது. பெற்றோரும் சமூக நிறுவனங்களும் கல்வி வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்களில் கூடிய அக்கறை செலுத்துவது பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஏற் படுத்தி கல்வியில் அக்கறை கொள்வ தற்கு வழிவகுக் கிறது.

**பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும்.**

நிரந்தரமான சமூக முன்னேற்றத்தையும் சமூக மறுமலர்ச்சியையும் கல்வி வளர்ச்சியினால் தான் எட்ட முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டு சமூக நிறுவனங்கள் தமது நிலையில் பிராந்தியத்தில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு காத்திரமான பங்களிப்பினை வழங்க முன் வர வேண்டும்.

நவோதய சமூக முன்னெடுத்தல் குழு சனசமூக நிலையப் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான பணி முன்னெடுப்புக்களை காத்திரமான முறையில் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.

பாராட்டுப் பெறும் மாணவர்கள் கல்வியால் மேல் நிலை பெறும்போது தனது வளர்ச்சிக்கு உதவிய சமூகத்திற்கு இயன்றளவுக்கு உதவ வேண்டும். நன்றியறிதலோடு பணிபுரிய வேண்டும் -என்றார். (எ-11)

## சனசமூக அபிவிருத்தி அலுவலராக தவநாயகம் நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.7

தலைமைப்பீட சனசமூக அபிவிருத்தி அலுவலராக செ.தவநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரியாக செயலாற்றிய செ.தவநாயகமே இவ்வாறு தலைமைப்பீட சனசமூக அபிவிருத்தி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் தலைமைப் பீட சனசமூக அபிவிருத்தி அதிகாரியாக பணியாற்றிய சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி க.கந்தசாமி ஓய்வுபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.7

ஊர்காவற்றுறை கரம்பொன் ஸ்ரீ ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

புதிய தலைவராக ஓ.வெற்றிவேல் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக கி.புவியும், பொருளாளராக ஹ.உஷாந்தினியும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-325)

***

யாழ்ப்பாணம், பெப்.7

பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர் தெரிவும், பொதுக்கூட்டமும் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியதைத் தொடர்ந்து புதிய நெறியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவர் வி.சுப்பிரமணியம், உபதலைவர் சு.சாந்தகுமாரன், நெறியாளர்களாக ச.செல்வரத்தினம், க.இராமச்சந்திரன், கி.கிளி போட் வில்லியம், ந.யோகலிங்கம், து.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-16)

## தமிழினத்தின் விடிவுக்காய் தன்னை அர்ப்பணித்தவர் கோப்பாய் கோமான்

### தமிழரசுக் கட்சி பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம், எமது தொகுதியில் அபிவிருத்திக்காவும், தமிழினத்தின் விடிவுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணிப்புச் செய்ததை இந்தத் தொகுதி மக்கள் என்றும் மறக்கவில்லை' என, இலங்கை தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதித் தலைவர் சி.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் ஆவரங்கால் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றபோது திருநாவுக்கரசு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

இவரது ஞாபகார்த்தமாக நீர்வேலியில் ஒரு வாழைக் குலை விற்பனைச் சங்கமும் இயங்கி வருகின்றது. இதைவிட வீதிகள் அபிவிருத்தி, சமூகப்பணியென பெரும் சேவையாற்றிய பெருமகன் என்றார்.

இந்த நிகழ்வில் நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம் பெற்றது.

தலைவராக சி.திருநாவுக்கரசும், செயலாளராக அ:பரஞ்சோதியும், பொருளாளராக க.தர்மலிங்கம் உட்பட நிர்வாக உறுப்பினராக 9 பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (எ-16)

## ஆக்கம் கோரல்

சுன்னாகம், பெப்.7

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண மட்ட தமிழ்மொழித் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டு வரும் கவின்தமிழ் சஞ்சிகை இவ்வாண்டும் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்நூலில் இடம்பெறத்தக்க ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-38)

## கைதடி தொழிற் பூங்காவுக்கு நிதியுதவி

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தொழிற்சாலை பூங்காவுக்கு பரோபகாரிகள் சிலரால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தொழில் பூங்காவில் 20இற்கும் மேற்பட்ட பார்வை இழந்தோர் தங்கியுள்ளனர். அவர்களில் சிலர் வன்னியில் இடம்பெற்ற போரினால் விழிகளை மட்டுமல்லாது கைகள், கால்கள் என அவயவங்களையும் இழந்த நிலையில் உறவுகளின் தேடலின்றி இருக்கின்றனர். இவர்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்யவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] பாகு எனும் இடத்தைச் சேர்ந்த அமரர் திருமதி சிவனருள் குணரட்ணவதியின் 31ஆம் நாள் நினைவாக அவரது குடும்பத்தினர் 15ஆயிரம் ரூபா நிதியையும், இத்தாலியில் வசிக்கும் கைதடி நவபுரத்தைச் சேர்ந்த வைரவன் சண்முகநாதன் ஒரு தொகை நிதியையும் இவ் விழிப்புலனற்றோரின் உணவுத்தேவைக்கு வழங்கியுள்ளதுடன் இனி வரும் காலங்களிலும் தாம் உதவுவதாகவும் உறுதியளித்துள்ளனர். இதே வேளை கடந்த வாரமும் மறவன்புலவைச் சேர்ந்த அமரர் எஸ். குகானந்தன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் 10000 ரூபாவை இத்தொழில் பூங்காவுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-288)

**இவர்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்யவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## இந்தியா மாறவேண்டும்

இந்த மாத இறுதியில் ஆரம்பித்து மார்ச் மாதத்தில் தொடரவுள்ள, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் என்பது அனேகமாகத் தெளிவாகிவிட்டது.

இந்தச் சபையின் உறுப்பு நாடுகள் 47. அவற்றில் ஆபிரிக்காவைச் சேர்ந்தவை 13, ஆசியாவைச் சேர்ந்தவை 13, கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவை 6, தென்னமெரிக்கா மற்றும் கரீபியாவைச் சேர்ந்தவை 8, மேற்கு நாடுகள் 6 மற்றும் அமெரிக்கா.

ஐ.நா. பாதுகாப்புச் சபையைப் போலல்லாது மனித உரிமைகள் சபையில் ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகள் எண்ணிக்கை அடிப்படையில் பலமானவை. எந்த ஒரு தீர்மானமும் அங்கு நிறைவேறுவதாயின் ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளின் ஆதரவு அவசியம். இலங்கைக்கு எதிரான பிரேரணையும் இந்த நாடுகளின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே தீர்மானமாக முடியும். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் தென்னாபிரிக்கா, இந்தியா, சீனா என்பன பெரியவை மற்றும் செல்வாக்குமிக்கவை. எந்தவொரு தீர்மானத்தின் மீதும் இந்த நாடுகள் எடுக்கக்கூடிய முடிவு ஏனைய ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தும்.

இதற்கிடையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ள தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது என்றாலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதன் தாக்கம் நேர்எதிர் விளைவுகளை உருவாக்கக்கூடும்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ஒரு காலத்தில் மேற்குலகின் ஆக்கிரமிப்பில் இருந்தவை. இவற்றின் மேற்குலக எதிர்ப்புக் குணம் இயல்பானது. அதேபோன்று வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகள் பேசிவரும் மனித உரிமைகள் என்ற எண்ணக்கருக்களை இந்த நாடுகள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சமூக, பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்கின்றன. அதனால் மேற்கு நாடுகளின் மனித உரிமைக் கருத்துக்கள் தமது பிராந்தியங்களுக்குப் பொருத்தமற்றவை என்ற சிந்தனை உடையவை. அதுவும் தவிர அமெரிக்காவின் 'தடாலடிப் போக்கால்' ஏதோ ஒரு விதத்தில் இந்த நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான எதிர்ப்பை வெளியிடும் களமாகவும் அவை மனித உரிமைகள் சபையைப் பயன்படுத்துகின்றன.

இந்தப் பின்னணிகளே 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட முன்மொழிவு தோற்கடிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தன. அந்தப் பிரேரணை தோற்கடிக்கப்படுவதையும் மனித உரிமைகள் சபையில் இலங்கையைப் பாதுகாப்பதையும் உறுதிப்படுத்தியதில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது.

சுமார் 3 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இலங்கை மீதான பிரேரணை வந்திருக்கிறது. அதற்குள் பல விடயங்கள் நடந்துவிட்டன. அரசியல் தீர்வை முன்வைக்கவும் சிறுபான்மையினருடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கை காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று இந்தியா உட்பட உலக நாடுகள் நம்புகின்றன.

இந்தப் பின்னணியிலேயே இலங்கைக்கு எதிராக இம்முறை தீர்மானம் வருகிறது. அது நிறைவேற இந்தியாவின் ஆதரவு மிக முக்கியமானது. தனது சுய நலன்களுக்காகவே இன்று வரையும் ஈழத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திவரும் இந்தியா, இந்த முறையாவது அப்படி நடக்காமல் இருக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அது உதவவேண்டும்.

இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றைக் கேட்கும் தீர்மானம் எதுவும் ஜெனிவாவில் நிறைவேறப் போவதில்லை என்பது தெளிவு. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி கோரக்கூடிய தீர்மானம் ஒன்றே நிறைவேற்றப்படக்கூடும். செய்த பல துரோகங்களுக்குப் பின்னர் இப்போதாவது இந்தியா ஈழத் தமிழர் நலன்குறித்துச் சிந்தித்து அந்தப் பிரேரணையை ஆதரிக்க வேண்டும்.

# ஆணையைத் தொலைத்த ஆணைக்குழு

defence.professionals என்னும் இணையத்தளம் வெளியிட்டுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.

இலங்கை அரசு அண்மையில் அதிக விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசு மீது யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தம் அதிகரிக்கப்பட்ட நிலையிலேயே இந்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 2009 -09 வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட மீறல்களை ஐ.நாவின் வல்லுநர் குழுவின் அறிக்கை மையப்படுத்தியுள்ளது. இதே வேளையில், 2002-2009வரை இலங்கையில் இடம்பெற்ற யுத்த விவகாரங்கள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்த சூழல் தொடர்பாகவும் யுத்த அழிவுகளிற்கும் யுத்த மீறல்களிற்கும் உண்மையான காரணங்கள் எவை என்பதை ஆராய்ந்து கண்டறிவதையே கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவானது தனது அடிப்படை ஆணையாகக் கொண்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்த போதிலும் கூட, யுத்த காலப் பகுதியில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட கொடுஞ்செயல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றை இந்த ஆணைக் குழுவின் அறிக்கையானது மூடி மறைத்துள்ளது.

இலங்கை அரசின் யுத்த வெற்றி, மற்றும் போருக்குப் பின்னான இலங்கையின் நிலைப்பாடு, நீண்ட காலம் தொடரப்பட்ட இன முரண்பாட்டை வெற்றி கொள்வதற்காக இலங்கை அரசால் எடுக்கப்படும் நகர்வுகள் போன்ற விடயங்களையே கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவானது தனது அறிக்கையில் முக்கியப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட அரசியல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களே யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைந்தமைக்கான காரணம் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிநாட்டுக் கோரிக்கைக்கு சற்றுக் குறைவாக எந்தவொரு அரசியல் தீர்வை வழங்குவதற்கான இலங்கை அரசு வேண்டுகோளிற்கு புலிகள் அமைப்பு உடன்படவில்லை என இவ்வறிக்கையில் நேரடியாகப் புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால், அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தின் கீழ் அரசியற் தீர்வொன்று வழங்கப்படுமானால், தமது தனித் தாய் நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதற்குத் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் 2001 இல் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்த புலிகள் அமைப்பு அவர்களைக் கொலை செய்தமையானது நாட்டின் [illegible]

> **ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், வான் குண்டுத் தாக்குதல்கள் செறிவாக மேற்கொள்ளப் பட்டதாலேயே பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நிரூபிக்கப்பட்டுள்ளது.**

இத்தகைய நிலைக்குப் புலிகளே காரணம் எனவும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தோல்வியடைந்தமையால் நாட்டின் சமூக-பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும் இவ் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளதுடன், மூலோபாய ரீதியான பரிணாமம் புறக்கணிக்கப்பட்டமை, 2003 இல் இடம்பெற்ற கருணா குழுவின் பிளவு, இது பின்னர் நாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பன தொடர்பாக தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் கிழக்கு மாகாணத்திலும், வன்னியிலும் இராணுவப் படைகளால் முன்னெடுக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட இரு பெரும் தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை பாதுகாப்புப் படையினர் மீது இவ் அறிக்கையானது பெரும் புகழ் பாடியுள்ளது. அதாவது யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைவரை தொடர்ந்திருந்த புலிகளின் வழங்கல் பாதையைத் தடுத்து நிறுத்தி அவர்களின் மூலோபாயத்தை ஆட்டங்காணச் செய்வதை நோக்காகக் கொண்டே கிழக்கு மாகாணம் மீதான தாக்குதலை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டிருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் பிடிக்குள் சிக்குண்டிருந்த மக்களை மீட்பதற்காகவே வன்னி மீதான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆணைக்குழுவின் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளையும் அவர்களது எச்சங்களையும் முற்றாக அழித்தமை மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டமை போன்றவற்றால் வன்னி இராணுவ நடவடிக்கையானது இலங்கையின் உள்நாட்டுப் போரில் மிக முக்கிய பகுதியாக உள்ளது.

பெருமளவிலான படையினர் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டமை மற்றும் பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் எந்தவொரு விளக்கப்பாட்டையோ அல்லது விசாரணையையோ, கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை.

5556 இராணுவத்தினரும், 22,247 விடுதலைப் புலிகளும் இப்போரின் போது கொல்லப்பட்டதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இப் புள்ளி விவரங்களை ஏற்றுக் கொள்வதில் இன்னமும் சந்தேகம் நிலவுகின்றது.

அனைத்துலக சமூகத்தால் இலங்கை அரசு மீது குற்றம் சாட்டப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல் விவகாரத்தில் பிரதானமாக இரண்டு விடயங்கள் தொடர்பாக இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்திலும் அதன் பின்னரும் இலங்கை அரசால் மனிதாபிமான மற்றும் மனித குலத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை இவ் அறிக்கை ஏற்கமறுத்துள்ளது. புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிகள் மீது மிகக் கவனமாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அத்துடன் இத்தாக்குதலின் போது பொதுமக்களின் பாதுகாப்பற்கு அதி முன்னுரிமை வழங்கப்பட்டதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் புலிகள் அமைப்பு அனைத்துலக போர்ச் சட்டத்திற்கு முரணாக, பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் இவ் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலைப்பாட்டில், சனல் 04 தொலைக் காட்சிச் சேவையால் தயாரிக்கப்பட்ட சிறிலங்காவின் கொலைக் களங்கள் என்ற ஆவணப்படமானது, இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது உண்மையில் என்ன நடந்தது என்பதை மிகவும் யதார்த்தமாக வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

இதில் இலங்கை இராணுவப் படைகளால் மிகைப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்ட யுத்த செயற்பாடுகளால் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான சாட்சியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கப்பால், ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், வான்குண்டுத் தாக்குதல்கள் செறிவாக மேற்கொள்ளப்பட்டதாலேயே பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தாக்குதல் வானூர்திகளை வைத்திருந்த போதிலும், அவர்களது வான் தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான எந்தவொரு சாட்சியங்களும் இல்லை என்பதும் அறிந்ததே. புலிகள் அழிவுமிக்க ஆயுதங்களையும், வெடிபொருள்களையும், யுத்த தளபாடங்களையும் தம் வசம் வைத்திருந்தால், அவர்கள் அவற்றை இராணுவப் படைகளுக்கு எதிராகப் பயன்படுத்தியிருப்பார்கள்.

ஆகவே, கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணையானது குறுகிய பார்வையைக் கொண்டுள்ளது எனலாம்.

இவ் அறிக்கையின் ஆறு தொடக்கம் ஒன்பது வரையான அத்தியாயங்களில் போருக்குப் பிந்திய மீள்குடியமர்வுகள், நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கப்பாடு போன்றவை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்களிற்கு காணிகளை ஒதுக்கி அவர்களை அங்கே மீளக்குடியமரச் செய்தமைக்காக கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவானது இலங்கை அரசைப் பாராட்டியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள இலங்கை நில மற்றும் உடைமைச் சட்டத்தின் கீழ், உள்நாட்டில் இடம்

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் செயற்பாடுகள் உணர்த்தி நிற்பவை எவை?

வி.எஸ்.ரி.

யுத்தங்களில் சிக்கிச் சீரழிந்த பல நாடுகளின் பொது மக்கள், யுத்தம் முடிவுற்ற பின் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்துப் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்ததுண்டு. யுத்தத்துக்கு முகம் கொடுத்த பல நாடுகள் யுத்த முடிவின் பின்னர் விரைவான பொருளாதார அபிவிருத்தியை எட்டிய வரலாறு குறித்து அவர்கள் அறிந்திருந்தமையே அதற்கான காரணமாகும். மறுபுறம் யுத்தம் காரணமாகவே நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், யுத்தம் முடிவடைந்தால் நாட்டின் பொருளாதார நிலை விரைவாக முன்னேற்றம் காணும் எனவும் நாட்டின் தலைவர்கள் யுத்தத்தின் மீதே முழுப் பழியையும் சுமத்தியும் வந்துள்ளனர்.

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான 2010 - 2011 ஆண்டுகள் காலப் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி வேகம் 10 - 12 வீதம் வரை உயருமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இலங்கையால் அந்த இலக்கைஎட்டமுடியவில்லை.

உலகப் பொருளாதார மந்த நிலை மற்றும் நாட்டின் ஆட்சியாளர்களின் இயலாமையுமே இதற்கான காரணமாகும். வெளிநாட்டு முதலீட்டு வீழ்ச்சி, பங்குச் சந்தைத் தளம்பல் நிலை, மேலதிக கடன் பெறுவது தொடர்பாக தனியார் துறைகளில் நிலவிய சிக்கல்கள் என்பனவே நாட்டின் விரைவான பொருளர்தார வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்திய காரணிகளாகும். நாட்டின் உள்ளகச் சிக்கல்களும் இதற்கோர் காரணமாக அமைந்திருந்தன. தற்போதைய பொருளாதார அபிவிருத்தி வேகம் எட்டு வீதமென அரசு கூறிக் கொண்டாலும், அது நாட்டு மக்களது வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை.

> சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிகள் மற்றும் கடன்களை வழங்கி உதவுவதாகக் கூறப்பட்டாலும், பெறும் கடனுக்கு அதிக வட்டி செலுத்த நேருவதுடன், குறிப்பாக சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் பணி புரிய அந்த நாட்டுத் தொழிலாளர்களையே பெருமளவில் பயன்படுத்த வேண்டிய நிபந்தனைகளுடனான ஒப்பந்தங்களாகவே அவை அமைகின்றன

யுத்தத்தின் பின்னர் நாட்டின் பொருளாதார உயர்ச்சி இந்த மட்டத்துக்கு உயர்வடைந்தமை, உண்மையான உயர்வுதானா அல்லது இது வரை காலமும் கணக்கில் எடுக்கப்படாத பொருளாதாரக் காரணிகள் யுத்தத்தின் பின்னர் கணக்கில் சேர்க்கப்பட்டதன் காரணமானதா என்பது சிக்கலுக்கு உரியதொரு வினாவே ஆகும். நாட்டின் பொருளாதாரக் காரணிகளைத் தற்போதும் மத்திய வங்கி மற்றும் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் போன்றவையே நிர்ணயித்து வருவதும், தெரிவிக்கப்படும் பொருளாதார உயர்ச்சி விகிதம் முற்றிலும் சரியானது தானா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக் காரணமாகிறது.

நாட்டின் பொருளாதாரம் எட்டு வீதம் வரையான வளர்ச்சி கண்டிருக்குமானால், அது நாட்டு மக்களது வாழ்க்கை நிலையிலும் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆயினும் அத்தகைய மாற்றமொன்று ஏற்பட்டுள்ளதாகக் கருத முடியவில்லை.

பணியாளர்கள் எனக் கணக்கிடத் தக்கவர்கள் குறித்து கணக்கெடுப்பதில் ஏனைய நாடுகள் கடைக்கொள்ளும் நடைமுறைக்கும், எமது நாட்டில் பின்பற்றப்படும் நடைமுறைக்கும் நிறையவே வேறுபாடு உண்டு. ஒரு நாளில், ஓரிரு மணிநேரமோ, அல்லது ஊதியம் பெற்றோ, பெறாமலோ சேவையொன்றில் ஈடுபடும் நபரொருவரும் கூட இலங்கையில் பணியாளர் என்ற நிலையில் வைத்துக் கணக்கிடப்படுகின்றார்.

மற்றொரு புறம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது எனக் கொண்டாலும் கூட, அது வழங்கல் தரப்பில் ஏற்பட்ட வளர்ச்சியல்ல. முற்று முழுதாக அது கோரல் தரப்பின் உயர்ச்சியே. இதனாலேயே அது பொது மக்களின் நாளாந்த வாழ்க்கை நிலையில் புறமொதுக்கப்பட நேர்கிறது.

தெரிவிக்கப்படும் அடிப்படையில் அல்லாதுவிடினும், சிறு அளவொன்றாகவாவது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆயினும் அதேவேளை அதற்குச் சமமாக வங்கிகளின் திரவப் பணச்சிக்கல், கடன் மற்றும் வைப்பு என்பவற்றுக்கு இடையேயான விகிதாசார பின்னடைவு, பங்குச் சந்தை சுட்டிகளின் வீழ்ச்சி என்பவையும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

நாட்டின் உல்லாசப் பிரயாணத் துறையிலும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையும் உண்மையே. ஆயினும் மிகப் பெரும் வசதிபடைத்த உல்லாசப் பயணிகள் தரப்பினரால் ஒரு சிறு தொகையினரே இலங்கை வருவதால், உல்லாசப் பயணிகளினால் கிட்டும் வெளிநாட்டுச் செலாவணி திருப்திகரமாக அமைவதில்லை.

இவைதவிர நாட்டின் ஆட்சியாளர்கள் வேறு நாடுகளுடன் மேற்கொண்ட பலதரப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிட்ட அளவு பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாகின்றன. முன்யோசனையின்றி யுத்தத்துக்கு முன்னர் இலங்கை அரசு சில நாடுகளுடன் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக, யுத்தம் முடிவடைந்த நிலையிலும், தற்போதும் இலங்கை அரசு யுத்த உபகரணங்கள், மற்றும் விமானங்களை வெளிநாடுகளிடமிருந்து கொள்வனவு செய்தாக வேண்டியுள்ளது.

சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிகள் மற்றும் கடன்களை வழங்கி உதவுவதாகக் கூறப்பட்டாலும், பெறும் கடனுக்கு அதிக வட்டி செலுத்த நேருவதுடன், குறிப்பாக சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் பணி புரிய அந்த நாட்டுத் தொழிலாளர்களையே பெருமளவில் பயன்படுத்த வேண்டிய நிபந்தனைகளுடனான ஒப்பந்தங்களாகவே அவை அமைகின்றன. இதனால் சமூகச் சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்பு அமைவது மட்டுமன்றி, வேலைவாய்ப்பின்மையால் சிரமமுறும் இந்த நாட்டு இளம் சமூகத்தினரை அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கி வேலை வாய்ப்பளிக்க இயலாத நிலையும் ஏற்படுகிறது.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு உதவிகள் அவசியமே. ஆயினும் அத்தகைய உதவிகளுக்காக மேற்கொள்ளப்படும் நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட அளவுக்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு அரசு அத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை அரசு கையேற்றுச் செயற்படுத்துவதென்ற அரசின் தீர்மானம் புத்திசாலித்தனமான தொன்றல்ல.

அபிவிருத்தி இலக்கினூடாக 35 சதவீத முதலீட்டு மட்டமொன்றை உருவாக்க இயலுமென அரசு கருதுகிறது. ஆயினும் அரசு தான் மேற்கொள்ள எதிர்பார்க்கும் முதலீடுகள் ஆறு சதவீதமானதே. ஏனைய முதலீடுகள் அனைத்தையும் தனியார் துறையினூடாக நிறைவேற்றிக் கொள்வதே அரசின் திட்டம். ஒரு புறம் இத்தகைய எதிர்பார்ப்பை வைத்துக் கொண்டு, மறுபுறம் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவன்ங்களைப் பொறுப்பேற்க முயலும் அரசின் இப்போக்கு முதலீட்டாளர்களுக்கு தயக்கத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தும் என்பது உண்மையே.

எதிர்க்கட்சியிலிருந்து அரசுடன் இணைந்து கொள்ளும் அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் வர்த்தகர்களே. தமது வர்த்தக முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளும் நோக்கிலேயே அத்தகையோர் ஆளும் தரப்பில் இணைந்து கொள்கின்றனர். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசு பொறுப்பேற்பதென்ற செயற்பாடு, தனியார் துறைக்கான அபாயச் சமிக்ஞையாகக் கொள்ளத் தக்கதே.

அவ்வாறானால் இலங்கையில் வர்த்தக நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டுமானால், அரசியல் உயர் மட்டத்தினருடனான நெருக்கமான உறவு அவசியம் என்பதை அரசின் செயற்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன. ✱

# சரியான வழிகாட்டல் அவசியம்

இனியன்



பாடசாலைகளுக்கு இடையே விளையாட்டுத் துறையை வளர்க்கும் நோக்கோடு 2012 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் 94/1 சுற்று நிருபத்தில் 15 வயது பிரிவினருக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான பட்மின்ரன், கபடி, மேசைப்பந்தாட்டம் மற்றும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் மேலதிகமாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

இதேவேளை, வடமாகாண மட்டப் போட்டிகளில் 19 வயது பிரிவு ஆண்களுக்கான ரெனிஸ் போட்டி, கராத்தே,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பளு தூக்கும் போட்டி 15,17,19, வயது ஆண், பெண் இருபாலாருக்குமான நீச்சல் போட்டி ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஆனால், வெறுமனே போட்டிகளை உள்வாங்கினால் மட்டும் நன்மை ஏற்படப்போவதில்லை. மாறாக பாடசாலை மட்டத்தில் உள்வாங்கப்பட்ட போட்டிகளுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, குறிப்பாக பயிற்றுனர்களை, பட்டம் பெற்ற பயிற்றப்பட்ட பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் ஆரம்ப பாடசாலை முதல் அனைத்து பாடசாலைகளுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கமைய பயிற்சியாளர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் தற்போது கல்வியற் கல்லூரிகள் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு சில பாடசாலைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற விளையாட்டுத்துறை பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. ஆரம்பத்தில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டாலும் இன்னும் சுமார் 350 பேர் தொழில் இன்றி உள்ளனர்.

இவர்களுக்கு பாடசாலைகளில் உடற்பயிற்சி ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதன் மூலம் பாடசாலைகளில் நிலவும் உடற்பயிற்சி ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். அவர்களது பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படும்.

குறிப்பாக 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் அ.விதன் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் 170 கிலோகிராம் பளுதூக்கி வெண்கலப் பதக்கத்தினை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உடற்பயிற்சிகளுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் இலைமறைகாயாக உள்ள வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்ற வைக்கமுடியும்.

எமது மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறன்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறான வகையில் நாம் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமோ அவ்வாறான வகையில் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் அவசியம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டத்தில் அரோஹரா

ஒருமுறை மிகப் பெரிய ஓவியக் கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோ வரைந்திருந்த படத்தின் முன்பாக மக்கள் கூட்டம் அலை மோதியது. "பாராட்டுவதற்கு வார்த்தைகள் போதாது" என்றார் ஒருவர். மற்றவர் கோணத்தை வியந்தார். வண்ணத்தை ஒருவர் கொண்டாடினார். உண்மையில் ஒருவராலும் அந்த ஓவியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்போதுமே புரிந்து கொள்ள முடியாத விடயத்திற்குப் பாராட்டு அதிகமாவது இயல்பு. அப்படிப்பட்ட சிரமமான ஒன்றைப் புரிந்து கொள்ளும் அதிமேதாவி 'தான்' என்று வெளிப்படுத்த கிடைத்த ஒரு வாய்ப்பு அல்லவா அது..... எனவே பாராட்டு மழை கொட்டியது... பாராட்டுப் புயலாகக் கூடிய வேளையில் பிக்காஸோ கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே நுழைந்து, அதிர்ந்து போய்க் கேட்டார்... "எந்த மடையன் இதை மாட்டினான்.... இப்படித் தலைகீழாகவா மாட்டுவது..? படத்தில் உள்ள கையெழுத்தைப் பார்த்தாவது நேராக மாட்டி இருக்கலாமே?" என்றார். கூட்டம் இப்போது என்ன கதிக்கு ஆளாகியிருக்கும்.. ஒரு கணம் சிந்தியுங்கள்.

இன்று எல்லோருமே ஒரு கூட்டத்தின் அங்கீகாரம் என்பதற்காக மிகவும் ஏங்குகிறார்கள். ஆனால் எப்போதுமே ஒரு கூட்டத்தின் அங்கீகாரம் அவ்வளவு உண்மையானதல்ல... இரண்டு பேர் கைதட்ட ஆரம்பித்தால் கூட்டத்தில் இருக்கிற எல்லோரும் கை தட்டுவார்கள். இப்படி கை தட்டுவதற்காகவே எடுபிடிகளை ஏற்பாடு செய்து வைத்திருக்கும் பேச்சாளர்கள் சிலரைக் கூட நான் அறிவேன். இன்னும் ஒன்று. விவரம் புரியாமல் இரண்டு பேர் ஒருவரை வசைபாடத் தொடங்கினால் பத்துபேர் அவரோடு சேர்ந்து கொள்வார்கள். ஒரு கூட்டத்துக்கு எப்போதும் சுய சிந்தனை கிடையாது, நியாய, நீதிகள் கிடையாது. நிதானம் கிடையவே கிடையாது. வேகம், வெறி இவை கூட்டத்தின் இயல்பு. நல்லதோ கெட்டதோ அதில் ஒரு மிருகத்தனம் வெளிப்பட்டுவிடும்.

இரவில் ஒரு தெருநாய் குரைத்தால் அக்கம் பக்கத்தில் இருக்கிற நாய்கள் எல்லாம் கூடக் குரைக்க ஆரம்பித்துவிடும். ஏன் குரைக்கிறோம்... எதற்குக் குரைக்கிறோம், யாரை எதிர்த்துக் குரைக்கிறோம் என்றெல்லாம் எந்த நாயும் கவலைப்படுவதே இல்லை. நாம் குரைப்பதால் குறைந்தபட்சம் என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றிக் கூட அவை யோசிப்பதே இல்லை. இன்றைக்கும் நுட்பமாகத் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளில் கூட மனிதர்கள் இதே மாதிரி நடந்து கொள்கிறார்கள். அதனால்தான் பல பிரச்சினைகளைத் தீர்க்கவே முடிவதில்லை.

ஒரு வேடிக்கையான கதை. ஒரு குறிப்பிட்ட மதத்தவர் மட்டுமே குளிக்க அனுமதி பெற்ற குளம் அது. அதில் ஒருவர் தன் மகனுடன் குளிக்கப் போனார். காவலர் அவரைத் தடுத்து நிறுத்தி " உங்களைப் பார்த்தால் எங்கள் மதத்தவர் மாதிரித் தெரியவில்லை. உங்களைக் குளிக்க அனுமதிக்க முடியாது" என்றார். உண்மைதான் "நான் வேற்று மதம்... நான் ஒதுங்கிக் கொள்கிறேன். பிரச்சினை இப்போது என் மகன்; அவன் தாய்... அதாவது என் மனைவி உங்கள் மதம்தான். எனவே அவன் பாதி என் மதம்... பாதி உங்கள் மதம்... அவனை எப்படி நீங்கள் தடுக்க முடியும். 50 வீதம் உங்கள் மதம் அதனால் 50 வீதம் குளிக்க அவனை நீங்கள் அனுமதிக்க வேண்டும். வேண்டுமானால் இடுப்பு வரை அவன் குளித்துக் கொள்வான். தலைக்குக் குளிக்கமாட்டான். இதை நீங்கள் தடுத்தால் நான் வழக்கு மன்றம் செல்வேன்" என்று கூச்சலிடத் தொடங்கினார். அவரது வாதத்தில் நியாயம் இருந்தாலும் குளித்துக் கொண்டிருந்த பலர் அடிதடியில் இறங்கிவிட்டனர்.

கோடிக்கணக்கான மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும் கூட ஒன்றிரண்டு நீதிபதிகள் அல்லது அதிகபட்சம் பத்துப் பதினைந்து நீதிபதிகள் தான் தீர்வு காணுகிறார்கள். கோடிக்கணக்கானவர்களின் பிரச்சினைகளைக் கோடிக்கணக்கானவர்களே பேசித் தீர்க்க வேண்டும் என்றால் பிரச்சினைகள் ஒரு போதும் தீராது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டத்திற்கு அறிவு வேலை செய்யாது. வெறும் உணர்ச்சி தான் அதன் உந்து சக்தி. உலகின் பெருவாரியான மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் கூட்டத்தில் இருந்து விலகிச் சிந்தித்தவர்கள்தான். பிரச்சினைகளை உண்டாக்கியது கூட்டம்தான்.

அதனால்தான் நாட்டு நலனில் அதிக அக்கறையின்றித் தங்களைப் பெரிய தலைவனாக்கிக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் மிக அதிக கூட்டங்களைக் கூட்டுவதில் அக்கறை காட்டுகிறார்கள். ஜாதி, இனம், மதம், மொழி என்று ஏதோ ஒரு நெருப்பைக் கொளுத்திப் போடுவதற்குப் பெருங்கூட்டங்கள்தான் வசதியான வைக்கோல் போர். ஒரு தனி மனிதனைப் பைத்தியமாக்குவது கஷ்டம். ஆனால் ஒரு கூட்டத்துக்குப் பைத்தியம் பிடிக்க வைப்பது வெகு சுலபம். அதைச் செய்பவர்கள் வெகு சுலபத்தில் அந்தப் பைத்தியங்களின் தலைவராகி விடலாம்.

ஒரு பிரச்சினை என்று வந்தால் அதற்குச் சம்பந்தமே இல்லாமல் கடைகளின் கண்ணாடியை நொறுக்கவும், பஸ்களை எரிக்கவும், போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைக்கவும் ஒரு மனிதனுக்கு மனம் வராது. ஆனால் ஒரு கூட்டம் இதைவிட அசிங்கமான அராஜகமான வேலைகளை எல்லாம் அநாயசமாகச் செய்யும். தனி மனிதனுக்கு ஓரளவு நியாய அநியாய உணர்வு உண்டு, சிந்திக்கும் திறன் உண்டு, பண்புகள் உண்டு, கூச்சம் உண்டு, இரக்கம் உண்டு, சிந்திக்கும் திறன் உண்டு. பண்புகள் உண்டு கூட்டத்துக்கு இவை எதுவும் கிடையாது.மிருக வெறி மட்டுமே உண்டு.

ஒரு பெரிய கோயிலின் புகழ் பெற்ற திருவிழா இரவெல்லாம் நடந்தது. பெரும் கூட்டம். ஆனால் மறுநாள் காலை அந்தக் கோவிலுக்கு உள்ளேயே போக முடியவில்லை.. அவ்வளவு துர்நாற்றம் ..கோயிலுக்குள்ளேயே பலர் சிறுநீர் கழித்து எத்தனை அசிங்கப்படுத்தி இருக்கிறார்கள். தனி மனிதனுக்கு கோயிலுக்குள் சிறுநீர் கழிக்கத் துணிவு வராது.ஆனால் கூட்டத்துக்குக் கூச்சம் துளியும் இராது.

எல்லாவற்றையும் விட மிகப் பெரிய கொடுமை . தனது எல்லா தர்ம மீறல்களையும், புனிதமான ஏதாவது ஒரு காரணத்தின் பின்னால் நிறுத்திவிடுவது தான் கூட்டத்தின் தனித் திறன். இரக்கம், நியாயம் எவையும் அற்ற சில தீவிரவாதிகள் பச்சைப் பிள்ளைகளையும், சில இளம் பெண்களையும் தங்கள் பாதுகாப்புக் கவசமாக முன்னால் நிறுத்திக் கொண்டு சமூகத்தின் கைகளைக் கட்டிப் போட்டு விடுவார்களே..அது போல கடவுளுக்காக, மனித நேயத்திற்காக,ஒற்றுமைக்காக,நாட்டுக்காக என்று ஏதாவது ஒரு புனிதமான ஒரு கவசத்தை முன் வைத்து சகல நியாயங்களையும் வாய் மூடவைத்து விட்டு சரமாரியாக அநியாயம் செய்யும் சாமர்த்தியம் ஒரு கூட்டத்தின் உச்சக்கட்ட அயோக்கியத்தனம்.

சில பேர் தனியாக இருக்கவே விரும்ப மாட்டார்கள். எப்போதும் கூட்டத்தோடு கூட்டமாகவே இருக்க விரும்புவார்கள். இது நல்லதல்ல.. பலரோடு மட்டுமே இருந்தால் போதுமா? உங்களோடு மட்டுமே நீங்கள் இருக்க வேண்டாமா? உங்களுடன் கொஞ்ச நேரமாவது தனியாக இருங்கள். அவ்வப்போது தனிமையை நேசியுங்கள்..பத்துப் பேருக்கு மத்தியில் உங்கள் தனிமையைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள் தைரியத்துடன் இருங்கள். அதன் பின் உங்களுக்குள் எத்தனை மாற்றங்கள் நிகழும் தெரியுமா?




சுகி.சிவம்

# பல்வேறு கடன் திட்டங்களை வழங்கும் சதாவதானி சி.க.கூட்டுறவுச் சங்கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

[illegible]லோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களுக்கு வழங்கிவந்த வாழ்வாதார சேவையைக் கண்டு திருப்தியடைந்த இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலர், புதிதாக அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டனர். கடன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கடன் தொகையும் ஆயிரம் ரூபாவிலிருந்து இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. கடன்பெறுவோருக்கான வட்டித் தொகையும் 18 வீதத்திலிருந்து 12 வீதமாகக் குறைக்கப்பட்டது. அங்கத்தவர்களுக்கான சேமிப்புப் பணத்துக்கு வட்டி 12வீதமாக்கப்பட்டது. அந்த லாபத்தில் 10 வீதம் பங்கு லாபமாக ஒதுக்கப்பட்டது. நிர்வாகசபை உறுப்பினர்கள் 7 இலிருந்து 9 ஆக உயர்த்தப்பட்டது.



சங்கத்தால், ஆரம்பத்தில் சேமிப்புக்கு எதிரான கடனை வங்கியில் பெற்று அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கடனாக வழங்கப்பட்டது. தொடர்ந்து புனர்வாழ்வுக்கடன், வீடமைப்புக்கடன் போன்ற கடன்களும் வழங்க ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் மரணசகாயநிதி வழங்கல் முறையும் ஆரம்பிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. முதலாவது பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் மரணமான சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவரும்,சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகர்த்தாவும்,மேலைப்புலோலிக் கிராமத்தின் வளர்ச்சிக்காக,அபிவிருத்திக்காக உழைத்தவருமான மூத்த பிரஜை அமரர் மு.ஸா.வீரவாகுவின் குடும்பத்தினருக்கு முதலாவது சகாயநிதி வழங்கப்பட்டது.

ஒருவருட காலத்துக்குள் இணைந்து கொண்ட சுமார் 50 அங்கத்தவர்களில் 37 பேர் அதே வருடத்தில் சுயதொழில்களுக்கு ஊக்கு விப்புக்கடன், வீடமைப்புக்கடன், புனர்வாழ்வுக் கடன்களைப் பெற்றிருந்தனர் என்பது விசேட அம்சமாகும். ஆரம்பகாலமான ஒருவருடகால வளர்ச்சியில் 25 ஆண்டுகால வளர்ச்சிக்கு இந்தச் சங்கம் பயணிக்க அடித்தளமிட்டது என்றால் மிகையாகாது.

> ஒருவருட காலத்துக்குள் இணைந்து கொண்ட சுமார் 50 அங்கத்தவர்களில் 37 பேர் அதே வருடத்தில் சுயதொழில்களுக்கு ஊக்குவிப்புக் கடன், வீடமைப்புக் கடன், புனர்வாழ்வுக் கடன்களைப் பெற்றிருந்தனர் என்பது விசேட அம்சமாகும்.

இந்தச் சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மோ. சிவமயம் யாழ். மாவட்டத்தில் சிறப்பாகவும், மிகத்திறமையாகவும் இயங்கிவரும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில் இந்தச் சங்கமும் ஒன்று எனப் பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் விபத்தினால் சிக்குண்டு சுகவீனமடைந்து செயல் இழந்த நிலையில் இருக்கும் அங்கத்தவர்களுக்கு, மாதந்தோறும் 500 ரூபா வீதம் நிதி வழங்க வேண்டும். அதற்கென அங்கத்தவர்களிடமிருந்து தலா 3 ரூபாவீதம் சேகரிக்கப்பட்டு விபத்து நிதி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என சங்க அங்கத்தவர் க.தங்கராசா பிரேரித்த பிரேரணை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அத்துடன் அங்கத்தவர்களின் திடீர்த் தேவைக்கு சிறுதொகைப் பணத்தைக் கொடுத்து உதவுவதற்கும் நிதித்திட்டம் ஒன்று தனியே ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் புதிய தலைவராக வே.மார்க்கண்டேயபிள்ளையும் உபதலைவராக ப.கிருஷ்ணபிள்ளையும், செயலாளராக ச.கைலைநாதனும், தனாதிகாரியாக க.வேலாயுதமும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் ஆரம்பகாலத்தில் அங்கத்தவர்களுக்கு ஆயிரம் ரூபா மட்டுமே கடனாக வழங்கப்பட்டு வந்தது. சங்கத்தின் முதலாம் ஆண்டுடன் அங்கத்தவர்களுக்கான கடன்வசதி ஆயிரம் ரூபாவிலிருந்து இரண்டாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டு சில மாதங்களுக்குள் அங்கத்தவர் ஒருவர் பெறும் கடன் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அத்துடன் சேமிப்புப்பணமும் 10 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக உயர்த்தப்பட்டது. கிராமிய வங்கியில் சேமிப்புக்கு எதிராக மொத்தக் கடனாக 50ஆயிரம் ரூபா பெறப்பட்டுவந்தது. இக்காலகட்டத்தில் கடன் வசதிகளைப்பெறும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 40 பேராக உயர்ந்தது.

சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டத்தில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சங்கத்தின் ஆரம்பகர்த்தா அமரர் மு.ஸா.வீரவாகுவின் மரணம் குறித்து இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்கத்தின் நடவடிக்கைகளை மென்மேலும் வலுப்படுத்துவதற்கும், செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்குடனும் மாதந்தோறும் நிர்வாக சபைக் கூட்டத்தை நடத்தவேண்டும் என்று பெண் அங்கத்தவரான திருமதி பொ.இரத்தினசோதி கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு அதன் பின்னர் பிரதி மாதம் தோறும் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டங்கள் நடைபெற்றுவந்தன.

சுயதொழில் முயற்சிக்கடன், புனர்வாழ்வுக்கடன், வீடமைப்புக்கடன், மரணசகாயநிதி போன்ற பல்வேறு நலத்திட்டத்துடன் சங்கத்தின் முதலாமாண்டு நிறைவுடன் சங்க அங்கத்தவர்களிடம் மாதந்தோறும் 50 ரூபாவைப் பெற்று குலுக்கல் முறையிலான சீட்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதுதவிர பிற்காலத்தில் அங்கத்தவர் ஒருவர் விபத்து அல்லது நோய் அல்லது வயோதிபம் காரணமாக முடங்கிப் போயிருந்தால் அவர்களுக்கு உதவுவதற்கென விபத்துநிதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதிக்கு அங்கத்தவர் ஒருவரிடமிருந்து மாதந்தோறும் 3 ரூபா அறவிடப்படத் தீர்மானிக்கப்பட்டது. விபத்து நிதிக்குத் தெரிவாகும் அங்கத்தவர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபா வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

முதலாவது பொதுக் கூட்டத்தையடுத்து கடந்த 1988 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிதாக மேலும் 11 அங்கத்தவர்கள் சங்கத்தில் இணைந்து கொண்டனர். 5 ஆயிரம் ரூபா கடன் திட்டத்தை முதன் முதலில் 5 பேருக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டு, இக் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கத்தவர்களான செல்வி.த.தமிழரசி, திருமதி.ப.துரைசிங்கம், கோ.சின்னையா, சு.ஆனந்தராசா, சு.மங்களபூரணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு முதன்முதலாக தலா 5 ஆயிரம் ரூபா அவர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது.

இதே கூட்டத்தில் அங்கத்தவர்கள் மத்தியில் 20 ரூபா, 50 ரூபா கொண்ட சீட்டுக்களை குலுக்கல் முறையில் ஆரம்பிப்பதற்கான திட்டம் ஏற்கப்பட்டு 50 ரூபா பெறுமதியான சீட்டில் இணைந்து கொள்ள 17 பேர் முன்வந்தார்கள். *(தொடரும்)*

கர்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர் மூவர் தமிழகத்தில் கைது

இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு தப்பிச்செல்ல முயற்சித்த மூவர் தமிழக கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து இந்திய ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ராமேஸ்வரம் அந்தோணியார் கோயில் கடற்கரையில் கியூ பிரிவுப் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது கடற்கரையில் ஒரு படகில் பதுங்கியிருந்த 3 பேரை பிடித்து விசாரணை செய்தனர். விசாரணையில் அவர்கள் இலங்கையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த அப்துல் சலாம் (வயது 54) சுசீந்த நிஷாந்தன் (வயது 43) முகமது காதர்(வயது 49) என்பது தெரியவந்தது.

தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் அப்துல் சலாம், சுசீந்த நிஷாந்தன் ஆகியோர் கடந்த 2001 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் 30 கிலோ ஹெரோயின் கடத்தி வந்தபோது கைது செய்யப்பட்டு சென்னையில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் என்ற தகவல் கிடைத்தது.

புழல் சிறையில் இருந்து 10 ஆண்டுகளுக்கு பின்னர் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தான் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேபோல் முகமது காதர் என்பவர் கடந்த 2003 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு வந்து தங்கியிருந்து விமானம் மூலமாக பொருள்களை அனுப்பும் வேலை களைச் செய்து வந்தார் என்பதும் தெரிய வந்தது.

இந்தநிலையில் இவர்கள் 3 பேரும் மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடிவு செய்து நாகர்கோவிலைச் சேர்ந்த படகு முகவர் சித்திக் என்பவர் மூலமாக இலங்கைக்கு சட்டவிரோதமாகச் செல்ல முடிவு செய்தனர். இதற்காக படகு முகவர் சித்திக்கிடம் தலா இந்திய ரூ.40 ஆயிரம் வீதம் மொத்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளனர்.

> 3 பேரும் மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடிவு செய்து நாகர்கோவிலைச் சேர்ந்த படகு முகவர் சித்திக் என்பவர் மூலமாக இலங்கைக்கு சட்டவிரோதமாகச் செல்ல முடிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து ராமேஸ்வரம் கடற்கரையில் பதுங்கி இருக்க வேண்டும் என்றும் பிளாஸ்ரிக் படகு வந்தவுடன் அதில் ஏறி இலங்கைக்குச் சென்று விடுமாறும் சித்திக் தெரிவித்துள்ளார். அதன்படி 3 பேரும் இலங்கைக்குச் செல்வதற்காக படகுக்காக கடற்கரையில் காத்திருந்தனர். அப்போது தான் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

எந்த ஆவணங்களும் இல்லாமல் சட்டவிரோதமாக படகில் ஏறி இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற அப்துல் சலாம், சுசீந்த நிஷாந்தன் ,முகமது காதர் ஆகியோரை கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்து ராமேஸ்வரம் கோயில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதையடுத்து பொலிஸார் அவர்கள் 3 பேர் மீதும் குடிவரவுச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். இவர்கள் 3 பேரையும் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் பொலிஸார் சிறையில் அடைத்தனர். மேலும் இந்த வழக்கு தொடர்பாக படகு முகவர் சித்திக் உள்பட உள்ளூரைச் சேர்ந்த சிலரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (வ)

## செயலமர்வு பிற்போடல்

வலிவடக்கு, பெப்.7

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் 1எ பி 1சி மற்றும் தரம் 11 பாடசாலைகளின் அதிபர்களுக்கு இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற இருந்த செயலமர்வு மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட செயலமர்வு ஏற்கனவே திட்டமிட்டமைக்கு அமைவாக எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (வ-86)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

தென்மராட்சி,பெப்.7

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளில் கற்கும் சிறார்களுக்கு கொழும்பு நிறுவனத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

அடுத்த வருடம் பாடசாலைகளில் இணையவுள்ள முன்பள்ளிகளில் கற்கும் 800 சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)




வடமராட்சி, பெப்.7

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் தைப்பூசத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் விசேட பூசைகள் வழிபாடுகள் என்பனவற்றுடன் சுவாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

குழந்தைகளுக்கு பால் பருக்குதல், தோடு குத்துதல் உள்ளிட்ட பல்வேறு நன்மைக் காரியங்களை சந்நிதி முருகன் கோவிலில் மேற்கொண்டு பக்தர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றுவார்கள். (வ-8)

* * *

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய தைப்பூசத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது விசேட அபிசேகமும் இடம்பெற்று இன்றைய தினம் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பமாகவுள்ளன.

கடந்த 20 வருடங்களாக பூசை வழிபாடுகள் இன்றி சிதைவடைந்த இந்த ஆலயத்தில் தற்போது பூசைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (வ)

* * *

யாழ்ப்பாணம், பெப்.7

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது தொடர்ந்து திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 20 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் 21 ஆம் திகதி தீர்த்தத் திரு விழாவும் இடம் பெறும். (வ)

## முகமாலை இத்தாவில் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள்

யாழ்ப்பாணம் பெப். 7

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணி களை ஹலோரஸ்ட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

போர்க்காலத்தின் போது அதிகளவு பாதிப்படைந்த இந்தப் பிரதேசங்களின் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்படும் நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன.

எனவே, பொதுமக்களை மீளக்குடியமரச் செய்யும் நோக்குடன் ஹலோரஸ்ட் நிறுவனத்தைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். (வ-14)

# நயினை நாகபூஷணி ஆலயத்தில் தைப்பூச விழா

அழுகுக்கொருவரும் ஒப்பில்லாஆனந்த வல்லியாக, அன்பர் என்பவருக்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை நாகபூஷணி நயினையம்பதியில் அருளாட்சி நடத்துகின்றாள். தேவி பக்தரான அபிராமிப்பட்டர் தனது முதற் பாடலிலேயே அன்னை பராசக்தியின் அருளொழுகு வடிவத்தை வர்ணிக்கின்றார்.

" உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை துதிக்கின்ற பின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழித்துணையே!

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதி நயினையம்பதியாகும். "மணிபல்லவம்" என்ற சிறப்புப் பெயர் பெற்றதும் இப்பதியாகும். " புவனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவதும் இந்த ஆலயமே.

அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான, அண்மையில் குடமுழுக்குக் கண்ட இராஜகோபுரம் அலைகடலில் நீந்தி, அருட் கலை நாடி வரும் அடியவர்களைத் தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது.

அடியார்கள் " அரோகஹரா " என்று வந்து கால் பதிக்கின்ற இறங்குதுறை நயினையம் பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத் தோற்றமாகும். " ஓம் சக்தி" எனக் கடல் அலைகள் அரவணைக்க, உதயசூரியனின் வெண் பொற்கதிர்கள் கோபுரத்தின் மீது படர்ந்து பளிச்சென ஒளி வீச அருளாட்சி செய்து வருகின்றாள் அன்னை பராசக்தி. உலகுக்கெல்லாம் இருள் கடிய இளஞாயிறு உதயமாவதைப் போல மணிபல்லவத்தில் நாகம்மை அரசாட்சி போற்றப் படுகின்றது.

நாகபூஷணியாக நாகராணியாக எழுந்தருளியிருந்து நாக தோஷத்தை நிவர்த்தி செய்து, புத்திர பாக்கியத்தையும் கொடுத்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றாள். அடியார்களின் துன்ப துயரங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்திட அருள்பாலிக்கின்றாள் அன்னை. தன்னை நாடி வரும் அடியார்களின் வேண்டுதல்களை ஏற்று அவர்களுக்கு வேண்டிய, வேண்டியாங்கு வழங்கும் அருளுடையவள் அன்னை மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொழுவோர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற தாயுமானவர் கூற்றிற் கமைவாக, இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்க வல்லது என்பது சைவ நன் மக்களின் அசையாத நம்பிக்கையாகும்.




இந்த ஆலயத்தைப் பற்றிய சரித்திரச் சான்றுகள் பலவாறுள் என. நாகம் பூஜித்தமையால் 'நாகேஸ்வரி' என்றும் பெயர் அமைந்தது என்பதும் சான்றோர் கருத்தாகும். அம்பாளுக்கு அர்ச்சனை செய்தற் பொருட்டு நாகம் ஒன்று அனலைதீவு புளியந்தீவிலிருந்து பூக்கள் கொய்து கொண்டுவந்ததாகவும், இக்கதைக்குச் சான்றாக அம்பிகை ஆலயத்தின் வட கடலில் " பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரண்டு கற்கள் காணப்படுகின்றன. அடியார்கள் இக் கற்களை வழிபட்டு வருகின்றனர்.

*" பெற்றதாலன்னை*
*பெறுமுயிரனைத்தும்*
*பேணாலாலன்னை*
*பெற்றிருவோர்*
*உற்றதலாவன்னை விரும்பிய*
*அனைத்தும்*
*உதவலால்அன்னைஎக்கலையும்*
*சொற்றதாலன்னை*
*உலகொடு வானும்*
*தொழுதலால் அன்னை*
*யென்றென்றும்*
*பற்றதாங் கருணை*
*பொழிதலாலன்னை*
*பராபரை நாகபூஷணியாள்"*

அம்பிகையின் மீது நயினை வரகவி நாகமணிப்புலவர் அவர்கள் பாடிய தனிப்பாடல் ஒன்றினை இந்த வேளையில் தருவதால் அடியார்களுக்குப் பயனுள்ளதாக அமையும்-

அம்பிகை தைப்பூச விழா இன்று செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு மகா சங்காபிஷேகம், இலட்சார்ச்சனை, விசேட பூசைகள், தீபாராதனைகள் இடம் பெறவுள்ளன.

அண்மையில் (29.01.2012) நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது.

மகா கும்பாபிஷேகத்தைத் நேரில் கண்டு , வழிபட்டுக் கொள்ள பல நூற்றுக் கணக்கான அடியார்கள் ஆலயத்தில் கூடியிருந்தார்கள்.

அதுமட்டுமல்லாது அம்பாளுக்கு எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்காக தொடர்ந்து மூன்று நாள்களிலும் பெருந்திர ளான அடியார்கள் வருகை தந்திருந்தார்கள்.

அது மட்டுமல்லாது" கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்ற நோக்கில் புதிய கோபுரத்தின் குட முழுக்கையும் கண்டு அடியார்கள் அருளமுதைப் பெற்றுக் கொண்டார்கள். ஆலயத்தில் திருப்பணிகள் யாவும் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளன.

அவற்றினைச் சொல்லோவியமாக எழுத முடியாது. அம்பிகை ஆலயத்திற்கு நேரில் வந்து, அவற்றினைக் கண்டு களித்தால் தான் அம்பிகையின் தெய்வீகச் சக்தி எமக்கெல்லாம் கிடைக்கும். வாருங்கள் வந்து வழிபட்டு அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


அம்பிகையின் ஆலயத்தில் இடம்பெறும் விழாக்களில் வருடாந்த மகோற்சவத்தை அடுத்து தைப்பூச விழாவே சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

அடுத்து ஆடிப்பூரவிழாவாகும். எனவே அம்பிகையின் ஆலயச் சிறப்புகளைக் கண்டு களிக்கவும், மண்டலாபிஷேக இலட்சார்ச்சனை, தைப்பூசம் என்பனவற்றைக் கண்டு களிக்கவும் பெருந்திரளான அடியார்கள் நயினையம்பதியில் அம்பிகை அருள்பெறக் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் சகல ஒழுங்குகளும் செய் யப்பட்டுள்ளன. " அமுத சுரபி'' அன்னதான சபையினரும் அன்னதானம் வழங்கவுள்ளார்கள். அம்பிகையின் நல்லருள் எல்லோருக்கும் கிடைப்பதாக.

நயினை
நா.க.குமாரசூரியர் ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓராண்டில் உதிர்க்கும் நினைவுகள்

## தங்கராசா சுரேந்தினி

அன்னை மடியில்
1991 - 05 - 16

ஆண்டவன் அடியில்
2011 - 01 - 19

**திதி:07.02.2012**

குடும்பத்தின் குல விளக்காய்
குவலயத்தில் உதித்தவளே!
மழலை மொழிபேசி
மனங்களைப் பறித்தவளே!
தத்தித் தத்தி நடைபயின்று
பள்ளிக்கூடம் சென்றவளே!
கலைகள் பல பயின்று
கலையுணர்வை வளர்த்தவளே!
உறவுகளை அரவணைத்து
உள்ளங்களைக் கவர்ந்தவளே!
அன்பிலும் பண்பிலும்
தனியிடம் பிடித்தவளே!
நட்புக்கு இலக்கணமாய்
எண்ணங்களில் உதித்தவளே!
துன்பம் வந்த போதெல்லாம்
தன்னம்பிக்கை வளர்த்தவளே!
நினைவுக்குள் நிழலாகி
கண்களில் மறைந்தவளே!
கணப்பொழுதில் எங்களை
துடிதுடிக்க வைத்தவளே!
ஆண்டொன்றை அரை நொடியில்
கரைத்துச் சென்றவளே!
மீண்டும் ஒருமுறை
தாய் மடியில் தவழாயோ....?


இன்று (07.02.2012) எமது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**க.தங்கராசா குடும்பத்தினர்.**

த.சுபாதரன்,
சுதன் தச்சுத் தொழிலகம்,
சங்கானை மேற்கு, நிற்சாமம்.

(சி/8830 (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐந்து மாவட்டங்களிலும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும்

# வயிற்றில் தங்கக் கட்டிகள் சிக்கிக் கொண்டனர் 8 பேர்

இந்தியாவின் மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினரும் சுங்கத்துறையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், இலங்கையிலிருந்து வயிற்றுக்குள் வைத்து சென் னைக்கு கடத்தி வரப்பட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்துள்ளதுடன் தொடர்புடைய இலங்கையர் 8 பேரைக் கைது செய்துள்ளனர்.

இலங்கை மற்றும் சிங்கப்பூரில் இருந்து தங்க கட்டிகள் விமானம் மூலம் சென்னைக்கு கடத்தி வரப்படுவதாக சென்னையில் உள்ள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும், சுங்கத்துறை அதிகாரிகளும் இலங்கை மற்றும் சிங்கப்பூரில் இருந்து வந்த விமானங்களை தீவிரமாகக் கண்காணித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இலங்கையில் இருந்து சென்னைக்கு வந்த விமானத்தை சோதித்த போது, அதில் சந்தேகத்துக்குரிய வகையில் தென்பட்ட 8 பேரிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் சுற்றுலாப் பயணிகள் என்றும் இலங்கை சென்றுவிட்டுத் திரும்புவதாகவும் கூறியுள்ளனர். அவர்களது உடைமைகளை அதிகாரிகள் சோதித்தபோது, தங்கக் கட்டிகள் எவற்றையும் மறைத்து வைக்கவில்லை என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 'மெட்டல் டிடெக்டர்' கருவி மூலமும் சோதிக்கப்பட்டனர். அப்போதும் அவர்கள் தங்கக் கட்டி கள் எதுவும் மறைத்து வைக்க வில்லை என்பது தெரிந்தது.

இருப்பினும் அந்த 8 பேர் மீது சந்தேகம் இருந்ததால், அவர்களை பல்லாவரத்தில் உள்ள ஒரு எக்ஸ்ரே நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு சோதித்து பார்த்தபோது அவர்களது வயிற்றுக்குள் தங்கக் கட்டிகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவர்களை குறிப்பிட்ட ஓர் இடத்தில் வைத்து, தங்கக் கட்டிகளை வெளியே எடுப்பதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இதில் 26 தங்க பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த எடை 3 கிலோ ஆகும்.

இவற்றின் மதிப்பு இந்திய ரூபாயில் 90 லட்சம் எனக் கூறப்படுகிறது.

இதேபோன்று சுங்க அதிகாரிகள் சிங்கப்பூரில் இருந்து வந்தவர்களை சோதனை செய்த போது, அதில் வந்த இரண்டு பேரிடமிருந்து அரை கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களையும்பொலிஸார் கைது செய்துள்ளனர். (ந)

## நெருக்கடி இன்றி வாகன அனுமதிப் பத்திர விநியோகம்

வடமராட்சி, பெப்.7

வடமராட்சி வடக்கு, பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகன அனுமதிப் பத்திரங்களை மக்கள் எந்தவிதமான இடையூறுகளும் இன்றிப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த திணைக்களத்தில் தினமும் 300 - 400 வரையான உரிமையாளர்கள் எதுவித இடையூறுகளும் இன்றி வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

இந்த நிலையில் அந்தத் திணைக்களத்தில் இதுவரை 70 வீதமானோர் வாகன அனுமதிப் பத்திரங்களை பெற்றுவிட்டன.

இதன் காரணமாகத் தாம் குற்றப்பணம் கட்ட வேண்டிய நிலைமைகளில் இருந்துவிலகியுள்ளதாக வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தொடர்ந்தும் காலையிலிருந்து மாலைவரை எந்தவித நெருக்கடிகளும் இன்றி வாகன உரிமைப் பத்திரங்களை எடுக்கக் கூடியதாக உள்ளது. (ந-253)

## முஹம்மது நபியின் பிறந்த தினத்தை முன்னிட்டு விழாக்கள்

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் 1441ஆவது பிறந்த நாளையொட்டி நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் மீலாதுன் நபி விழாக்கள் நடைபெற்றன. கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் முஸ்லிம் இயக்கங்களும் மீலாத் விழாவை விமர்சையாக நடத்தின.

ரசூல் மவ்லூத் ஓதல்களும், துஆப் பிரார்த்தனைகளும், மார்க்கச் சொற்பொழிவுகளும் ஏற்பாடாகி இருந்தன. மீலாத் பொதுக்கூட்டங்களில் முஸ்லிம்களின் பங்குநாடு முழுவதும் மீலாத் விழாக்கள் நடைபெற்றன. (ந)

## 48 தொழிற்சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டம்

அரச ஆதரவுத் தொழிற்சங்கங்கள் உட்பட 48 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சில கோரிக்கை களை முன்வைத்து நாளை இரத்தினபுரி நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, புதிய இடது சாரி முன்னணி ஆகிய அரச ஆதரவுக் கட்சிகளின் தொழிற்சங்கங்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கின்றன. அரசு வழங்கிய பத்து சத வீத சம்பள உயர்வுக்குப் பதிலாக அரசு அறிவித்தபடி 2500 ரூபா சம்பள உயர்வை அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்க வேண்டும்.

தனியார் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 12,500 ரூபாவாக நிர்ணயிக்க வேண்டும். அரச ஊழியர் களுக்கு வழங்கும் 280 ரூபா வாழ்க்கைச் செலவுப் புள்ளிக் கொடுப்பனவை வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும் என்பன உட்பட சில கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. (ந)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சுகவாழ்வு கிளினிக்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும் முதல் வரும் சனிக்கிழமைகளில் சுகவாழ்வு கிளினிக் நடைபெற்று வருகிறது.

இதில் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் நோயாளர்கள் சகலரும் பங்கு கொண்டு தமது நோய் தொடர்பான ஆலோசனைகளையும், சிகிச்சையினையும் அறிவுரைகளையும் பெற்றுப் பயனடையலாம் என வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அ.ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார். (ந-36)

# இணுவையில் இன்று திருமஞ்சம்

■ இணுவை மா.நா.பரமேஸ்வரன்

இணுவைக் கந்தப் பெருமானுக்கென சித்தர் இணுவைப் பெரிய சந்நியாசியால் உருவாக்கப்பட்டதே இந்தத் திருமஞ்சம். அன்னாரது காலம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். அருளாளர் பெரிய சந்நியாசியார் ஒரு பெரும் சித்தர். மணிமந்திர வைத்தியத்தின் மூலம் தீராத நோய்களைத் தீர்க்கும் அருட்பேறு பெற்றவர் இந்தப் பெருந்தகை.

இவரது அகக்கண்களில் எம்பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே இந்தத் திருமஞ்சமாகும். இத்தகைய மஞ்சம் ஒன்று இதற்கு முன்பும் இருந்ததில்லை. இனியும் உருவாகப் போதில்லை என்பது ஆய்வாளர்கள் கருத்து.

பெரிய சந்நியாசியால் 1902 ஆம் ஆண்டு தனது இருப்பிடமாகிய இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் ஆரம்பிக்கப்பட்ட இம் மஞ்சத் திருப்பணி நிறைவுபெற்று 1912 ஆம் ஆண்டு இணுவைக் கந்தன் ஆலயத்தில் வெள்ளோட்டம் கண்டது.

இணுவில் கிழக்கிலே மஞ்சம் உருவாக்கப்பட்ட இடம் மஞ்சத்தடி என்னும் காரணப் பெயர் கொண்டு இன்றும் அழைக்கப்படுகின்றது. அவ்விடத்தில் அன்னாரது சமாதிக் கோயிலான அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து இணுவில் கந்தன் ஆலயம் நோக்கி மஞ்சம் இழுத்து வரப்பட்ட பாதையே இன்று நாம் காணும் ஆலயத்தையும் யாழ். வீதியையும் இணைக்கும் பாதை. இது தற்போது இணுவில் மானிப்பாய் வீதிக்குள்ளடக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

சொற்பனத்தில் ஆண்டவன் கூறிய குறித்த நாளில் சந்நியாசியார் ஊர்காவற்றுறை இறங்குதுறையை அடைந்தார். தென்னிந்தியாவில் நின்றும் நாவாய் மூலமாக ஆசாரியார்கள் சிற்பத் தொழிலாளர்களென ஒரு தொகுதி மக்கள் கூட்டம் இறங்குதுறையில் வந்திறங்கி நிற்பதைக் கண்டார். அடியவரைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் 'பெரியவரே தாங்கள் தானே எமது இல்லம் வந்து இன்றைய தினத்தில் இங்கு வரும்படி கூறினீர்கள். அதற்கிணங்க நாங்கள் இங்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்து நின்றனர். சந்நியாசியார் வியந்தார். ''என்ன இணுவில் கந்தன் ஆலயத்தை விட்டு நான் எங்கேயும் செல்லவில்லையே'' ''இது கந்தப் பெருமானின் திருவிளையாடலே'' என எண்ணி உள்ளம் உவகை கொண்டார்.

தென்னிந்தியத் தமிழ்நாட்டிலிருந்து வந்த சிற்பிகள் அல்லும் பகலும் அடியவரின் அருளாணையைச் சிரமேற்கொண்டு அமைத்த இந்தத் திருமஞ்சத்தின் அமைப்பை எழுத்துருவில் வடிப்பதென்பது இலகுவான காரியமன்று.

இதனை அணுகி உற்று நோக்கின் நோக்கக்கரிய பல நுணுக்க கைவேலைப்பாடுகளையும் கண்டு கொள்ளலாம். அங்கே காணப்படும் சிற்ப அமைப்புக்களை எமது ஊனக் கண்களால் பார்த்துப் பூர்த்தியாக்குவதற்கு எமது வாழ்நாள் போதாது என்னும் உண்மை.

இந்தத் திருமஞ்சத்தின் முன்னின்று நோக்கும்போதுதான் தெரியும்.

உண்மையில் கூறப்போனால் ஒரு சிறு குருவி தனது இறக்கையால் மண்ணை ஒற்றி ஒரு பெரிய சமுத்திரத்தை மூடுவதற்கு முற்படுவது போன்ற பிரமையே எமக்கேற் படும். நுணுக்கமான சிறுசிறு சிற்பங்கள் எண்ணில் அடங்காதவை. கண்ணுக்குத் தெரியும். கந்தவர்வ சிற்பங்களை விட ஒவ்வொரு மாடங்களும் தன்னகத்தே கொண்டுள்ள சிறுசிறு சிற்பங்கள் ஏராளம். இவை தரையில் நின்று பார்த்தால் கண்ணுக்குப் புலப்படமாட்டா. தேவலோகத்துக்குரியவையாக வேதங்களில் கூறப்பட்ட பலதரப்பட்ட பறவைகள், மிருகங்கள், ஊர்வன போன்ற அமைப்புக்களை இங்கே காணலாம். மனித வாழ்வியல் பற்றிய பல தத்துவங்களையும் மனிதனது சுகபோகங்களின் தன்மை பற்றி பலவகையாக சிற்ப அமைப்புக்களையும் இங்கே காணலாம்.

ஒரு மனிதன் கருவுற்ற காலம் முதல் பூமியில் பிறந்து பல பருவங்களையும் கடந்து அவன் இவ்வுலக வாழ்வில் நின்றும் நீங்கும் வரையிலான உலகியல் தன்மைகளை பல கோணங்களில் நோக்கிச் சிற்பமாக வடித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது இந்து சமயத்தின் பிரிவுகளாகக் கூறப்பட்ட சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய அறுவகைச் சமயங்களின் முதற் தெய்வங்களின் வரலாறுகளைக் கூறும் தெய்வ சிற்பங்களையும் இங்கே காணலாம். இந்தியாவில் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் கருவறைகளுக்கு மட்டுமே உரியவை எனக் கருதப்படும் திருவுருவங்கள் பலவும் இம்மஞ்சத்திலே செதுக்கப்பட்டுள்ளன.

வருடத்தில் இருமுறை இணுவைக் கந்தப் பெருமானை தன்னகத்தே தாங்கி அருட்பவனி வருகின்றது இந்தத் திருமஞ்சம்.

இந்தத் திருமஞ்சத்தில் பவனி வரும் ஆறுமுகப் பெருமான் திருவுருவோ அதி அற்புதத் திருக்கோலங்கொண்டது. எம்மவர்களை மட்டுமன்றி இந்தியாவிலிருந்து வருகை தந்த இசைக்கலைஞர்களைக் கூட தன்னகத்தே ஈந்த அற்புதத் திருவுருவம் இது. இத்திருவுருவத்தைத் தாங்கியவாறும் இத்திருமஞ்சம் ஆனிமாத இருபத்தைந்து நாள் மஹோற்சவத்தின் பன்னிரண்டாம் நாள் திருவிழாவின் போதும் தைப் பூசத்தினத்தின்போதும் வீதியுலா வருவது அருணகிரியார் சொல்லும் ''செஞ்சக்கனல் நெகிந்துருக தஞ்சந்தருள் சண்முகனுக்கியைசேர்'' என்னும் பதத்துக்கிணங்க அமைந்திருப்பதைக் காணலாம். காலத்தால் ஒரு நூற்றாண்டையும் அமைப்பால் குமார தந்திரத் திருநூலில் கூறப்பட்ட சாஸ்திர அமைப்புக்கு இயைபாகவும் ஊர்ந்து அசைந்து வருவதற்கேற்ப அதி உயர் உயரத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்படும் இத்திருவமைப்பு பலவகையான ஆய்வுக்குட்பட வேண்டியதொன்றாகக் காணப்படுகின்றது.

சமுதாயத்தில் காணப்படும் ஒரு சிற்பக் கலைஞனால் சமய தத்துவம் நிறையப் பெற்ற சமயவாதி ஒருவனால் - உயிரியல் கலைஞன் ஒருவனால் - இயந்திரங்களை இயங்க வைக்கும் பொறியாளன் ஒருவனால் - தனித்தனியாக உற்று நோக்கி ஆராயப்பட வேண்டிய அமைப்பே இத்திருமஞ்சம்.

அன்று எமது அருளாளர்களும் சிற்பவல்லுனர்களும் எமக்களித்த இந்தப் பெருமஞ்சப் பொக்கிஷம்.

இன்றும் புதுப்பொலிவு பெற்று எமக்கு அருட்காட்சி தருவது ஆண்டவன் திருவருளே. இத்தகையதோர் அமைப்பு இதற்கு முன்பும் அமைந்த தில்லை. இனியும் அமையப் போவதில்லை எனக் கருதிய ஆய்வாளர்கள் இந்தத் திருமஞ்சத்தை உலகப் பெருமஞ்சமென விதைந்துரைக்கின்றனர்.

முருகப் பெருமான் அடியவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது வருடத்தில் இரு முறை வரும் இந்தத் திருமஞ்சத்தைக் கண்டு தரிசிக்க வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மனைவி வழி உறவுகள் வழியில் சில செலவுகளைச் சந்திக்கலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமை பேசுவீர்கள். தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**இடபம்:** பற்றாக்குறை அகலும் வகையில், புதிய பணவரவு வரும். உங்களின் யோசனைக்கு நண்பர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை இருக்கும். உறவினர் ஒருவருக்கு ஓடிச்சென்று உதவி செய்வீர்கள். நீண்ட நாள் ஆசை ஒன்று நிறைவேறும். சிலரிடம் பொய் சொல்லி உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பீர்கள். மாற்று மதத்தினர் விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

**மிதுனம்:** எதிலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் அடையலாம். நாடி வந்த ஒருவருக்கு பிறரிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் பாச மழையில் நனைவீர்கள். தாயார் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிலரிடம் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்து விட்டு பின்னர் முழிப்பீர்கள்.

**கடகம்:** நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும். சண்டைபோட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். அதிக செலவாகும் என்று நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். மறக்க முடியாத புதிய அனுபவங்களை எதிர்கொள்ளலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம்.

**சிங்கம்:** தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். பணவரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். சக ஊழியர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டுத் தேடலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு வராத உறவினர் ஒருவர் திடீரென வரலாம். சிரமத்தில் இருக்கும் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

**துலாம்:** மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாமல், நீங்களே செய்ய வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். நண்பர்கள் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும். பிறர் மத்தியில் ஒருவர் உங்களைப் பாராட்டலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். நண்பர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். சிலரின் தந்திரமான செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடையலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். சில வேலைகளை தப்பும் தவறுமாகச் செய்து விட்டு, மீண்டும் செய்ய நேரிடலாம்.

**தனுசு:** விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வருவது தள்ளி போகலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலை அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். ஓய்வெடுக்கக்கூட நேரமில்லாத அளவுக்கு கடும் வேலைப் பளுவைச் சந்திக்கலாம்.

**மகரம்:** உறவினர்களை நம்பி உங்களின் வேலை ஒன்றை ஒப்படைப்பீர்கள். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமைந்தாலும், அது நல்லவிதமாகவே நடக்கலாம். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து பெருமிதம் அடைவீர்கள்.

**கும்பம்:** நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு அகன்று பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக சிலர் உங்களைப் பாராட்டலாம். நீண்டநாள் இழுபறி காரியம் ஒன்றை முடித்த திருப்தி காணப்படும். பல மணி நேரமாகும் என்று நினைத்த காரியம் ஒன்று, சில மணி நேரங்களில் முடிந்து விடலாம்.

**மீனம்:** பெருமைக்காக சில காரியங்களைச் செய்து அவதிப்படுவீர்கள். சேமிப்புப்பணம் குறைந்து பணப்பற்றாக்குறை ஏற்படும். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என்று, பயம் கொள்வீர்கள். வயிறு, வாயு உபாதைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம்.

**நாளை**

தை 25 புதன்கிழமை 08.02.2012
திதி: பிரதமை பி.இ. 03.08 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப. 01.58 வரை
சுபநேரம்: 05.05 - 06.35 வரை,
ராகு காலம்: 12.35- 02.05 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | | 9 | | 6 | 5 | |
| 7 | | 3 | 5 | 6 | | | 1 | |
| | 8 | | | 4 | | | | |
| 6 | 7 | | | | | 3 | | |
| 3 | | | 6 | 2 | 8 | | | 7 |
| | | 1 | | | | | 6 | 5 |
| | | | | 7 | | | 3 | |
| | 6 | | | 8 | 1 | 7 | | 4 |
| | 3 | 7 | | 5 | | 9 | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 1 | 8 | 7 | 4 | 5 | 3 | 9 |
| 4 | 5 | 9 | 2 | 6 | 3 | 1 | 7 | 8 |
| 8 | 7 | 3 | 5 | 9 | 1 | 4 | 2 | 6 |
| 7 | 6 | 5 | 3 | 8 | 9 | 2 | 1 | 4 |
| 9 | 3 | 8 | 4 | 1 | 2 | 7 | 6 | 5 |
| 2 | 1 | 4 | 6 | 5 | 7 | 8 | 9 | 3 |
| 1 | 4 | 6 | 9 | 2 | 5 | 3 | 8 | 7 |
| 3 | 8 | 7 | 1 | 4 | 6 | 9 | 5 | 2 |
| 5 | 9 | 2 | 7 | 3 | 8 | 6 | 4 | 1 |


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(09.02.2012) விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

## பிறீமா நம்ப 01 கோழிக் குஞ்சு

பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு. ஒரு குஞ்சு 100/= ஓடர்களை முன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய

தொலை பேசி இல்:
077 9337287 / 077 4164734

## மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர்கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். கடை ஒன்றுக்கு முற்பணம் 3 லட்சம். மாதவாடகை 10,000/=

தொடர்பு- செல்லத்துரை தவமணி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 615 8066, 021 490 8566, 077 468 1475


## அறிவித்தல்

அல்வாய் தெற்கு, அல்வாயைச் சேர்ந்த வீரகத்தி தெய்வேந்திரன் ஆகிய நான் அறிவிப்பது யாதெனில் சட்டத்தரணி வீ.பொ.கார்த்திகேசு அவர்களால் உறுதி இல.15735/12.08.92 இல் எழுதப்பட்ட உறுதியின் பிரகாரம் எனக்கும் மனைவிக்கும் சொந்தமான கரவெட்டி வதிரிக் குறிச்சி இறை நாத்தாண்டன் குடியிருப்பு நில.பர 9, 3/8 வீடு 1/4 விஸ்தீரணம் கொண்ட காணிக்கு நான் சுற்றுமதில் போடவுள்ளேன். இக் காணிக்கான அளப்பனவும் செய்ய உள்ளேன். இக் காணியில் யாரேனும் உரிமை கோரினால் உங்கள் ஆவணங்களுடன் எனது சட்டத்தரணி பா.சுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு மாத காலத்துக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

உரிமையாளர் **வீ.தெய்வேந்திரன்,** அல்வாய் தெற்கு, அல்வாய்.


## வாடகைக்கு

கண்டி றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 2980578

(14168 )(6-7-8)

## ஓகன், கிற்றார், புல்லாங்குழல் இசை வகுப்புக்கள்


தைப்பூச தினத்தை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் இன்று காலை 9 மணி முதல் 4 மணி வரை நடைபெறும்.

சுரவீணா இசை மன்றம், 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே. 077 7031293 (14169 )(6-7-8)


## மரண அறிவித்தல்

### இப்ராஹிம் பலீர்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மத்தீஸ் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இப்ராஹிம் பலீர் 05.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான இப்ராஹிம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இந்திராணி தம்பதியரின் மருமகனும், அன்னரத்தினத்தின் (குஞ்சு) அன்புக் கணவரும், உதயக்குமார் (பிரான்ஸ்), வசந்தகுமார், சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நந்தக்குமார் மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாசில்லா (பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான சந்திரா, யூசுப் மற்றும் ராகிலா, றமின் (தனு எலக்ரிக்கல் ஹாட்வெயார் உரிமையாளர், கட்டட ஒப்பந்தகாரர்), சுபைர் (பொலநறுவை), ரகூப், காலஞ்சென்ற பஸீர் மற்றும் லைலா (டோகா), அச்சா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜாதா (பிரான்ஸ்), வனஜா, ரமேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், மணியம் மற்றும் பானுமதி (இந்தியா), காலஞ்சென்ற டேவிற் அல்வின் மற்றும் அமலநாயகி (கமலா), ஆயிசா (பொலநறுவை), ஹெலன் தங்கமலர் (ராதா), சிறி, யோகேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28/2, ஆனந்தன் வடலி வீதி, யாழ்ப்பாணம். (13884)(2-6-7)

தகவல்: இ.றாஸீன்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பையா நடராசா**
திதி: பூரணை

தோற்றம் 07.05.1926
மறைவு 30.01.2010

*வையகத்தில் வாழ்ந்த*
*வானுறை தெய்வமே!*
*அன்பின் வடிவமே!*
*நீங்கள் எம்மைப் பிரிந்து*
*ஆண்டுகள் இரண்டாயினும்*
*நீங்கா நினைவுகளாய்*
*நிலைத்து நிற்கும் நினைவுகள்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை கிழக்கு, மீசாலை. (11590) (6,7,10)


## காணி விற்பனை

நெல்லியடி மாலுசந்தி-வதிரி வீதியில் நிலப்பரப்பு 04 குளி 15 விஸ்தீரணம் கொண்ட கல்வீடு, கிணறு அடங்கிய ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0770870098

(தரகர் வேண்டியதில்லை)

(12663) (6,7,10)

## M.K. தில்லைமோகனின்

வழிகாட்டலில் ஆங்கிலத்தை இலகுவாகக்கற்பது பற்றிய

**மாபெரும் கருத்தரங்கு**

கட்டணம் 250/= மட்டுமே

ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்.

மேலதிக விவரங்கள் விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (14167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் 22 சிறுவர்கள் சாவு

யாழ்ப்பாணம், பெப்.7

கடந்த வருடம் இலங்கையில் இடம்பெற்ற சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களின் போது 22 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.


வரலாற்று ரீதியாக 2011 ஆம் ஆண்டு மட்டுமே அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கமைவாக 2 ஆயிரத்து 588 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களில் ஆயிரத்து 503 சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

**9 சிறுவர்களி இரத்த உறவினராகவும், வேறு உறவினர்களினாலும் 54 சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.**

இடம்பெற்ற துஷ்பிரயோகச் சம்பவங்களில் 9 சிறுவர்கள் இரத்த உறவினராகவும், வேறு உறவினர்களினாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 54 சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் 10 சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த வருட அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதே வேளை சிறுவர்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும் வகையில் 247 சிறுவர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களும் பதியப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

## 'வாழ்க்கைச் சரித்திரம்' நூல் வெளியீடு



தமிழர் பாரம்பரியக் கலையான கூத்துக்கலையை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டதுடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையுடன் இணைந்து செயற்பட்டு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை வளர்ச்சிக்குப் பாடுபட்ட கலாவித்தகர், கலாபூஷணம் சி.பாலகப்போடி அண்ணாவியார் ஓராண்டு நினைவு தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத் துறையால் அவரது வாழ்க்கைச் சரித்திரம் ஆய்வு நூல் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு கன்னன்குடா மகாவித்தியாலயத்தில் கண்ணகி முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் தலைவர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வில் அண்ணாவியாரால் இறுதியாக அரங்கேற்றப்பட்ட வாளவீமன் நாடகம் மற்றும் அவரால் மட்டக்களப்பு கன்னன்குடா மகாவித்தியாலய மாணவர்களுக்குப் பழக்கப்பட்ட வசந்தன் கூத்து என்பன மேடையேற்றப்பட்டன.

இதன்போது கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத் துறையினரால் அன்னாரது படம் பொறிக்கப்பட்ட அலங்கார வளைவு வெளியிட்டு முத்தமிழ் மன்றத்திற்கு கையளித்ததுடன் பல்கலைக்கழகத்தால் வரையப்பட்ட அவரது உருவப் படம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதே வேளை அண்ணாவியாரது வாழ்க்கைச் சரித்திர ஆய்வு நூலும் பல்கலைக்கழக நுண்கலைத் துறையால் வெளியிடப்பட்டது.

## காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.மாவட்டத்திற்கு கீதம் இயற்றுவதற்கான கவிதையாக்கங்களை அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுடையவர்கள் குறிப்பிட்ட திகதியில் அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

## பகவத்கீதை தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.7

பகவத்கீதை தொடர்பான விரிவுரைகளும் தொழில் அதிபர்களுக்கான கருத்தரங்குகளும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுவாமி பார்த்த சாரதியின் பிரதான சிஷ்யை சுனந்தாஜீ. இதற்கான கருத்துரைகளை வழங்கவுள்ளார். வருடா வருடம் உலகெங்கும் இடம்பெற்று வரும் இந்த நிகழ்வு இந்த வருடம் இலங்கையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பகவத் கீதை தொடர்பான வகுப்புகளை உமையாள்ஜி கொழும்பின் பல பாகங்களிலும் நடத்தி வருகின்றார்.

ஆர்வமுடையவர்கள் வருடாந்த, வாராந்த பகவத் கீதை விரிவுரைகளிலும், வகுப்புகளிலும் பங்குபற்றலாம் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ந-14)

## விமான சேவைகள் ரத்து

சீரற்ற கால நிலையினால் லண்டன் ஹீத்ரோ விமான சேவைகள் தற்காலிமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்துஇலங்கையிலிருந்து லண்ட னுக்குச் செல்ல விருந்த க்ஃ-509 விமானசேவை தற் காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் இலங்கைக்கு வரவிருந்த க்ஃ-502 விமான சேவையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது. காலநிலை சீரடைந்ததும் சேவைகள் யாவும் வழமைக்குத்திரும்புமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25.05.1937

விண்ணில் 22.01.2008



## சின்னையா குணரட்ணம்

(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

ஆண்டுகள் நான்கு ஆனதையா - நீங்கள்
ஆண்டவன் திருவடி சென்றடைந்து
ஆறவில்லை எம் துயரம்
அனுதினமும் வாடுகின்றோம் - உம் நினைவால்
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பாதம் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வச்சந்நிதி வாசா,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்

(14164) (2-9-7)


## மரண அறிவித்தல்

### விசாலாட்சி தாமோதரம்பிள்ளை



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி தாமோதரம் பிள்ளை ஞாயிற்றுக்கிழமை (05.02.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வர்களான கந்தையா-மாரிமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகராசா, கமலாநேரு, கனகராசா (கனடா), இந்திராணி (ஆசிரியை, தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், பரிமளம், காலஞ்சென்ற சிவானந்தன், சண்முகாதேவி (கனடா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் மாமியும் சசிஸ்குமார் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ராஜ்குமார், தரு ஷாந்தி (பிரான்ஸ்), தருஷீலா, சிவச்செல்வி, பிருந்தா (கனடா), கபிலன் (கனடா), விதுஷா (கனடா), யாழினி (தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு, 2009-2011), விசாகன், பாலினி (மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் கம்சாயினி, கர்ணி, அபிசனா (பிரான்ஸ்), லசான் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2012) புதன்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(13889) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெறுபேறு தேக்கம்

வவுனியா, பெப்.7

வவுனியா தடுப்பு முகாமில் இருந்து கடந்த வருடம் ஆவணி மாதம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறு பேறுகள் இதுவரை அனுப்பி வைக்கப்படாத நிலையில் தேங்கி இருப்ப தாக வவுனியா தபா லக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந)


EASY ENGLISH
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
(யாழ் நகரில் : வகுப்பிட அனுசரணை)
புதிய உயர் கல்லூரி
விவரங்களுக்கு
077 3212711



இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 4.5.6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 12.13ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு- 021 - 4923416

V care Colombo - No.100, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணையைத் தொலைத்த ஆணைக்குழு

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்த 80 சதவீதமான மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், தமிழ் மக்களுக்குச் சொந்தமான இடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுதல் மற்றும் வடக்கு மாகாணம் முழுவதும் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளமை போன்ற விடயங்கள் தொடர்பாக இவ் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள முக்கிய குடியேற்றங்கள் மற்றும் தமிழ் மக்களின் நடவடிக்கைகள், நகர்வுகள் என்பன இராணுவத்தால் கண்காணிக்கப்பட்டு வருவதாக எழுத்தாளரும், செயற்பாட்டாளருமான பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஜோஸி மரியா சிஷ்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு அனைத்துலக விதிமுறைகளுக்கு ஏற்ப யுத்தத்தின் பின்னான மீள்குடியமர்வுகள் மற்றும் புனர்வாழ்வுச் செயற்பாடுகளை இதய சுத்தியுடன் முன்னெடுத்துச் சென்றிருந்தால், மீள்குடியமர்வு நடவடிக்கைகளை அனைத்துலக கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பதற்கான அனுமதியை வழங்குவதில் இலங்கை அரசு தயக்கம் காட்டுவதற்கான காரணம் என்ன?

அதாவது இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட யுத்தமானது தமிழ் மக்களை நீண்ட காலமாகத் தொடரப்பட்ட இனப்போரிலிருந்து மீட்டெடுத்து அவர்கள் சொர்க்கத்திற்கு கொண்டு சென்றுள்ளது போன்ற தோற்றத்தையே இவ் ஆணைக்குழுவின் அறிக்கையானது படம் பிடித்துக் காட்டியுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையாள்களே கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதனால் இவ் அறிக்கையானது நம்பகத்தன்மை குறைந்ததாக உள்ளது.

ஆகவே இவ் ஆணைக்குழுவானது தனக்கு வழங்கப்பட்ட ஆணையின் படி நடந்து கொள்ளவில்லை. இது தனக்கான காலத்தை உரிய வகையில் பயன்படுத்தாமல் இழுத்தடித்துள்ளது.

முக்கியமான தீர்மானங்களையும் பரிந்துரைகளையும் எட்டுவதற்காக கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் மிகவும் பலவீனமுற்றுக் காணப்படுகின்றன. இவ் ஆணைக்குழுவின் முன் வழங்கப்பட்ட ஆவணங்கள், சாட்சியங்கள், வாக்குமூலங்கள், காரணிகள் என்பன குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளதாகவே தோன்றுகின்றது.

இவ்வாறானதொரு விசாரணை ஆணைக்குழு மூலம் பாடங்களைக் கற்றுக் கொண்டதற்குப் பதிலாக, மீண்டும் இனப்போர் இலங்கையில் தலைதூக்காமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக பிறர் எவற்றைச் சொல்கின்றார்களோ அவற்றை செவிமடுப்பதன் மூலம் இலங்கை அரசு நிறையக் கற்றுக் கொள்ள முடியும்.

*(நன்றி: புதினப்பலகை)*

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 28 |
| 05 | 01 |
| 1930 | 2002 |

### திருமதி தம்பிஐயா நாகம்மா
(பரராசசிங்கம்)

ஆண்டுகள் பத்து சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டுப்பிரியாது

இணுவில் மேற்கு,
இணுவில்.
(13888)(6-7-8)
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## இராசேந்திரம் கார்த்திக்



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட இராசேந்திரம் கார்த்திக் (5.02.2012) அன்று காலமானார்.

அன்னார் இராசேந்திரம் (சேனாதி) புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மகனும் இராசகுலேந்திரன் (பிரான்ஸ்), மோகனதாஸ் (பிரான்ஸ்), கிருபாகரன் (பிரான்ஸ்), சங்கீதா (சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரும் துசிலை (பிரான்ஸ்), காயத்திரி (பிரான்ஸ்), சுபாசினி (பிரான்ஸ்), நிஷாந்தன் (சாந்தியகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் பிரித்திகா (பிரான்ஸ்), அட்ஷயன் (பிரான்ஸ்), அனோஸ்கா (பிரான்ஸ்), அபிசயன் ஆகியோரின் சிறிய தந்தையும் யனோயனன், அபிசனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்,அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(C/8834)(6-7-8)

தகவல்:
தந்தை இராசேந்திரம்(சேனாதி)

---

## கஸ்மீர் பிரான்சிஸ் சேவியர்



யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இலங்கையில் Colonization Officer ஆக பணிபுரிந்தவருமான கஸ்மீர் பிரான்சிஸ் சேவியர் அவர்கள் 04-02-2012 அன்று கனடாவில் இறை பதம் அடைந்தார்.

அன்னார் பேர்னடேற் (Baby) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற Casimir- அன்னம்மா தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற S.A.Joseph-அன்னம்மா (Temple Road, Jaffna) தம்பதியரின் பாசமிகு மருமகனும், நிர்மலன் (U.K), நிரஞ்சன் (கனடா), நிஷா (கனடா), நிலஷ்மி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகன்யா, வசந்தி, ஷோண், ஜெறி ஆகியோரின் அன்பு மாமனும், யாழினி, யாதவி, சேரன், சாரங்கன், சினாஷ், சாவீன், ஷோன் யூனியர், நீஷிகா, ஜெறமி ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்ற பொன்னம்மா, செல்லம்மா மற்றும் சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற நவமணி, நீக்கிலாப்பிள்ளை மற்றும் நேசமணி, றிச்சின்மணி, அருட்சகோதரி றீற்றா, பொன்மணி, நவரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிலோமினா, காலஞ்சென்ற அச்சிலிஸ், லியப்போல், கலிஸ்ரஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Ave, Markham ல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home ல் Feb 09/12, வியாழக்கிழமை, Feb 10/12 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியில் இருந்து 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்பு Feb 11/12 மு.ப 10.30 மணிக்கு இலக்கம் 522, Plains Rd ல் அமைந் ள்ள Canadian Martyrs Catholic Church ல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இல. 625, Birch mount வீதியில் அமைந்துள்ள Pine Hills சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி:Bernadette (Baby) Canada(கனடா)
நிரஞ்சன் (647)892-8972-(905)415-8662-(416)421-0727 (மகன்)
நிஷா (705)792-0028 (மகள்)
நிர்மலன்(UK) (011)441344484596(மகன்)
நிலஷ்மி (Australia) (011)6139801941 (மகள்).

மைத்துனர்,
கலிஸ்ரஸ் யோசப்,
72, றக்காவீதி.

(13890) (6,7,10)

---

## மணமகள் தேவை

யாழ் கௌரவ குடும்பத்தை சேர்ந்த உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை தொடர்பு கொள்ளவேண்டிய
T.P. NO - 077 7198410
E -mail - Raji Chart @yahoo.com

## கடை விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் K.K.S வீதியில் No. 328, New No. 414, 1½ பரப்புக் கடையும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 7498920
(14175)(6-7-8)

## சாரதி தேவை

Sales வான் ஓடுவதற்கு A தர சாரதி அனுமதிப்பத்திரமுடைய சாரதி உடன் தேவை.
தொடர்பு : 077 6722055
021 2229516
(14178)(6-7-8)

## காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு, சங்கானையில் 3¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0727750023,
0777750023.

## மணமகன் தேவை

1984ஆம் ஆண்டு யாழ் இந்து கௌரவ குடும்பம், உத்தராடம், 8இல் செவ்வாய் உடைய மணமகளிற்கு வெளிநாடு PR உள்ள மணமகன் தேவை தொடர்பு: 0776139307

## விற்பனைக்கு

253-XXXX தொடரிலக்கமுடைய (DUAL PURPOSE VEHICLE) TOYOTA வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0775717385

## வகுப்புகள்

தைபூச தினத்தில் தபேலா,சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம். மு.ப 11 மணி முதல் மாலை 6 மணி வரை.
தொடர்பு- இரா சிவர்ாமன்
0214909203 ,0778152674

---

# நயினை நாகம்மாளுக்கு மண்டலாபிஷேகம்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மனுக்குத் திருக்குட முழுக்கு விழா நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடை பெற்றுவரும் மண்டலாபிஷேகத்தின் 11ஆம் நாள் சங்காபிஷேகம் மேற்படி ஆலய 11ஆம் திருவிழா உபயகாரர்களின் (நயினை அரச ஊழியர்கள்) உபயமாக நாளை (08.02.2012) புதன் கிழமை நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடி நிற்கின்றது. அன்றைய தினம் திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து அன்னையின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஓம் சக்தி துணை

ம. அம்பிகைபாகன்
[செயலாளர்]
11ஆம் திருவிழாச்சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்
நயினாதீவு

(c-8837)

---


## மனோதத்துவ வைத்தியர்

(General Psychotherapy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr . P. ஆறுமுகம்**
T.P. 0719315664 , 0777569205
யாழில் 03.02.2012 முதல் 11.02.2012 வரை

பதிவுக் கட்டணம் ரூபா 300/=
ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு. இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு, மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
தாம்பத்திய பாதிப்புகளால் (பிறவியில் ஆண்மை அற்றவர்களைத் தவிர) எந்த விதமான மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகி உள்ளனர். குழந்தைப்பேறின்மை, ஆண் உயிர் அணுக்களில் குறைபாடு உள்ளவர்களுக்கு திறமான மூலிகை சிகிச்சை அளிப்பதால் பல பேருக்குக் குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

ரமணி கெஸ்ட் ஹவுஸ்,
இல.47,49, மணிக்கூட்டு வீதி,
யாழ். (சிவதர்சன் எலக்ரிக்கல்ஸ் அருகில்)



# வேலைவாய்ப்புக்கள்

எமது சாவகச்சேரி கிளையில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Customer Relation Officer | - Female |
| Computer Instuctor | - Male / Female |
| Assist. Lecturer for C, C++, Java | - Male / Female |
| Lecturer for Auto CAD, Tally | - Male / Female |
| Assistant Training Manager | - Male |

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

**ASIAN COMPUTER EDUCATION**
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net


---

# மரண அறிவித்தல்

## திருமதி இளையதம்பி சிவகாமிப்பிள்ளை



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவகாமிப்பிள்ளை 05.02.2012 அன்று இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
புஸ்பராணி இளையதம்பி (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதூசனன் சதம் விளாசினார் வென்றது யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், பெப்.7

வதூசனனின் சதம் கை கொடுக்க மகாஜனாக் கல்லூரியை வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி அணி.

அகில இலங்கைப் பாடசாலை துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் முதலாவது சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனாக் கல்லூரி அணியின் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதற்கமைய தனது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி 92.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் ஆட்டம் இழக்காமல் பிரணவன் 99 ஓட்டங்களையும், திலக்சன் 64 ஓட்டங்களையும் அஜித் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான வதூசனன் 10 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் கோகுலன் 30 ஓவர்கள் பந்து வீசி 72 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் டர்வின் 15 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிரேச் 4 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக்களையும், சிறிவண்ணன் 10 ஓவர்கள் 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 112 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 540 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வதூசனன் 123 ஓட்டங்களையும் கோகுலன் 82 ஓட்டங்களையும், அலன்டியோன் 63 ஓட்டங்களையும், யூலியஸ் கனிஸ்டன் 64 ஓட்டங்களையும் டார்வின் 61 ஓட்டங்களையும் நிசாந்தரூபன் 34 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். உதிரிகளாக 51 ஓட்டங்கள் பெறப்பட்டன.



பந்து வீச்சில் மகாஜனாக் கல்லூரி அணி சார்பாக பிரியராஜ் 14.5 ஓவர் கள் பந்து வீசி 61 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும், மதுசன் 28 ஓவர்கள் பந்து வீசி 130 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கஜேந்திரன் 21 ஓவர்கள் பந்து வீசி 94 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் திலக்சன் 16 ஓவர்கள் பந்து வீசி 56 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. போட்டி விதிகளின்படி முதலாவது இன்னிங்ஸில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. (த-23)

# வென்றது வவுனியா பரலோகமாதா

யாழ்ப்பாணம், பெப்.7

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வவுனியா பரலோகமாதா அணி இவ்வருட பிரதேச சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

அணிக்கு ஐந்து நபர்களைக் கொண்டு ஆறு பந்துப் பரிமாற்றங்களுக்கான இப்போட்டியில் இறுதியாட்டத்தில் பரலோகமாதா விளையாட்டுக் கழக அணியும், தேக்கவத்தை ஹசர் அலி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பரலோக மாதா அணி நிர்ணயிக்கப்பட்ட ஆறு பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் நான்கு இலக்குகளை



இழந்து 42 ஓட்டங்களை ப் பெற்றுக் கொண்டது.

43 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஹசர்அலி விளையாட்டுக் கழகம் 5,3 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டன.

இதனால் பலத்த போராட்டத்தின் மத்தியில் வவுனியா பரலோக மாதா அணி ஒரு விக்கெட்டால் வென்று சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் இப்பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 40 அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-400)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.7

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இரணைப்பாலை சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## பூப்பந்தாட்டப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில்

யாழ்ப்பாணம், பெப்.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இதில் சனிக்கிழமை - ஆண்களுக்கான போட்டியும், ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான போட்டியும் இடம் பெறவுள்ளது. (த-23)

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
Care
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 12,13 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - 021 - 4923416

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

**தவறிவிட்டது**

மட்டுவில்வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த இராஜேந்திரம் சதீஸ் ஆகிய எனது அடையாளஅட்டையும் (இல.921761600v) சாரதி அனுமதிப்பத்திரமும் சாவகச்சேரிக்கும், கனகம்புளியடிச் சந்திக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் அல்லது அபிஷா ரெக்ஸ் - சாவகச்சேரியில் ஒப்படைக்கவும்.

தொடர்பு : 077 2413747

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து தாயையும் குழந்தையையும் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு: 0777260974

**மினிதியேட்டர் செற் விற்பனைக்கு**

SONY புறஜெக்டர் 10x10 அடி
அம்ளிபயர் - 01, பொக்ஸ் - 02,
எஞ்சின் - 2000w, சப்ளேசர் - 01,
வயர், சுவிச்போட், லைற்,
திரைச்சீலை.
(25 மணிநேரம் மட்டும் பாவித்தது)

தொடர்பு: 0775548033

**12ஆவது பிறந்தநாள் நினைவலைகள்**



அன்பான
சந்துக் குட்டி

பிறந்தநாள் முதல் வளர்ந்த நாள் வரை எங்கள் மனதில் நீ தனி இடம்பிடித்தாய். உன் விருப்பம்தான் எங்கள் விருப்பம் என்று நடந்தோம். உனது அழகான வதனத்தில் நீ பூத்த புன்னகை எம்மனதில் என்றும் பூத்தவண்ணம் இருக்கும். உனது அன்பான வார்த்தைகளை எங்கள் உயிர் உள்ள வரை நினைத்து நினைத்து ஏங்கும் அன்புள்ளங்கள்- அன்பு மாமா, அத்தை, கேதா அண்ணை, மதுரா மச்சி, நவீன்-ரஜீவன் அத்தான் [U.K.] தீபன் அண்ணை, மயூமச்சி, லக்ஷன்குட்டி.

மயூரபதி,
கட்டப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

மாமா-பாஸ்கரன்.

(14140) (6,7,10)

**ஸ்தோத்திர ஆராதனை**

அன்னை மடியில்
16 - 01 - 1935



ஆண்டவர் மடியில்
08 - 01 - 2012

அமரர் வன்னித்தம்பி வைரவநாதன்
(டேவிட்)

கடந்த 08.01.2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த அன்னாரின் ஸ்தோத்திர ஆராதனை இன்று (07.02.2012) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் ஜீவ ஒளிமிஷன் திருச்சபைக்கு அருகான இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்த ஆராதனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜீவஒளி மிஷன்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.

(14171) (6,7,10)

புகழினி ராஜ்குமார்
(மகள்-கனடா),
Rev.N. யோகவா சிவகுமார்
குடும்பத்தினர்
(ஜீவ ஒளி மிஷன், சுன்னாகம்)

JAFFNA COLLEGE
Inter-House Athletic Meet 2012
Chief Guests:
Mr. Sivaguru Pathmanathan
Regional Manager, People's Bank, Jaffna Region
&
Mrs. Kamalawathy Pathmanathan

Venue: Bicknell Grounds
Date :Wednesday 8th February, 2012
Time: 2.00pm


You and your friends are cordially invited.

Jaffna College
Vaddukoddai.

Principal


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இங்கிலாந்துக்கு வெள்ளையடிப்பு






இங்கிலாந்துடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியையும் பாகிஸ்தான் 71 ஓட்டங்களால் வென்றெடுத்தது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 3:0 என்ற ரீதியில் இங்கிலாந்துக்கு பாகிஸ்தான் வெள்ளையடித்தது.

டுபாயில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே பந்துவீச்சாளர்களின் கையே ஓங்கியிருந்தது. போட்டியின் முதல் நாள் ஆட்டத்திலேயே 16 இலக்குகள் வீழ்த்தப்பட்டிருந்தன. தனது முதல் இன்னிங்ஸுக்காக விளையாடிய பாகிஸ்தான் அணி 99 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இங்கிலாந்து அணியின் ஸ்ருவர்ட் புரோட், ஜேம்ஸ் அன்டர்ஸன், பனேசர் கூட்டணி வைத்துத் தாக்கியதில் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் நிலைகுலைந்து போனார்கள். அந்த அணி சார்பில் அஸாட் சாகிப் மட்டும் ஓரளவுக்கு நிலைத்து நின்று 45 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் மைதானத்துக்குள் வருவதும் போவதுமாக அணி வகுப்பு மரியாதை செய்துகொண்டிருந்தனர். ஸ்ருவர்ட் புரோட் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து வீரர்களை பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் பழிவாங்கத் தொடங்கினர். ஒரு பக்கம் அந்த அணியின் தலைவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான ஸ்ட்ரோஸ் நிலைத்து நிற்க மறுமுனையில் இலக்குகள் சரிந்துகொண்டே சென்றன. ஸ்ட்ரோஸ் அரைச்சதம் அடித்து 56 ஓட்டங்களுடன் 9 ஆவது இலக்காக வீழ்ந்தார். அதன் பின்னர் 141 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான தௌபிக் உமர், மொஹமட் ஹபீஸ் இருவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மீண்டும் பாகிஸ்தானின் கதி அதோகதிதான் என்ற நிலை ஏற்பட்டது. எனினும் அதன்பின்னர் அனுபவ வீரர் யுனிஸ்கானும் இளைய வீரர் அஸார் அலியும் ஆட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். இங்கிலாந்து வீரர்கள் எப்படித்தான் பந்து போட்டாலும் இந்த இணையைப் பிரிக்க முடியவில்லை. இவர்கள் இருவரும் 216 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். யுனிஸ்கான் 127 ஓட்டங்களுடன் புரோட்டின் பந்தில் வீழ்ந்தார். அதன் பின்னர் வந்தவர்கள் வழமைபோலவே தங்கள் முகத்தைக் காட்டிவிட்டு ஓய்வறைக்குச் செல்லத் தொடங்கினார்கள். மறுமுனையில் போராடிய அஸார் அலி 157 ஓட்டங்களைப் பெற்று சுவானின் பந்துவீச்சில் குக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 365 ஓட்டங்களுடன் பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுற்றது.

324 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானத்தோடு ஆடினர். மூன்றாவது நாள் ஆட்ட நிறைவின்போது இலக்கு எதனையும் இழக்காது 36 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றிருந்தது.

நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடைபெற்றது. நேற்றும் தடுப்பாட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் ஈடுபட முயன்றனர். இலக்குகளைக் காப்பாற்றும் அவர்களது முயற்சிக்கு பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் இடங்கொடுக்கவில்லை. ஸ்ட்ரோஸ் (26), ரொட் (18), பீற்றர்ஸன் (18), பில் (10), மோர்கன் (31) என்று அணியின் முக்கிய தூண்கள் வீழ்த்தப்பட்டன. இலக்கினை நீண்ட நேரம் காப்பாற்றி வைத்திருந்த அலஸ்ரர் குக் அரைச் சதம் அடிக்கும் வாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டு 49 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின்னரும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் இலக்குவேட்டை தொடர்ந்தது. இங்கிலாந்தின் இலக்குக் காப்பாளர் மத்தியூ பிரையர் மட்டும் ஓரளவுக்குத் தாக்குப் பிடித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களைப் பெற்றார். கடைசியில் 252 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் ஆட்டம் அடங்கியது. இதன் மூலம் 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றியீட்டி, 3:0 என்ற ரீதியில் தொடரை முழுமையாகக் கைப்பற்றி இங்கிலாந்துக்கு வெள்ளையடித்தது.

சதமடித்துக் கலக்கிய அஸார் அலி ஆட்டநாயகனாகவும் தொடரில் ஆரம்பம் முதலே தன் சுழலால் இங்கிலாந்து வீரர்களைச் சாய்ந்த சயிட் அஜ்மல் தொடர் நாயகனாகவும் தெரிவானார்கள்.





# நிக்கோல் அதிரடிச் சதம் சிம்பாப்வே சரணாகதி



நிக்கோலின் அதிரடிச் சதத்தின் உதவியால் சிம்பாப்வேயை 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது நியூஸிலாந்து.

நியூஸிலாந்துக்கும் சிம்பாப்வேக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நியூஸிலாந்தில் நடைபெற்று வருகின்றது.

முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து 1:0 என்ற ரீதியில் தொடரில் முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் ஹொப்கம் ஓவல் மைதானத்தில் நேற்று இரண்டாவது போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

நியூஸிலாந்து சார்பில் நிக்கோல்-குப்தில் ஆரம்ப ஜோடி அமர்க்களமான தொடக்கத்தைக் கொடுத்தது. இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 77 ஓட்டங்களைப் பெற்று குப்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ஓரம் வானவேடிக்கை காட்டினார். 28 பந்துகளில் 59 ஓட்டங்களைக் குவித்தார் அவர். இதில் 4 சிக்ஸர்களும் அடங்கும் தொடர்ந்து லதமும் தன் பங்குக்கு வெளுத்துக் கட்டினார். இவர் 28 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்து வெளியேறினார். ஆரம்ப வீரராகக் களமிறங்கிய நிக்கோல் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 146 ஓட்டங்களைக் குவித்தார். 50 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து 372 ஓட்டங்களைக் குவித்தது. சிம்பாப்வே சார்பில் உட் சேயா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்.

எட்டமுடியாத இமாலய இலக்கைத் துரத்தத் தொடங்கிய சிம்பாப்வே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை வேகமாக [illegible] விட்டு நியூஸிலாந்து வீரர்கள் வெளியேற்றினர்.

அதன்பின்னர் சிம்பாப்வே அணியின் இலக்குக் காப்பாளர் தைபுவும், சிக்கும்புறாவும் அணியைக் காப்பாற்றப் போராடினர். அவர்கள் இருவரும் முறையே 50, 63 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினர். இறுதி நேரத்தில் மஸகட்ஸா வாணவேடிக்கை காட்டி, இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றபோதும் சிம்பாப்வேயின் தோல்வியைத் தடுக்க முடியவில்லை. இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சிம்பாப்வே அணி 8 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. நியூஸிலாந்து அணியின் ஜேக்கப் ஓரம் மூன்று இலக்குகளைச் சரித்தார்.

146 ஓட்டங்களைக் குவித்ததுடன் ஒரு இலக்கினையும் கைப்பற்றி நியூஸிலாந்தின் வெற்றிக்கு அடித்தளமிட்ட நிக்கோல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 2:0 என்ற ரீதியில் தொடரையும் நியூஸிலாந்து கைப்பற்றியுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச தின மஞ்சத் திருவிழா



**இணுவில் கந்தசுவாமி கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை 07.02.2012 மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.**

காலை பூசையைத் தொடர்ந்து 10.30 மணிக்கு 1008 சங்குகளால் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் பூசை இடம்பெறும்.
மாலை 6மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 7 மணிக்கு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதிவலம் வரும் காட்சி, விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

முருகன் அடியாளர்கள் அனைவரும் உலக பெருமஞ்ச வடம் இழுக்க வாரீர். (14141)(2-6-7)

**அனுசரணையாளர்:**

**கஜசங்கவி பிறிண்டேர்ஸ்**
இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்ட பூப்புனித, திருமண அழைப்பிதழ், குங்கும சிமிழ்கள் ஆகியவற்றை மலிவாகப் பெற்றிட
237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**ஆனந்தா**
கட்டடப் பல்பொருள் நிலையம்
ஓடு, செங்கல், கூரைத்தகடு, பெயின்ற் வகை, சிமெந்து, மணல் மலிவாகப் பெற்றிட
237, கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**குமரன்**
கட்டடப் பல்பொருள் விற்பனையாளர்
கல், மணல், சீமெந்து, கம்பி ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
கந்தசுவாமி கோயிலடி, இணுவில்.

## மெய்வன்மைப் போட்டிகள்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

***

குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் மு. கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப் போட்டிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-8)

***

இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் கலந்துகொள்வார்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.7

டேவிற் தம்பிராஜா உதைபாந் தாட்ட மத்தியஸ்தம் உதைபந்தாட்ட பயிற்றுநர் சேவையில் 50ஆவது ஆண்டு நிறைவு செய்ததை முன்னிட்டு கௌரவிப்பு நிகழ்வும், நூல் வெளியீடும் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.மரியதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் றோயல் விமலேந்திரனும் கௌரவ விருந்தினராக யூனியன் அஷ்யூரன்ஸ் அதிகாரி மதிவதனனும் கலந்துகொள்வர். (த-23)

THE HALO TRUST

## சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்துக்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் **AD** ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்குச் சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு,**
**கிளி நொச்சி,**

அனைத்து விண்ணப்பங்களும் 13 மாசி 2012 திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். (11023) (6,7,10)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**அழகம்மா கந்தசாமி**
(மேரி போல் - முன்னாள் ஆசிரியர்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.)



மண்ணில் *01★ 04 ★ 1941* விண்ணில் *07★ 02 ★ 2005*

பட்டங்கள் இருந்தென்ன
பதவிகள் இருந்தென்ன
அம்மா என்று அழைக்க
யாரும் இல்லை இப் பூவுலகில்

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தம்பசிட்டி, பருத்தித்துறை. (11694)(2-6-7)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை ருத்திரசீலன்

*(முன்னாள் ஐங்கரன்,ஐயா ஸ்ரோஸ் உரிமையாளர், 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11)*



கரம்பொன் கிழக்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இல.43/7, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ருத்திரசீலன் நேற்றுமுன்தினம் (05.02.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பகவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், நவரட்ண தேவியின் (மணி) அன்புக் கணவரும், உதயகுமார் (கனடா), சதீஸ் குமார் (ஆஸ்திரேலியா), செல்வகுமார் (ஆஸ்திரேலியா, பழையமாணவர், கொ/விவேகானந்தா கல்லூரி), ரவீனா (ஆஸ்திரேலியா), நவநீதா (பழைய மாணவி கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்), கொ/தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலராகினி, ஜகதீஸ்வரி, நிதர்சினி, ஜனார்த்தன் ஆகியோரின் அன்பு மாமனும், ஜஸ்விகா, ஹரிஷ், ரேஷ்னி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சத்தியசீலன், குமரகுருபரன் மற்றும் கன்னிகா பரமேஸ்வரி, தனலட்சுமி, குகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் திலகமணி, காலஞ்சென்றவர்களான ராஜகோபால்,நடேஸ்வரன் மற்றும் பிருந்தாதேவி, தேவராஜா, வரதராஜா, மோகனதாஸன், சுஜாதாதேவி, ஜெகதாசன் ஆகியோரின் மைத்துனரும், வாசுகி, தேவி, யுஜிதா, சுரேஸ்காந்தன், பிரியதர் சனா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்திலும், 09-02-2012 வியாழக்கிழமை காலை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையிலும் வைக்கப்பட்டு, ந.ப.12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43/7, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு-13. (C\8667) (6,7,10)
தகவல்:
குடும்பத்தினர்.

### கார் விற்பனைக்கு/வாடகைக்கு

Nishan பல்சர் 300-XXXX தொடர் இலக்க வெள்ளை நிறமுடைய கார் விற்பனைக்கு. அல்லது வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 2673858 (13887)(6-7-8)

### தவறிவிட்டது

சிவகுரு சற்குணேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ. (இல.690801418V), சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை மற்றும் A.T.M. அட்டைகள் என்பனவும் சசிலினி சற்குணேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ. (இல.697472711V) என்பனவும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0770784415
சன்மானம் வழங்கப்படும்.

### கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**
எமது சங்கத்தின் நீண்டகால அங்கத்தவரும் ஈஸ்வரன் பேக்கரி உரிமையாளருமாகிய திருமதி நல்லையா திரவியம் அவர்களின் அன்புத்தாய்
**வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள். (சி/8835)(2-6-7)

### கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்,
பவானி விலாஸ்
உரிமையாளரும் ஆகிய
**சண்முகம் தனராசா**
அவர்களின் மறைவை கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**
இல.165, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ராதா குமாரநாயகம்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ராதா குமாரநாயகம் கடந்த (02.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ரத்தினம், செல்லம்மா தம்பதியரின் மூத்தமகளும், குமாரநாயகத்தின் (எக்கவுண்டன் ) அன்பு மனைவியும் கிருஷ்னி, சஞ்சி, தர்சிகா ஆகியோரின் அருமைத்தாயும் ரவீந்திரன், மகேந்திரன், ரஜனி ஆகி யோரின் அன்புச் சகோதரியும், விஜி,நிரஞ்சனா, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ராகுல், வைஸ்ணவி, அகல்ஜா ஆகியோரின் மாமியும் சரவணன், சரண்யா, சாரங்கன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின், பெரியம்மா வும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2012) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை,
வடக்கு. (14129)(6-7-8)
தகவல்
திருமதி S. சந்திராதேவி

### ஆறுப்பிள்ளை இலங்கைராசா



Dr.சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த ஆறுப்பிள்ளை இலங்கைராசா நேற்று (06.02.2012) திங்கட்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் ரகுராஜ்(லண்டன்), காலஞ்சென்ற ரஜனி மற்றும் ரவிறாஜ் (லண்டன்), தர்ஷினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,குந்தவை (லண்டன்),பிரிய தாட்ஷாயினி(லண்டன்),முகுந்தன்(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்,கனகம்மா, அன்னலட்சுமி, தியாகராசா, இராசமலர் மற்றும் சரஸ்வதியின் அன்புச் சகோதரனும் திபித்தா, திபிக்ஷன்,ஜகன்ஜா,கரிகரன்,சபரி,யருஷன், சிரோஜன், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம் (13885)(11-6-7)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர்பகிர்வு



எமது பாடசாலை முதல்வர்
சி.திரிகரன் அவர்களின் அன்பு
மாமனார்
சின்னத்தம்பி நாகேந்திரம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்,
ஊரெழு.
ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நாகேந்திரம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது நீர்வேலியில் வசித்தவருமான சின்னத்தம்பி நாகேந்திரம் நேற்று திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லர் - மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் சுகந்தினியின் (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், திரிகரனின் (அதிபர், யா/ஊரெழு கணேச வித்தியாலயம்) அன்பு மாமனும், சௌமியா, ஆரூரன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற மங்களநாயகி மற்றும் தெய்வேந்திரம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னையா, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, இராசம்மா மற்றும் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
நீர்வேலி வடக்கு.

தகவல்:
சி. திரிகரன்
(அதிபர் - யா/ஊரெழு கணேச வித்தியாலயம்)

### நல்லநாதன் புஸ்பமலர்



வங்கி வீதி, ஆவரங்கால் மேற்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லநாதன் புஸ்பமலர் நேற்று (06.02.2012) அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் நாகமுத்து - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லநாதனின் அன்புத் துணைவியாரும், கஜேந்தினி, சுமலதா, நேசப்பிரபா, மதுசாளினி ஆகியோரின் பாசமிகு தாயும், மகேஸ்வரன் (டென்மார்க்), பரமேஸ்வரன், இலங்கேஸ்வரன், சாந்தநிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுயாத்தா, கிருஷா, இராஜேந்திரன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2012) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் இந்துசிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.
(14186)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவநேசம் செல்வநாயகம் (பபா அக்கா)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவநேசம் செல்வநாயகம் கடந்த (02.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்லப்பா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவகுருநாதன், சிவபாதம், சிவசோதி, சிவபக்தன், மற்றும் Dr. சிவதாஸன், Dr. சிவரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. மகேஸ்வரன், மைதிலி, யோகேஸ்வரன், மஞ்சுளா, மயூரதி ஆகியோரின் அன்புத் தாயும், வாசுகி, யோகநாதன், கமலாம்பிகை, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், மர்த்தனி, ஐதுகுலன், சொரூபன், பிரியதர்ஷனி, கௌசல்யா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2012) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
தகவல்:
குடும்பத்தினர்.

## 2013இல் இலங்கை வருகிறார் மகாராணி

கொழும்பு, பெப்.7

பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணி 2013 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரியவருகிறது.

2013இல் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டில் பங்குபற்றுவதற்காகவே அவர் இலங்கை வருகிறார்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு தற்போதிலிருந்தே செய்வதற்கு ஆரம்பித்துள்ளது என அறியமுடிகின்றது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு கடந்த முறை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. இம்மாநாட்டை பிரிட்டிஷ் மகாராணி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம், பெப். 7

தலையாளி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய ''சிவஞான மண்டபம்'' திறப்பு விழாவும் ஆலய உள் வீதி மண்டப அடிக்கல் நாட்டும் வைபவமும் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்தியகலாநிதி டாக்டர் சி.யமுனானந்தா பிரதம விருந்தினராகவும் நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


### தேவை

★ களஞ்சியக் காப்பாளர்
★ விற்பனையாளர்
(அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள்)
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்
நேரில் வரவும்
மங்களா காட்சியறை
536, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு யாழ்ப்பாணத்திற்குள் தனி வீடு or அனெக்ஸ் வாடகைக்கு தேவை. T.P:-0778222522

### வீட்டுக்கு பெண் உதவியாளர் தேவை

நல்லூரில் உள்ள பெற்றோர் வேலைக்குப் போகும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைக்கும் சிறு பிள்ளையைப் பராமரிப்பதுக்கும் பெண் உதவியாளர் தேவை.
(வீட்டில் தங்கியிருப்பவர் விரும்பத்தக்கது)
தொடர்பு. 0773112692.


## மரண அறிவித்தல்

### ஞானசர்மா சியாமளா

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசர்மா சியாமளா நேற்று (06.02.2012) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசர்மா- கனகாம்பிகையம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், அனுராதா, பத்மாவதி ஆகியோரின் சகோதரியும், சுந்தரராஜசர்மாவின் (பாப்பா ஐயா) மைத்துனியும், கல்பனா, ஜனனி, லகுதரசர்மா, ரேகா, பிரியா ஆகியோரின் சிறிய தாயும், நகுலேஸ்வரக்குருக்கள் (லண்டன்), சிவானந்தகுருக்கள் (சங்கானை), மதிசேகரசர்மா (கனடா) ஆகியோரின் மாமியும், அபிஷா, ராம்ராஜ்சர்மா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
தகவல்: பத்மாவதி
சுந்தரராஜ சர்மா.

## யாழ்ப்பாணம் - கோட்டை அருள்மிகு முனீஸ்வரர் தேவஸ்தான தைப்பூச திருவிழா - 2012

முனீஸ்வரர் மெய்யடியார்களே!

நிகழும் கர வருஷம் தை மாதம் செவ்வாய்க்கிழமை 24ஆம் நாள் இன்று [07.02.2012] காலை 11.00 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு விஷேட பூசை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை [அன்னதானம்] நடைபெறும்.

அனைத்து அடியார்களையும் கலந்துகொண்டு கோட்டை முனீஸ்வரரின் அருளைப் பெற்று ஏகுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரும்,
உத்தியோகத்தர்களும்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### செல்லர் சின்னத்துரை

மலர்வு : 07★04★1937
உதிர்வு: 08★01★2012

கடந்த [8.1.2012] அன்று சிவபதமடைந்த செல்லர் சின்னத்துரை அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று [07.02.2012] செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிராத்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளி கோயிலடி,
உடுவில், சுன்னாகம்.
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
- குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12 ★ 06 ★ 1974



உதிர்வு
22 ★ 01 ★ 2008

அமரர்
### செல்வராசா துளசிதாசன் (Tulsi Cabel TV உரிமையாளர்)

திதி: தை மாத பூரணை

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்''

எம் நல்வாழ்வின் நாயகனே
பாசத்தின் திருவுருவே
பண்பின் பிறப்பிடமே
எம் இனிய அண்ணாவே
எத்தனை எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பீர்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(12760) (2-6-7)

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் நரேந்திரன் (மில் கனகு)



வெள்ளுருவை அல்வாய் கிழக்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும், தெருமூடி மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நரேந்திரன் (06.02.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மா தம்பதியரின் மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரி (பிரான்ஸ்), ரவி குலதிலகன் (இத்தாலி), வேணுதாஸ் (லண்டன்), சீத்தா (பிரான்ஸ்), சிசித்தா, சுரேந்திரன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிதரன் (பிரான்ஸ்), சர்மிளா (இத்தாலி), குமார் (பிரான்ஸ்), நியநிதி ஆகியோரின் மாமனும், பகிர்ஸ், கிரிஸ் (பிரான்ஸ்), அவிஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமநாதன், கோபாலகிருஷ்ணன், சபாரத்தினம், மனோன்மணி மற்றும் கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.02.2012) நேற்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியிடம் ஒரு போதும் மன்னிப்புக் கோரமாட்டேன்

## அனோமா பொன்சேகா திட்டவட்டம்

கொழும்பு,பெப் 7

தனது கணவரான சரத் பொன்சேகாவை விடுவித்துக் கொள்ள ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரத் தாம் தயாரில்லை என அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரும் அளவிற்கு அவர் எவ்வித தவறும் செய்யவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அனோமா பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகாவை விடுவிக்க ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனாதிபதியுடன் தொடர்ச்சியாகப் பேசி வருவதாகவும் பேச்சுக்களில் இணக்கப்படக்கூடிய விடயங்கள் இருக்குமாயின் அது குறித்து ஆராயத் தயார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.ஆனால் ஒரு போதும் மன்னிப்புக் கோரத் தயாரில்லை என அவர் தெரிவித்தார்.ஜனாதிபதியுடனான சந்திப்பில் இரு பக்கம் இருந்தும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நிபந்தனைகள் என்னவென்பது குறித்து ஊடகங்களுக்கு இப்போது கருத்து வெளியிடுவது உகந்ததாக அமையாதென அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் கண்ணிகளை அகற்ற இன்னும் 10 ஆண்டுகள் தேவை

ஐ.நா கண்ணிவெடி அகற்றும் பிரிவு கூறுகிறது

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வடக்குப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்ற இன்னும் 10 ஆண்டுகள் எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அனைத்துக் கண்ணிவெடிகளையும் அகற்ற 10 வருடங்கள் செல்லும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் மிகவும் கடினமானது என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வடக்கில் 2011ஆம் ஆண்டு 126 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளதாகத் தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2010 ஜூலை மாதத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2011 டிசம்பர் 31ஆம் திகதி வரை மன்னாரில் 33.8 சதுர கிலோ மீற்றர், முல்லைத்தீவில் 27.7 சதுர கிலோ மீற்றர், கிளிநொச்சியில் 23 சதுர கிலோ மீற்றர், வவுனியாவில் 15 சதுர கிலோ மீற்றர் மற்றும் யாழ்ப்பாணத்தில் 5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எஞ்சியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி பொலனறுவை, அநுராதபுரம் மாவட்டங்களில் எல்லைப் பகுதிகளில் சில இடங்களிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எஞ்சியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# முல்லைத்தீவில் தேர்தலை விரைவாக நடத்துங்கள்

»1

குறித்த பகுதிகளில் போதியளவான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகக் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். தேர்தல் நடத்துவது குறித்து அதில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள், குழுக்களிடம் தேர்தல்கள் செயலகம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ளவென அப்பகுதியில் இருப்பவர்களின் வாக்குரிமையை பாதுகாக்க தேர்தல்கள் செயலகம் முன்வர வேண்டும் என கீர்த்தி தென்னகோன் குறிப்பிட்டுள்ளார். (த)

# இத்தாலியில் இலங்கையர் மரணம்

இத்தாலியில் கடும் குளிர் காரணமாக 37 வயதான இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டுஸ்கனி எனும் நகரிலுள்ள குடிசையொன்றில் இவர் இறந்த நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பாவில் கடந்த ஒருவார காலமாக வீசும் கடும் குளிர் காரணமாக சுமார் 300 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் முடிவில் தளர்வில்லை; சர்வதேச அழுத்தம் ஏதும் எமக்கில்லை

»1

கக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தியாவோ, அமெரிக்காவோ அல்லது வேறெந்த நாடுகளுமோ எமக்கு இது விடயத்தில் அழுத்தங்களை வழங்கியதில்லை. அப்படி வழங்கவேண்டிய தேவையும் எழவில்லை. நாம் எமது தீர்மானத்தில் உறுதியாக இருக்கின்றோம். இதில் எந்தத் தயவுப் போக்கிற்கும் இடமில்லை என்பதால் எமக்கு அழுத்தங்கள் உள்ளதாகக் கூறுபவற்றை நிராகரிக்கின்றேன்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா கொழும்பு வந்திருந்த வேளையில் எம்முடன் நடத்திய பேச்சின் போது தெரிவுக்குழு பற்றி ஒரு வார்த்தைகூட நாம் பேசவில்லை. இதனை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். எமது கட்சியின் செயற்பாடுகள் சுதந்திரமானவை. இதில் வெளியாரின் தலையீடு அல்லது அழுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை - என்றார் சம்பந்தன். (ஒ-சி)

# நிக்கொட், செஞ்சிலுவை அதிகாரிகள் ஜனாதிபதியைப் புறக்கணித்தனர்

»1

ளுக்கு முன்னர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன. இதற்கான நினைவுச் சின்னம் ஒன்றும் அந்த வைத்தியசாலை கட்டடத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

இதே போன்று வெளிநோயாளர் பிரிவும் நிக்கொட் நிதியில் கட்டப்பட்டிருந்தது. இந்தக் கட்டடம் மூன்று வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த கட்டடம் நிக்கொட் நிதியில் கட்டப்பட்டிருந்தது என்பதை குறிக்கும் வகையில் நினைவுக் கல் வைக்கப்பட்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை முன்னிட்டு மேற்படி நினைவுக் கற்கள் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் அகற்றப்பட்டு ஜனாதிபதி மஹிந்தவின் கட்அவுட் வைக்கப்பட்டது. அத்துடன் அது வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் நினைவுக் கல்லில் பொறிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் திறப்பு விழா நிகழ்வுக்கு நிக்கொட் திட்டப் பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அயர்லாந்துச் செஞ்சிலுவை சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. விருந்தினர்களுக்கான வரிசையில் இரண்டாவது வரிசை அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மேற்படி மூன்று அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நேற்றைய நிகழ்வுக்கு வருகை தரவில்லை.

(த-5)

# இந்தியாவின் துணையுடன் அமெரிக்காவை முறியடிப்போம்

»1

கீழ் நிலைச் செயலாளர் மேரி ஒரேரோ உள்ளிட்ட மூவர் அடங்கிய குழுவினர் வரவுள்ளனர்.

இதற்கிடையில் இலங்கையின் 64ஆவது சுதந்திர தினம் கடந்த சனிக்கிழமை கொலம்பிய மாவட்ட பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் றொபேட் ஓ பிளேக் உட்பட அமெரிக்காவின் குறிப்பிடத்தக்க இராஜதந்திரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய றொபேட் ஓ பிளேக், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடிக்கல்லை நல்லிணக்க ஆணைக்குழு நட்டுவைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கைத் தீவு அமைதியுடனும் சமத்துவத்துடனும் மீண்டெளக் கூடிய தீர்மானகரமான வழிவகைகளை நல்லிணக்க ஆணைக்குழு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

''அந்த இலக்குகளை இலங்கை அடைவதற்கு அமெரிக்கா முழு ஆதரவையும் அளிக்கும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-10)

# கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவே முடியாது

»1

முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதென்பதை மறைமுகமாக யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

சாவகச்சேரி வைத்தியசாலையின் விடுதிக் கட்டத் தொகுதி மற்றும் வைத்தியர் விடுதி என்பன 150 மில்லியன் ரூபா செலவில் அயர்லாந்து, பின்லாந்து நாட்டு சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. அதனைத் திறந்து வைத்த பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மஹிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாண மக்களுக்கு விசேடமாக இவ்வாறான வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு ஓரளவுக்கு உண்டு. எனவே சுகாதாரத்துறை மாத்திரம் அல்லாது கல்வித் துறை, நீர்ப்பாசனம், மின்சாரம் உள்ளிட்ட துறைகளிலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று செயற்படுகின்றோம். இதன் மூலமாக இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவருக்கும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் எங்களின் எதிர்பார்ப்பு. நாங்கள் இவ்வாறான வசதிகளை வழங்கும் பொழுது அது வடக்கா? தெற்கா? என்று பேதம் பார்ப்பதில்லை.

ஒரு தாய் பிள்ளைகளாக இந்த நாட்டு மக்கள் அனைவரும் வாழவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். ஒருமுறை என்னைக் கௌரவிக்க சிலர் வந்தார்கள். அவர்களிடம் நான், '' நீங்கள் எனக்கு வழங்கக் கூடிய கௌரவம் என்னவென்றால் இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் ஒற்றுமையாக வாழவைக்க நடவடிக்கை எடுப்பதுதான்''- என்று சொன்னேன்.

இந்த எண்ணம் அரசியல் தலைவர்களுக்கு மாத்திரமல்ல, இனப்பிரச்சினையைத்தீர்ப்பதில் பொறுப்பாக செயற்படக்கூடிய அனைவருக்கும் அவசியமாகின்றது. எனவே இனப் பிரச்சினை ஜனாதிபதியால் மட்டும் தீர்க்கப்பட வேண்டும் என்றோ அல்லது அரசியல்வாதிகளால் தான் தீர்க்கப்பட வேண்டும் என்றோ பிரித்துப் பார்க்க முடியாது. அனைவரும் சேர்ந்து தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையே இது.

ஒரு சந்தர்ப்பத்தில் நான் எங்களுடைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் (அப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாரோ தெரியாது) ''திம்பு பேச்சு வார்த்தையின் போது ஏன் யாராலும் நிறைவேற்றி வைக்கவே முடியாத கோரிக்கைகளை முன்வைத்தீர்கள்?'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''யாரும் பிரச்சினையைத் தீர்க்கக் கூடாது என்பதற்காகத் தான் நாங்கள் அத்தகைய கோரிக்கைகளை முன்வைத்தோம்'' என்றார். எனவே உண்மையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற தேவை அவர்களுக்கு இருக்கவில்லை.

எல்லாத் தமிழ் அமைப்புகளும் ஒன்றாகச் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்திய போது கூட இப்படித்தான் நடந்து கொண்டார்கள். அன்று மாத்திரமல்ல இன்றும் அப்படித்தான். செய்ய முடியாத பல விடயங்களைத் தான் அவர்கள் முன்வைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படியிருந்தால்தான் அவர்கள் தொடர்ந்து ஆசியாவில் இருந்துகொண்டேயிருக்க முடியும். எனவே உண்மையிலேயே இன்றுகூட முக்கியமாக இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான வேண்டுகோள்களை முன்வைக்கும் பொழுது, அவர்கள் செய்ய முடியாதவற்றைத் தான் முன்வைக்கின்றார்கள். அவர்களுக்குத் தெரியும் பிரச்சினைகள் தீர்ந்தால் அவர்களுக்கு பேசுவதற்கு வேறெந்த விடயங்களும் இருக்கப் போவதில்லை.

எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும், இந்தப் பிரச்சினைகளுக்கு வைக்கக்கூடிய, நாட்டில் பிரிவினைவாதத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தாத வகையில் தீர்வுகாண வேண்டும். இந்த நாட்டு மக்களின் கருத்தொருமைப்பாட்டை பெற்றுக் கொள்ளும் வகையிலான கோரிக்கைகளை இந்த பிரச்சினைகளுக்கு தீர்வாக முன்வைக்க வேண்டும்.

நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அரசுடன் இருப்பவர்களும், பல்கலைக்கழக துணைவேந்தர்களும், வைத்தியர்களும் முக்கியமாக ஊடகத்துறையில் இருப்பவர்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு ஒற்றுமை தேவைப்படுகின்றது. இந்த நாடு சிறிய நாடாக இருந்தாலும், சிறப்பான நாடாக இருப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். எங்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளக் கூடிய பல பிரச்சினைகள் இருக்கின்றன- என்றார்.

அதன் பின்னர் சிறிது நேரம் ஜனாதிபதி தமிழில் உரையாற்றினார். அதில் தெரிவித்தவை வருமாறு:

நீங்கள் பட்ட கஷ்டம் எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் இப்போது புதிய வாழ்க்கையை ஆரம்பித்துள்ளீர்கள். புதிய நோக்கம், புதிய எதிர்காலம் பற்றி நீங்களும் சந்தோசப்படுகின்றீர்கள், நாங்களும் சந்தோசப்படுகின்றோம். இந்த நாட்டின் அபிவிருத்தியில் அதிகளவான பணம் வடமாகாணத்திற்கே வழங்கப்படுகின்றது. வடக்கின் வசந்தம் மூலம் உங்கள் பகுதி மிகவேகமாக முன்னேறி வருகின்றது. 30 வருடகாலம் பின்நோக்கி சென்ற மாகாணம் தற்போது முன்னேறி வருகின்றது. நாங்கள் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை செய்துள்ளோம், இதனை யாரும் மறுக்க முடியாது. இன்னும் சில வேலைப்பாடுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆரோக்கியம் மிக மிக முக்கியம். நோயில்லாத வாழ்வு தான் மிகச் சிறந்த செல்வம். நீங்கள் எல்லோரும் நிம்மதியாக வாழ முடியும். வெளிநாடுகளில் வாழும் எமது புத்திஜீவிகள் இங்கு திரும்பி வரவேண்டும். இங்குள்ள மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

எல்லா நாளும் பழைய சம்பவங்களையே பேச வேண்டியதில்லை. பழையதைப் பேசுவதில் எதுவித அர்த்தமும் இல்லை. அதன் மூலம் குரோதமும், கோபமுமே உருவாகும்.

நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பம். இந்த நாடு எல்லோருக்கும் சொந்தமானது. நாங்கள் எல்லோரும் சகோதர, சகோதரிகள் என்பதை மறுக்க முடியாது - என்றார் மஹிந்த.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் உரையாற்றினர். அத்துடன் இங்கு வைத்து ஜனாதிபதியினால் குடும்ப நல தாதிய உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

(ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முகதாசனின் 19ஆவது நினைவு தின நிகழ்வு

பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடித் தோழர் நா.சண்முகதாசனின் 19ஆவது நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு, வெள்ளவத்தை தேசிய கலை இலக்கியப் பேரவை கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகளும், கலந்துரையாடல்களும் இடம் பெறவுள்ளன.

## யாழ். தாதியர் கல்லூரிக்கு 115 பேர் மட்டுமே பதிவு

### இதுவரை 46 பேர் சமுகம் தரவில்லை

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். தாதியர் கல்லூரியில் புதிதாக நியமனம் பெற்ற தாதிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் நேற்று ஆரம்பமாகின. 161 பேர் பயிற்சி பெறுவதற்கு தெரிவாகி நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் இதுவரை 115 பேரே கல்லூரியில் வந்து தம்மைப் பதிவு செய்துள்ளனர். இவ்வாறு யாழ். தாதியக் கல்லூரியில் அதிபர் செல்வி ரஜீகலாதேவி வல்லிபுரநாதன் கூறினார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

கல்லூரியில் பயில்வதற்கு நியமனம் வழங்கப்பட்டவர்கள் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் தம்மைப் பதிவு செய்து வருகின்றனர். இதுவரை 115 பேர் பதிவு செய்துள்ளனர். அமைச்சு விதிமுறையின்படி 5 வீதமான ஆண் தாதியர்களை ஒரு கல்லூரியில் வருடாந்தம் இணைக்க முடியும். இந்த முறை 13 ஆண் தாதிய மாணவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அவர்களில் இதுவரை 7 பேர் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

115 தாதிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கான பயிற்சி நெறி பற்றி விளக்கமளிக்கும் நிகழ்வு கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. ஒவ்வொரு மாணவரது பெற்றோரும் உறவினர்களும் கூட வந்திருந்தனர்.

இந்தப் பயிற்சி நெறி மூன்று வருடகாலத்தைக் கொண்டது. அது பற்றிய விவரமும், தாதியக் கல்லூரியில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிமுறைகள், பிணை ஒப்பந்தப்படிவங்கள் பற்றியும் மாணவர் இடைவிலகும் பட்சத்தில் அதற்குச் செலுத்த வேண்டிய பணத் தொகை பற்றிய உள்ளிட்ட பல விடயங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன.

இதுவரை யாழ். மாவட்டத்திலிருந்து 52 பேரும், கிளிநொச்சியில் இருந்து 7 பேரும், அம்பாறையில் இருந்து 105 பேரும் தம்மைப் பதிவு செய்துள்ளனர் என்றார்.

இது தவிர, நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்றும் கல்லூரிக்கு சமுகமளிக்க விரும்பாதவர்கள் இந்தப் பயிற்சி நெறியைத் தொடர விரும்பாதவர்கள் அது பற்றி கல்லூரிக்கு அல்லது கொழும்பு தலைமையகத்துக்கு அறிவிக்கும் படியும் கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பித்துரை சரஸ்வதி



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை சரஸ்வதி நேற்று (06.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பித்துரையின் (ஸ்தாபகர், நொதேன் மோட்டோர் வேக்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலநாதன், சற்குணநாதன் மற்றும் வைகுந்தநாதன், தயாழினி, கோகுலநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் மங்கையர்க்கரசி, குகனேஸ்வரி, ராதாமணி, சதாசிவம், வேல்விழி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ்.லேன்,
கோண்டாவில்,

தகவல்:
குடும்பத்தினர்.


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

## வீடு வாடகைக்கு தேவை

Hospital Road, Temple Road
பகுதிகள் மற்றும் யாழ்ப்பாண நகரை
அண்மித்து ஐந்து பேர் வசிக்க
கூடியதாக வீடு வாடகைக்கு தேவை
077 70 72 300

MyWay

## கோழிக்குஞ்சு விநியோகம்

Benads தரமான No. 1 புரொயிலர் கோழிக் குஞ்சுகள் 07.02.2012 முதல் விநியோகம் செய்யப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
கிருஷ்ணா பாம், 0772338084,
மானிப்பாய். 0776674874.

## கடைகள் வாடகைக்கு

61,63 கண்டி வீதி,கரடிப்போக்கு
கிளிநொச்சியில் அமையவுள்ள கடைகள்
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: முருகேசு சிவபாலன்
கல்வயல்,
சாவகச்சேரி.
தொ.பேசி 0770389584

## உடனடி வேலை வாய்ப்பு

01. அலுவலக உதவியாளர் (Peon - 02 வெற்றிடம்)
தகைமை : க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
வயது : 18 தொடக்கம் 25 இற்குள்

02. தொழில்நுட்பவியலாளர் (Technician 05 வெற்றிடம்)
தகைமை : Computer Hardware, Networking, Security Camara Intercom
★ 2 வருட அனுபவம் ★ வாகன சாரதி அனுமதிப்பத்திரம்

03. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (01 வெற்றிடம்)
தகைமை: சந்தைப்படுத்தல் துறையில் பட்டம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
★ சந்தைப்படுத்தல்துறையில் 5 வருட அனுபவம்
★ வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
★ ஆங்கிலம், சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

04. தொழில்நுட்ப உதவியாளர்
தகைமை: Computer Hardware அறிவு அவசியம்.
★ க.பொ.த. உயர்தரம் சித்தி
★ ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கவர்ச்சிகரமான சம்பளம் EPF. ETF அடங்கலாக

விண்ணப்பங்களை 14.02.2012 இற்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது E-mail மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**Nalin Information Technologies (Pvt) LTD.**
195/2, Palaly Road, Parameswara Junction, Jaffna.
Tel : 0777667974 / 75, 021 222 1121/1166/0838. E-mail: job@nit. lk

## ஆஸ்திரேலியா குடும்ப விசா

### திசைகாட்டியின் கிளை ஆஸ்திரேலியாவில் உதயம்



மெல்பேர்ண் நகரில் 04.02.2012 எமது கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைத்து அன்புள்ளங்களுக்கும் பெருமகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

இலங்கை நேரப்படி காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை எமது அலுவலகத்தோடு பின்வரும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.
தொ.பேசி.இல:- 006412779209



இயக்குநர் சபையின் தீர்மானத்தின் படி ஆஸ்திரேலியா குடும்பவிசா ஆலோசனையின் இறுதி நாள் இம்மாதம் 25 ஆம் திகதியாகும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016
கிளை:- 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
021 491 4527

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

### யாழ்ப்பாணத்தில்

திங்கள், புதன், வெள்ளி புதிய பிரிவு ஆரம்பம்

08.02.2012 (புதன்கிழமை)
பிரிவு 1 : காலை 9.00 - 10.00
பிரிவு 2 : மாலை 5.00 - 6.00

அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், மற்றும் வெளிநாடு செல்வோருக்கான மற்றுமோர் சந்தர்ப்பம்
பயிற்சிக்கான மொத்தக்கட்டணம் : ரூபா 3000 மட்டும்
புத்தகங்கள் மற்றும் CD இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## ROYAL BOMBAY SWEETS & SNACKS

212, Kasthuriyar Road, Jaffna



சுவைப்பிரியர்களே
உங்கள் அபிமானத்தை வென்ற
Royal Bombay Sweets & Snacks
மீண்டும் புதும் பொலிவுடன்.....
(இதுரகல் ஆரம்பம் (2012.02.07)

உங்கள் விசேட தேவைகளுக்கான சகல வகையான Bombay Sweets பிரியாணி வகைகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

மகிழ்ச்சிகரமான செய்தி
இன்றும் நாளையும் இரண்டு சூப் வாங்குபவர்களுக்கு ஒரு சூப் இலவசம். தொடர்பு - 0771751495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.